கத்தோலிக்க மாதாந்த சஞ்சிகை

# ஆசீர்வாதம்

ASIRVATHAM

September 2012

Rs.50/-

பருத்தித்துறை
புனித அந்தோனியார்
ஆலயம்

பிரான்சின்
மைக்கேல்
தேவாலயம்


இயேசுவின்
நாமத்தில் எதையும்
சாதிக்கலாம்



ஆரோக்கிய அன்னையின்
அருள்மிகு திருநாள்

வேண்டும் வரமருளும்
வேளாங்கண்ணி அன்னை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசீர்வாதம்



## இயேசு பிரான் காட்டிய செம்மை வழி!

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்த இயேசு பிரானின் பிறப்பானது, மனிதப்பிறவியின் வழியாக படைப்பு அனைத்துக்கும் மரியாதை செலுத்துகின்ற இறைவனின் அன்பு வெளிப்பாடாகும். மனித வாழ்வு எப்படி அமைய வேண்டும் என்பதற்கான இலக்கணத்தை வகுத்துத் தந்தவர் இயேசுபிரான். இந்த உண்மையை முன்னிலும் அழுத்தமாக உணரவேண்டிய கடமையிலும் கட்டாயத்திலும் இன்றைய கிறிஸ்தவச் சகோதரர்கள் உள்ளனர். இயேசுவின் பிறப்பின் மூலமாக எளிமை, துன்புறும் மானுடத்தோழமை, உடனிருப்பு போன்றவை அறியப்படல் வேண்டும். உலகியல் சார்ந்த பேராசைகள் பெருமளவில் தள்ளி வைக்கப் படுகின்ற மனப்பக்குவம் கிறிஸ்தவப் பெருமக்களிடம் வளர வேண்டும். இதன் மூலம் தான் வறுமை, சாதியப் பிணக்குகள் முதலியவைகளைக் களைந்திட முடியும். ஞானமும், பற்றற்ற வாழ்க்கையும் இயேசுவின் உடைமைகளாயிருந்தபடியினால் அவரது ஆன்மீக ஞானம் மக்களால் கவரப்பட்டது, மக்களின் நம்பிக்கை வாழ்வை ஆழப்படுத்துவதாகவும் அமைந்தது. இயேசு, தான் பெற்றிருந்த ஞானத்தை எளிமையான போதனைகளின் வழியாக மக்களுக்குக் கற்பித்தார், அவர் போதித்ததை வாழ்ந்தும் காட்டினார். ''கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றுபவரே என் சகோதரனும், சகோதரியும், தாயும் ஆவார் (மாற் 3:35) எனக்கூறி வழிபாட்டையே வாழ்வாக்கிக் காட்டினார். இத்தகைய இயேசுவின் ஞானமும் வளமான ஆன்மீகமும் கிறிஸ்தவ மக்களின் மத்தியில் ரவலாக் கப்பட வேண்டும். இவற்றை மனதில் நிறுத்தி வாழ்வும் வழிபாடும் ஒன்றிக்கும் புது வாழ்வுக்கான மன உறுதியை விசுவசிப்போர் வளர்த்துக் கொள்ள வேண்டும். இயேசுவை வெறும் வழிபாட்டுப் பொருளாகக் கருதாமல், அம்மீட்பரை ஞானம் நல்கும் வழிகாட்டியாக ஏற்றுக் கொண்டு அவர் காட்டிய செம்மை வழியில் நடந்து உண்மைக் கிறிஸ்தவராய் வாழ்வோமாக!'

- ஆசிரியர்

**Publisher :**
Express Newspapers (Ceylon) Limited
185, Grandpass Road, Colombo - 14. Srilanka
Tel: +94-117-322700 (30 Lines)
Fax: +94-112-439987 website: www.virakesari.lk



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எல்லாம் கடவுளின்... 10

வத்திக்கான் செய்திகள் 6

அருள் வழங்கும்... 12

சிறார்களின் நிலை 14

வெற்றி பெற்ற ஒல்சன் 16

கோபத்திற்கு மருந்து 44

சாத்தானின் சவால் 52

பிறவிக்குருடருக்கு ... 26

ராஜாதி ராஜாவின்... 30

ஏழு திருத்தொண்டர்களில்.. 66

தேவன் நியாயந்தீர்ப்பா 58

ஆரோக்கிய அன்னை... 56

புனித அந்தோனியார்.. 90




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கொழும்பில் ஆலய வருடாந்தத் திருவிழா கொடியேற்றத்துடன் 7ஆந் திகதி ஆரம்பம்!

**கொ**ழும்பில் கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத் திருவிழாவையடுத்து கோலாகல மாகக் கொண்டாடப்படுவது, ஸ்ரீ கதிரேசன் வீதியில் அமைந்துள்ள அன்னை வேளாங்கண்ணி ஆலய திருவிழாதான்.

பிரதி வியாழன்தோறும் அன்னையை நாடிவரும் அடியார்கள் ஏராளம். தன்னை நோக்கி வரும் அனைவரையும் இன, மத பேதமின்றி இருகரம் விரித்து அரவணைத்துக் காக்கும் தாய் தான் அன்னை வேளாங்கண்ணி. அவள் என்றுமே தன் அடியார்களைக் கைவிட்டதாக வரலாறே இல்லை.

ஆலயத்தில் நடைபெறும் அற்புதங்களுக்கோ குறைவே இருப்பதில்லை. டாக்டர்களால் குணமாக்க முடியாத எத்தனையோ நோயாளர்களைத் தமது அற்புதத் திருக்கரத்தால் நலம்பெறச் செய்யும் தெய்வத் தாய் வேளாங்கண்ணி அன்னை.

பூமாலையுடன் பாமாலையும் சூடி நாமும் அன்னையின் அருள்வரம் வேண்டிப் பிரார்த்திப்போம்.

அன்னையின் ஆலயத் திருவிழா எதிர்வரும் 7ஆந் திகதி, கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

அன்றைய தினம் காலை 6.00 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலிப் பூசையைத் தொடர்ந்து, ஆலய முன்றலில் கொடியேற்றம் இடம்பெறும். அன்று மாலை 6.15 மணிக்கு திருச்செபமாலை தியானத்துடன் நவநாள், அதனைத் தொடர்ந்து திருப்பலிப் பூசை ஒன்பது தினங்கள் இடம்பெறும்.


எதிர்வரும் 15ஆம் திகதி மாலை 7.00 மணிக்கு மாலை ஆராதனை இடம்பெறும். மறுநாள் 16ஆந் திகதி திருவிழா கொண்டாடப்படும்.

திருவிழா தினத்தன்று இடம்பெறும் திருப்பலிப் பூசைகள் பற்றிய விபரம்:

காலை 5.30, 7.30, நண்பகல் 12.00 மணி(ஆங்கிலம்), மாலை 4.00(சிங்களம்).

மாலை 5.00 மணிக்கு இடம்பெறும் திருப்பலியையடுத்து திருச்சுரூப பவனி ஆரம்பமாகும். பவனி முடிவில், ஆலய முன்றலில் திவ்விய நற்கருணை, அன்னையின் திருச்சுரூப ஆசீர்வாதங்களுடன் விழா நிறைவுறும்.

# வேண்டும் வரமருளும் வேளாங்கண்ணி அன்னை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வத்திக்கான் செய்திகள்

### பாலஸ்தீனியக் குழந்தைகளுக்கு பெத்லகேமில் மனநல உதவி மையம்

இராணுவ ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியிருக்கும் பாலஸ்தீனப் பகுதியில் வாழும் குழந்தைகளின் மனங்கள் பெருமளவு பாதிக்கப்பட்டிருந்தாலும், அக்குழந்தைகளுக்குத் தேவையான மனநல உதவிகள் கிடைப்பதில்லை என்று மனநல உதவியாளர் உர்சுலா முர்க்கர் கூறினார்.

பாலஸ்தீன நாட்டைச் சேர்ந்த கத்தோலிக்கப் பெண்மணி உர்சுலா முர்க்கர், ஜெர்மன் நாட்டின் நம்பிக்கையின் சிறகுகள் என்ற ஓர் அமைப்புடன் இணைந்து பாலஸ்தீனியக் குழந்தைகளுக்கு உதவும் வகையில் பெத்லகேமில் மனநல உதவி மையம் ஒன்றை நடத்தி வருகிறார்.

இராணுவ ஆக்கிரமிப்பின் விளைவுகளை ஒவ்வொரு நாளும் சந்தித்து வரும் பாலஸ்தீன குழந்தைகள் பல உள்மனக் காயங்களுடன் வாழ்ந்து வருகின்றனர் என்று கூறும் உர்சுலா முர்க்கர், மனநல உதவிகளைத் தேடுவது அம்மக்களிடையே ஒரு குறையாகக் கருதப்படுவதால், பெரும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலான குழந்தைகளுக்கு இவ்வுதவிகளைத் தருவ தற்குப் பெற்றோர் தயங்குகின்றனர் என்றும் கூறி னார்.

இந்தத் தவறான எண்ணங்களைத் தகர்த்து, பாலஸ்தீனியக் குழந்தைகள் நல்ல மனநலத்துடன் வளர்வதற்கு உதவிகள் செய்வதே தன் வாழ்வின் இலக்கு என்று உர்சுலா முர்க்கர், கத்தோலிக்கச் செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அளித்த பேட்டி ஒன் றில் கூறியுள்ளார். இராணுவ ஆக்கிரமிப்புக்கு உள் ளாகி இருக்கும் பாலஸ்தீனப் பகுதியில் 700,000 குழந்தைகளுக்கு மனநல உதவிகள் தேவைப்படு வதாக, பலஸ்தீன் ட்ரோமா சென்டர் என்ற மையத் தால் எடுக்கப்பட்ட ஓர் ஆய்வில் தெரிய வந்துள் ளது.

***********************

## தாழ்த்தப்பட்ட கிறிஸ்தவர்கள் டில்லியில் போராட்டம்

**அ**ரசின் சலுகைகளைப் பெறும் இந்து தலித் மக்களுடன் கிறிஸ்தவர்களையும் இந்திய அரசு இணைக்கும் என்ற நம்பிக்கை இன்னும் தங்களுக்கு உண்டு என்று இந்திய ஆயர் பேரவையின் தலித் உரிமைகள் பணிக்குழுவின் செயலர் அருட்தந்தை தேவ சகாயராஜ் கூறினார்.

தொடர்ந்து பெய்த மழையையும் பொருட்படுத் தாது, தலைநகர் டில்லியில் 3000 க்கும் அதிகமான கிறிஸ்தவர்களும், இஸ்லாமியரும் இப்புதனன்று மேற்கொண்ட ஒரு போராட்ட ஊர்வலத்தின்போது, செய்தியாளர்களிடம் பேசிய அருட்தந்தை சகாய ராஜ் இவ்வாறு கூறினார்.

தற்போது நடைபெற்றுவரும் மழைக்கால நாடா ளுமன்ற அமர்வின்போது தலித் கிறிஸ்தவர் களுக் கும் இஸ்லாமியருக்கும் அரசின் சலுகைகள் கிடைக் கும் வண்ணம் அரசின் சட்டம் இயற்றப்படும் என்ற நம்பிக்கை இருப்பதாகக் கூறினார் அருட்தந்தை சகாயராஜ். இதுவரைத் தாமதம் செய்து வந் துள்ள மத்திய அரசு, இனியும் தாமதிக்கும் வழிமுறை களைப் பின்பற்றினால், நாடு தழுவிய போராட்டங் களைத் தலித் மக்கள் மேற்கொள்ள வேண்டியிருக் கும் என்றும் அருட்தந்தை சகாயராஜ் எடுத்து ரைத்தார்.

***********************

## ஆடுகள் மீது அக்கறை கொண்ட மேய்ப்பர்களே திருஅவையின் ஆயர்கள்

*- திருப்பீடச் செயலர்*

**இ**யேசு நற்செய்தியில் கூறியிருப்பதுபோல், கூலி பெறுவதற்காக வேலை செய்யும் மேய்ப்பர் களாக இல்லாமல், ஆடுகள் மீது உண்மையான அக்கறை கொண்ட மேய்ப் பர்களாக திருஅவை யின் ஆயர்கள் பணியாற்ற வேண்டும் என்று திருப் பீடச் செயலர் கர்தினால் தர்ச்சிசியோ பெர்தோனே கூறினார்.



அண்மையில் கொண் டாடப்பட்ட வேர்செல்லி புனித யுஸிபியஸ் அவர் களின் திருநாளை யொட்டி, அப்பகுதியில் உள்ள இன்ட்றொட் என்ற பங்குக் கோவிலில் திருப் பலி யாற்றிய கர்தினால் பெர்தோனே தன் மறை யுரையில் இவ்வாறு கூறினார்.

வேர்செல்லியின் ஆயராக இருந்த புனித யுஸி பியஸ், தேவைகள் எங்கெங்கு எழுந்ததோ அங் கெல்லாம் சென்று நற்செய்தியைப் பரப்பினார் என்று கூறிய கர்தினால் பெர்தோனே, இந்தக் கடின மான பயணங்களில் புனிதர் காட்டிய பொறுமை யும், விடாமுயற்சியும் நமக்குப் பாடமாக அமை கின்றன என்றும் எடுத்துரைத்தார்.

கடவுளை மறந்துவரும் இன்றைய உலகில் மனிதர்கள் தங்களையே புரிந்துகொள்ளாமல் வாழ் வது ஆபத்து என்றும், இந்த ஆபத்தை நீக்க அவர் கள் மீண்டும் இறைவனைத் தேடிவருவதே சிறந்த வழி என்றும் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் கரித் தாஸ் இன் வெரிட்டேட் என்ற சுற்றுமடலில் கூறி யுள்ளதை கர்தினால் பெர்தோனே தன் மறையுரை யில் சுட்டிக் காட்டினார்.

எதிர்வரும் அக்டோபர் மாதம் திருத்தந்தை அவர்களால் தொடக்கிவைக்கப்படும் விசுவாச ஆண்டு, நமது இன்றையச் சூழலில் இறைவன் நமக்கு வகுத்துள்ள திட்டங்களைக் கண்டறிய மற் றொரு முக்கியத் தருணமாக அமையவேண்டும் என்று கர்தினால் பெர்தோனே கூறினார்.

***********************

## பன்னாட்டு மனிதாபிமான உதவிகள் சிரியாவுக்கு மிக அவசியம்


*- திருப்பீடத் தூதர்*

**சி**ரியாவில் நடைபெறும் வன்முறைகள் உடனடி யாக நிறுத்தப்பட வேண்டும் என்றும், அங்கு துன் புறும் மக்களுடன் தான் செபத்தில் ஒன்றித்திருப் பதாகவும் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட், மூவேளை செப உரையில் கூறியது பெரும் ஆறு தலைத் தந்துள்ளது என்று சிரியாவின் திருப்பீடத் தூதர் பேராயர் மரியோ ஸெனாரி கூறினார்.

சிரியாவில் நிலவி வரும் சூழல் மிகவும் கவ லைக்கிடமாக உள்ளது என்றும், பன்னாட்டுச் சமுதாயத்தின் மனிதாபிமான உதவிகள் தங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நாட்டுக்கு மிக, மிக அவசியமாக உள்ளது என்றும், பேராயர் ஸெனாரி கூறினார்.

அண்மையில் லண்டன் மாநகரில் ஆரம்பமான ஒலிம்பிக் விளையாட்டுக்கள் உலகளாவிய ஒன்றிப்பை எடுத்துக்காட்டும் ஓர் அடையாளமாக இருந்தாலும், அதற்கு நேர்மாறான ஒரு நிலையை சிரியாவில் வாழும் மக்கள் உணர்ந்து வருகின்றனர் என்று பேராயர் ஸெனாரி சுட்டிக்காட்டினார்.

எவ்விதச் சுழல்காற்றிலும் அணையாமல் ஏரியும் ஒலிம்பிக் சுடர் ஒற்றுமையை வலியுறுத்தி நிற்பது நம்பிக்கையைத் தருவதைப் போல், பல் வேறு முரண்பாடுகளால் சூழப்பட்டுள்ள சிரியா நாட்டு மக்களும் அமைதி கிடைக்கும் என்ற நம் பிக்கையைத் தளராமல் காக்கவேண்டும் என்று திருப்பீடத் தூதர் பேராயர் செனாரி வேண்டுகோள் விடுத்தார்.

**********************

## அக்டோபர் மாதம் துவங்கவிருக்கும் விசுவாச ஆண்டின் முக்கிய நிகழ்வுகள்

**வி**சுவாச ஆண்டில் நிகழவிருக்கும் முக்கிய நிகழ்வுகளின் பட்டியல் ஒன்றை திருப்பீடம் அண்மையில் வெளியிட்டுள்ளது.

இரண்டாம் வத்திக்கான் சங்க எழுச்சியின் 50ஆம் ஆண்டு நினைவாக, அக்டோபர் மாதம் 11ஆம் தேதி, வியாழனன்று, புனித பேதுரு பெசிலிக்கா பேராலய வளாகத்தில் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் அவர்களின் தலைமையில் நடைபெறும் ஒரு மாபெரும் கூட்டுத் திருப்பலியுடன் ஆரம்பமாகும் விசுவாச ஆண்டு, 2013ஆம் ஆண்டு நவம்பர் 24ஆம் தேதி நிறைவுபெறும்.

அக்டோபர் 7ஆம் தேதி முதல் 28ஆம் தேதி முடிய 'கிறிஸ்தவ விசுவாசத்தை எடுத்துரைக்க, நற்செய்தி அறிவிப்பில் புதிய வழிகள்' என்ற மையக்கருத்துடன் 13ஆவது ஆயர்கள் சிறப்பு மாமன்றம் வத்திகானில் நடைபெறும்.

இந்த மாமன்றத்தில் கலந்து கொள்ளும் பிரதிநிதிகளுடனும், இன்னும் உலகெங்கும் உள்ள கத்தோலிக்க ஆயர் பேரவைகளின் தலைவர்களுடனும் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட், அக்டோபர் மாதம் 11ஆம் தேதி இந்த மாபெரும் கூட்டுத் திருப்பலியை நிகழ்த்துவார்.

அக்டோபர் மாதம் 21ஆம் தேதி ஆறு மறைசாட்சிகளை புனிதர் நிலைக்குத் திருத்தந்தை உயர்த்துவதும், 2013ஆம் ஆண்டு ஜூலை 23ஆம் தேதி முதல் 28ஆம் தேதி முடிய பிரேசில் நாட்டின் ரியோ டி ஜெனீரோ நகரில் நடைபெறும் உலக இளையோர் நாள் நிகழ்ச்சிகளும் இவ்விசுவாச ஆண்டின் உச்ச கட்டங்களாக அமையும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

**********************



அன்பு வாசகர்களே! உங்கள் கதைகள், கட்டுரைகள் மற்றும் சபை நிகழ்ச்சிகளை எங்களுக்கு அனுப்புங்கள்.
**'ஆசீர்வாதம்'** பற்றிய தங்களின் எண்ணங்களையும் எங்களோடு பகிர்ந்துகொள்ளுங்கள்.
முகவரி:
**ஆசீர்வாதம்**
**12-1/1, செென். செபஸ்தியன் மாவத்தை, வத்தளை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புனிதரே வாழ்க!

என் அக்கா மகள் 14ஆவது சிறுமி. கடந்த நவம்பர் மாதம் வயிற்று வலியால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மருத்துவர்கள் பரிசோதித்ததில் சிறுநீரகங்கள் இரண்டுமே பழுதடைந்துள்ளது எனத் தெரியவந்தது. இனி சிறுமி பிழைப்பது அரிது என்ற நிலை மருத்துவர்களுக்குத் தோன்றியது.

அந்நிலையில் மருத்துவர்களால் முடிந்த அளவு சிகிச்சை அளித்த பிறகு கொழும்பில் உள்ள பிரபல தனியார் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கும் மருத்துவர்கள் சிறுமியை அனுமதித்தார்கள். ஆயினும் மருத்துவச் செலவுக்கு என்ன செய்வதென்று திகைத்திருந்தோம்.

பின்னர் எமது உறவினரின் அறிவுரைப்படி கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்துக்குச் சென்று மன்றாடினோம். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நாளிலிருந்து புனித அந்தோனியாரை நோக்கி மன்றாடினோம். 'புனிதரே, சிறுமி நல்ல உடல் நலம் பெற்றதும் உமக்குச் சாட்சியம் கூறுவோம்' என்று வாக்களித்துச் செபித்தோம். அவர் நிகழ்த்திய அற்புதத்தை இன்று நினைத்தாலும் உடல் சிலிர்க்கிறது.

மருத்துவமனையில் எனது அக்கா மகள் அனுமதிக்கப்பட்டிருந்த அறையில் அனுமதிக்கப்பட்டிருந்த ஒரு நோயாளியின் உறவினர், அவளின் பிரச்சினை பற்றிக் கேட்டறிந்து, அவருக்குத் தெரிந்தவர்களிடம் விபரம் கூறி, சிகிச்சைக்குத் தேவையான பணத்தைச் சேர்த்துத் தந்தார்.

இதற்கும் மேலாக, நினைத்ததைவிட சிறியதொரு அறுவை சிகிச்சையைச் செய்து, அந்தச் சிறுமியை குணப்படுத்தினர் மருத்துவர்கள். கிடைத்த பணத்தில் எஞ்சிய பணத்தை, எமக்கு உதவி செய்தவருக்குத் திரும்பக் கொடுத்தோம். அவர் மிகச் சாதாரணமாக, ''இந்தப் பணத்தை கொச்சிக்கடை அந்தோனியார் தேவாலயத்துக்கு அளித்து விடுங்கள்'' என்றார். இத்தனைக்கும், நாம் அந்தோனியாரிடம் நேர்ந்துகொண்டது அவருக்குத் தெரியாது.

இன்று சிறுமி நல்ல உடல் நலத்துடன் இருக்கிறாள். சிறுமிக்காகப் பரிந்துரை செய்து உடல்நலம் பெற்றுத் தந்த அந்தோனியார் வழியாக இறை இயேசுவுக்கு நன்றி கூறுகிறோம்.


*- சத்துரிக்கா பெர்னாட் பெரேரா*
*களனிய.*

## கடன் தீர்த்த மடுமாதா

என் மகன் போல் பீற்றருக்கு மிகுந்த கடன் சுமை காரணமாக குடும்பத்தில் அமைதி, சந்தோஷமில்லாமல் இருந்தது. என் மருமகள் இந்த வேதனையால் தற்கொலைக்கும் முயன்றதால் நான் மிகுந்த வேதனையோடு மடு மாதாவிடம் மானசீகமாக என் மகன் குடும்பத்தை ஒப்புக் கொடுத்துச் செபித்தேன். என் கண்ணீரை மாதா அன்போடு துடைத்தார்கள். அதன் பலன் என் மகனுக்கு நல்ல வேலை கிடைத்து கடன்களை கொஞ்சம் கொஞ்சமாக அடைத்து விட்டார். மாதாவுக்கு நன்றி.

எனக்குத் தெரிந்த ஒரு மகனுக்கு விபத்து ஏற்பட்டு மிகுந்த ஆபத்தான சூழ்நிலையில் இருந்தார். அந்த மகனுக்காகவும் மாதாவிடம் கண்ணீரோடு செபித்தேன். மாதா அந்த மகனுக்கு இறங்கி சுயநினைவையும், நல்ல உடல் சுகத்தையும் தந்து பூரண சுகம் கிடைக்கப் பெற்றதற்கு மாதாவுக்கு நன்றி செலுத்துகிறேன்.

*எஸ். ரோஸ்மேரி,*
*சிலாபம்.*



# அன்பின் நேசருக்கு நன்றி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லாம் கடவுளின் கொடையே!

எம்.ஏ.ஜோ

**"இந்த இடத்தில் அந்தக் காலத் துல ஒரு குளம் இருந்திருக்கு. அந்தக் குளத்துக்கரையில ஓர் ஆலமரம். அந்தப் பையனுக்குத் தாகம்'' என்றார் அமலா.**

''எந்தப் பையனுக்கு? பால் வாங்கிட்டுப் போய் நாகப்பட்டினத்திலிருந்த எஜமானருக்குத் தினமும் கொடுத்துட்டிருந்த பையன். அப்படித் தானே?'' என்றார் ஆனந்தராஜ்.

''ஆமா, குளத்தில இறங்கி தாகத்துக்குத் தண்ணி குடிச்சுட்டு... ஏன் சிரிக்கிறீங்க?''

''ஏம்ப்பா சிரிக்கிறீங்க? நீங்க நம்பலியா?'' என்று கேட்டார் ஆனந்தி.

''சேச்சே, நம்புவேன், நம்ப மாட்டேன்னு சொல்றதுக்கு நம்ம யாரு? நம்பினா நன்மை, நம்பலனா நஷ்டம்.''

''அப்புறம் ஏன் சிரிச்சீங்க?'' அமலா விடவில்லை.

''இல்ல. குளத்தில இறங்கி தாகம் தீர தண்ணி குடிச்சான்னியே. அதுக்குத்தான் சிரிச்சேன். இன்னைக்கு அப்படி குடிச்சா என்ன ஆகும்? தாகம் தீரலாம். சீக்கிரம் பெரிய சோகம் வரும். குளத்தை விடு. குழாய்ல வர்ற தண்ணியை நம்பிக் குடிக்க முடியுதா?''

''அந்தக் காலத்தில சுத்தமா இருந்ததெல்லாம் இப்போ மாசு படிஞ்சு போச்சு'' என்றார் ஆனந்தி.

''ஆமா, இந்த நாட்டு அரசியல் மாதிரி. சரி, நீ சொல்லும்மா. சிரிச்சு உன்னை திசை திருப்பிட்டேன்.''

''குளத்தில் இறங்கித் தண்ணி குடிச்சவன் பால் பாத்திரத்தைப் பக்கத்தில வச்சுக் கிட்டு, களைப்பில் தூங்கிட்டான். அப்பதான் அந்த மாதரசி தன் பிள்ளையோடு தோன்றி, பிள்ளைக்குக் கொஞ்சம் பால் கேட்டிருக்காங்க. சந்தோஷமா பையன் கொடுத்திருக் கான். அதைத் தன் பிள்ளைக்கு ஊட்டறதை மகிழ்ச்சியோட பார்த்திருக்கான். காட்சி மறைஞ்சதும் பாலை எடுத்துக்கிட்டு எஜமான் வீட்டுக்கு ஓட்டமும் நடையுமாய் போயிருக்கான்.

''பால் குறைஞ்சிருக்கே. ஏன்டான்னு எஜமான் கேக்கிறதுக்கு முன்னாடி நடந்ததை எல்லாம் சொல்லிடுவோம்னு பையன் சொன்னான். ஆனா பால் கொஞ்சமும் குறையல. தளும்பி வழிஞ்சிருக்கு. அப்படித் தானேம்மா?'' என்று கேட்டார் ஆனந்தி.

''கடவுளுக்குக் கொடுக்கிற எதுவும் குறை யாது'' என்றார் ஆனந்தராஜ்.

''ஆச்சரியப்பட்ட அந்தப் பணக்காரர் பையன் காட்டிய குளத்தங்கரைக்கு வந்து நெடுஞ்சாண்கிடையா விழுந்து வணங்கியிருக்காரு. நாகப்பட்டினத்துக் கிறிஸ்தவங்க எல்லாம் பால்காரச் சிறுவனுக்குக் காட்சி கொடுத்தது மாதா

## புனிதர்களின் பொன்மொழிகள்

நாம் கடவுளை அன்பு செய்ய வேண்டும் என கடவுள் விரும்புவதற்குக் காரணம் நமது உதவி அவருக்குத் தேவை என்பதற்காகவன்று; மாறாக அவரை அன்பு செய்வது, நம்மை முழுமையாக்கும் என்பதால்தான்.

- புனித இரேனேயுஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான்னு நம்பினாங்க. அன்னயிலிருந்து இந்தக் குளத்துக்கு...''

''மாதா குளம்னு பேரு. ஏ... ஏ... அங்கப் பாரு'' என்று எழுந்து வேகமாக நடக்க முயன்ற ஆனந்தராஜைப் பிடித்து நிறுத்தினார் ஆனந்தி.

''என்னப்பா?''

''போய் அந்தப் பிள்ளையைத் தூக்கும்மா. கீழே விழுந்து கிடக்கு, அப்பனும் ஆத்தாவும் எங்க போய்ட்டாங்க?''

''நீங்க உட்காருங்க'' என்று சொல்லிவிட்டு

கலாமா? அது சின்னப் பிள்ளை தானம்மா? நாம தான் கொஞ்சம் பொறுமையா, கவனமா பிள்ளை கூடவே வருதான்னு பார்த்து கூட்டிட்டுப் போகணும்'' என்றார் ஆனந்தி.

ஆனந்தியை முறைத்த அப்பெண், ''வாடி'' என்று சிறுமியை இழுத்துக் கொண்டு போனாள். ஆனந்தராஜ், ''எதுன்னாலும் எங்கிட்ட சொல்லுங் கப்பா. நாங்க எதுக்கு இருக்கோம்?'' என்றார் ஆனந்தராஜைப் பார்த்து.

''ஓடப் போனதைப் பார்த்தியாம்மா? ஐயா வுக்கு வயசும் மறந்துடுது. ஹார்ட் பேஷன்ட்றதும்



ஓடிப் போய் கீழே விழுந்து கிடந்த சிறுமியை ஆனந்தி தூக்கி விட்டார். அழுத குழந்தையின் கண்ணீரைத் துடைத்து விட்டு, ''எங்கம்மா மத்த வங்க எல்லாம்? யார் கூட வந்த?'' என்று கேட் டார்.

அந்தச் சிறுமியின் தாய் ஓடி வந்து, குழந்தை யின் முதுகில் அடித்தாள். ''சேர்ந்து கூட வர்றா ளான்னு பாருங்க.'' குழந்தையின் அழுகை வலுத் தது.

''கீழே விழுந்த குழந்தைக்கு எங்காவது காயம் பட்டிருக்கானு பார்க்கறத விட்டுட்டு அதை அடிக்

மறந்துடுது'' என்றார் அமலா.

''எம்பது வயசுல இப்படி எந்திரிச்சு நடமாட முடியுதே. உங்கூட வேளாங்கண்ணி வர முடி யுதே. எவ்வளவு நன்றி சொல்லணும்?'' என்றார் ஆனந்தராஜ்.

''சரி. எழுந்திருங்க. மெல்ல நடந்து கோயி லுக்குப் போவோம். பிள்ளை வந்திடும்'' என்றார் அமலா.

தொடர்ச்சி 29ஆம் பக்கம் பார்க்க...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அருள் வழங்கும் அன்பு அன்னை

அருட்தந்தை. ஜெகநாதன்

மெக்சிகோ நாட்டில் 1530 ஆம் ஆண்டுகளில் இந்தியர் பலர் குடியேறினர். அங்கிருந்த வெள்ளையர்களால் இவர்கள் இரண்டாம் தரக் குடிமக்களாய் நடத்தப்பட்டனர். தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை தவறிக் கெட்டு பாழ்பட்ட நிலையில் வாழ்ந்தபோதும், கிறிஸ்தவ மக்கள் தம் விசுவாச வாழ்வில் உறுதியுடன் இருந்தனர்.

உத்தம கிறித்தவர்களாக வாழ்ந்தவர்களில் ஒருவர் ஜாண்டியாகோ. சிறு கிராமம் ஒன்றில் எளிய விவசாயியாக வாழ்ந்த இவர் வயது 58. தினமும் திருப்பலியில் பங்கேற்பது வழக்கம்.

ஒருநாள் மலைப்பகுதியைக் கடந்து ஆலயத்துக்குச் சென்று கொண்டிருந்தபோது, இந்தியப் பெண்போல் உடையணிந்த அன்னை மரியா, ஜாண்டியாகுவுக்குக் காட்சி கொடுத்தார். அம்மறை மாவட்ட ஆயர் சும்மராகா (Zumarraga) அவர்களைச் சந்தித்து தாம் காட்சி கொடுத்த இடத்தில் ஆலயம் ஒன்றினை எழுப்ப வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார் அன்னை.

ஜாண்டியாகோ கூறியதை ஆயர் நம்பவில்லை. தாம் நம்பும்படி அற்புதச் செயல் ஒன்று நடக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என்றார்.

மறுநாள் மாதாவின் காட்சியைத் தவிர்க்கும் நோக்கில் வேறு பாதையைத் தேர்ந்தெடுத்தார். அப்போதும் அன்னை காட்சி கொடுத்தார். ஜான்டியாகோ ஆயர் கூறியதை அன்னையிடம் கூறினார்.

அன்னை ஜான்டியாகோவிடம் மலை உச்சியில் உள்ள ரோஜா மலர்களைப் பறித்து வரும்படிக் கூறினார். இவரும் மலை உச்சிக்குச் சென்று ரோஜா மலர்களைப் பறித்து தோளில் போட்டுக் கொண்டு வந்தார். அம்மலர்களை ஆயரிடம் காண்பிக்கும் படி அன்னை கூறினார்.

ரோஜா மலர்களைக் கண்ட ஆயரும் அருகில் இருந்தவர்களும் வியந்தனர். பூக்களைப் பொதிந்து கொண்டு வந்த துணியில் அன்னையின் திருவுருவம் அப்படியே பதிந்திருந்தது. மேலும் அப்பருவம் ரோஜா மலர்கள் பூக்கும் காலம் அல்ல. அன்னையின் உருவம் பதிந்த துணி இன்றும் காட்சிப்பொருளாய் வைக்கப்பட்டுள்ளது.

திருத்தந்தை மூன்றாம் பவுல் 1537இல் மெக்சிகோவில் இந்தியர்கள் மதிப்பு மிக்கவர்களாக நடத்தப்பட வேண்டும் எனச் சுற்றறிக்கை வெளியிட்டார். இந்தியர்களுக்குச் சம உரிமை கிடைத்தது. அன்னைக்கு ஆலயம் எழுப்பப்பட்டது. அந்த அற்புத ஓவிய மாதா மெக்சிகோ நாட்டின் பாதுகாவலியாக விளங்குகிறார்.

புனித பவுல் ''ஒருவர் தூய ஆவியால் நிரப்பப்பட்டால் அவரிடம் தூய ஆவியின் அனைத்து வரங்களும் நிரப்பப்படுகிறது'' என்கிறார்.

''அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, நன்னயம், விசுவாசம், சாந்தம், தன்னடக்கம் போன்ற தூய ஆவியின் வரங்களின் பலன்கள் அவரை நிறைக்கிறது'' (கலா 5:22).

கன்னி மரியா தான் கர்ப்பவதியாக இருந்த போதிலும், முதிர்வயதில் கருத்தாங்கிய தன் உறவினரான எலிசபெத்துக்கு உதவி செய்ய விரைந்து செல்கிறார். ஜென்மப் பாவம் அணுகாதவராக, எப்பொழுதும் கன்னியாக, பரிசுத்த ஆவியின் ஆலயமாக, இறைமகனைத் தாங்கிய திருப்பேழையாகத் திகழ்ந்த தாய்மரியா, நமக்குத் தாயாக இருப்பது நாம் பெற்ற பெரும்பேறு.

1850ஆம் ஆண்டுகளில் ஸ்பெயின், பிரான்ஸ் போன்ற நாடுகள் போரினால் சின்னாபின்னமாகிக் கிடந்தன. மக்களின் ஆன்மீக வாழ்வை இருள் சூழ்ந்திருந்தது.

பிரான்ஸ் மக்கள் கொடுமைகளுக்கும், அடக்குமுறைகளுக்கும் உட்பட்டிருந்தனர். பிரான்சின் தளபதி நெப்போலியன் போன பார்ட்டினால் கிறிஸ்தவர்கள் ஆலயத்தில் இறைவனை வழிபட முடியாத நிலை இருந்தது. அக்கால கட்டத்தில்தான் 1858 பெப்ரவரி முதல் ஆறு மாத காலத்துக்குள் 14 வயது ஏழைச் சிறுமி பெர்னதெத்துக்கு 18 முறை அன்னை மரியா காட்சி கொடுத்தார். செபம், தவம், செபமாலை உலக அமைதிக்கான ஒரே வழி என்பதை வலியுறுத்திக் கூறினார்.

செபமாலை பக்தி உலகெங்கும் பரவியது. இருண்டு கிடந்த உள்ளங்களில் ஆன்மீக ஒளியை ஏற்றியது.

செபமாலைச் செபங்களாலும், பாடல்களாலும், திருப்பலிகளில் பங்கேற்பதாலும் ஆன்மீக வாழ்வைச் சீர்ப்படுத்துவோம். மறு உலகில் மாதாவின் பிள்ளைகளாகத் திகழும் வரம் பெறுவோம்.

★★★

## புனிதர்களின் பொன்மொழிகள்

★ எல்லாவற்றுக்கும் மேலாக இதய அமைதியைக் காத்துக் கொள். அதுவே பிற பொக்கிஷத்தைவிட மேலானது. இதய அமைதியைப் பெற்றுக் கொள்ள நம் சொந்த விருப்பத்தைத் துறந்து, இறைவன் விருப்பத்தை ஏற்றுக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை.

*- புனித மார்கிரேட் மேரி*

★ தெய்வீக அன்பு வார்த்தைகளை உச்சரித்து கொண்டிரு. அப்போது உன் ஆன்மா பற்றித் தெரியும். அதனால் நீ சாந்தமாய் இருக்க முடியும்.

*- புனித அவிலா தெரசா*

★ அன்பின் உண்மை செயலில் வெளிப்படுகிறது. அன்புள்ள இடத்தில் பெரிய செயல்கள் விளங்கும்.

*- திருத்தந்தை பெரிய கிரகோரியார்*

★ அன்புக்கு வடிவம் என்ன? அதற்குப் பிறருக்கு உதவி செய்யக் கைகள் உண்டு; தேவையுள்ளவரிடம் விரைந்து செல்லக் கால்கள் உண்டு; பிற சோகங்களைக் காணும் கண்கள் உண்டு; பிறரின் பெருமூச்சுக்களைக் கேட்க காதுகள் உண்டு; இதுவே அன்பின் உருவம்.

*- ஹிப்போ அகுஸ்தினார்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறார்களின் இன்றைய நிலை:

## ஓர் இறையியல் பார்வை!

அருட்சகோ. ஜோஸ்பின் SCC



## சிறுவர் பகுதி

"சிறுபிள்ளையை ஏற்றுக்கொள்பவர் என்னையே ஏற்றுக் கொள்கிறார்'' (மத் 9:37).

குழந்தையும், தெய்வமும் குணத்தால் ஒன்று, குற்றங்களை மறந்துவிடும் மனத்தால் ஒன்று என்று பழைய பாடல் வரிகளைக் கேட்டு எனக்குள் சிரித்துக் கொண்டேன். இதை எழுதிய அந்தக் கவிஞன் இன்று உயிரோடு இருந்தால் இவ்வாறு எழுதியிருக்கக் கூடும்...

'கடவுளே குழந்தையாய் மட்டும் மீண்டும் பிறந்துவிடாதே - கண்டிப்பாக குப்பைத் தொட்டியில்தான் கிடப்பாய் மறந்து விடாதே...!

உன் பசி போக்க நீ தெருத் தெருவாய்த் தான் பொறுக்க நேரிடலாம்...!

அறிவு புகட்டுகிறோம் என்று உன்னை மூட்டைச் சுமக்க ஆகிடலாம்...!

அதுவும் பெண் குழந்தையாக - ஒருபோதும் பிறந்துவிடாதே...!

பிறந்தால் செத்தாயா, மீறி வளர்ந்தால் பங்கு போட்டு விற்றுவிடுவார்கள்...!

இன்னும் ஒன்றைக் கூற மறந்துவிட்டேனே...

மாற்றுத்திறனாளியாகப் பிறக்க நேரிட்டால் இச்சமுதாயத்தின் பார்வையைச் சற்று மாற்றிவிட்டுப் பிறப்பது நல்லது. இல்லையேல் உன்னைப் பைத்தியம் என்று முத்திரை குத்தி மீண்டும் சிலுவையில் அறைந்து விடுவார்களே...!'

கள்ளங்கபடமற்ற பருவம், சுதந்திர எண்ணத்தை விதைக்கும் பருவம், சுறுசுறுப்பாய்ச் சுற்றித்திரியும் பருவம், எதையும் எப்போதும் நல்லதாக நினைத்துப் பகை மறக்கும் பருவம் சிறார் பருவம், இவர்களின் உரிமைகள், எண்ணங்கள் பறிக்கப்பட்ட காரணங்களைச் சற்று ஆராய்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### குழந்தைத் தொழிலாளர்

இன்று நம் இந்தியத் திருநாட்டில் சுமார் 14 கோடி குழந்தைத் தொழிலாளர்கள் உள்ளனர். இதில் 1 கோடி குழந்தைத் தொழிலாளர்கள் இந்தியத் தலைநகரமாம் டில்லியில் மட்டும் வசிப்பவர்கள். இக்குழந்தைத் தொழிலாளர்களில் குறிப்பாக 6 முதல் 10 வயதினர் அதிக நிலையிலும், 16-18 வயதுக்கு உட்பட்டவர்கள் இன்னும் அதிகமாகவும் உள்ளனர். இவர்களது அன்றாடப் பணி மூட்டை தூக்குவது, வீட்டு வேலை, உணவுக் கூடங்களில் மேசை துடைப்பது, குப்பை பொறுக்குவது, ஷூ பாலிஸ் செய்வது, பிக்பாக்கெட், திருடுவது போன்றவையாகும். குழந்தைத் தொழிலாளர்களில் இந்தியா முதலிடம் வகிக்கிறது. தமிழ் நாட்டில் மட்டும் சுமார் 30 இலட்சம் குழந்தைத் தொழிலாளர்கள் உள்ள னர். இதில் 48 சதவீதம் பெண் குழந்தைத் தொழிலாளர்கள். இன்னும் ஒரு முக்கிய செய்தி என்னவென்றால் இக்குழந்தைத் தொழிலார்களின் மூலம் நம் நாட்டுக்கு 20 சதவீதம் வருமானம் அரசுக்குக் கிடைக்கிறது. எவ்வளவு பெருமையான விசயம். பிஞ்சுக் கரங்கள்கூட பஞ்சம் போக்க புறப்பட்டுவிட்டன 2020ஆம் ஆண்டில் நம் நாட்டை வல்லரசாக்க...!

வேலியே பயிரை மேய்ந்த கதை போல் எங்கு இல்லை அவலம் நம் நாட்டில்? என்று மாறும் இந்த நிலை?

இறையாட்சி இத்தகையோரே...! (மாற் 10:4) என்று இயேசு குழந்தை மனம் கொண்டோரே இறையாட்சியில் இடம்பெற முடியும் என்று ஆணித்தரமாகக் கூறியும், நாம் எந்த அளவுக்கு இச்சிறார்களை மதிக்கின்றோம்? ஏன் இவர்களுக்கு இந்த அவல நிலை இச்சமூகத்தில்?

> **புனிதர்களின் பொன்மொழிகள்**
>
> அன்பு தன்னிலே நிறைவானது. அன்பு அதற்குரிய பலனை வெளியே தேடுவதில்லை. அது தனக்கே உரித்தான சொந்த வெகுமதியைப் பெறுகிறது. இதை அனுபவத்தில்தான் காணமுடியும்.
>
> - புனித பெர்னார்டு

### சிறார்களின் இத்தகைய நிலைக்குக் காரணம்

ஏழ்மை, சத்துணவின்மை, வன்முறை, பாதுகாப்பின்மை, சாதி ஏற்றத்தாழ்வு, கல்விச்சுமை, பொழுதுபோக்கு மற்றும் குடும்பம், நுகர்வுக் கலாசாரம், தொலைக்காட்சி, திரைப்படத் தாக்கம் எனப் பல காரணங்களைக் கூறிக்கொண்டே செல்லலாம். ஆனால், இதில் மிக முக்கிய காரணம் இன்றைய பெற்றோரே. நல்வழியில் நடக்கப் பிள்ளையைப் பழக்கு, முதுமையிலும் அவர் அந்தப் பழக்கத்தை விட்டுவிட மாட்டார் (நீதி 22:6)'' என்று விவிலியம் கூறுகிறது.

ஒரு குழந்தை நல்லவனாவதும், தீயவனாதும் பெற்றோர் வளர்ப்பினிலே என்றார் ஒரு கவிஞர். சிறார்களின் வளர்ச்சிப் பாதையில் பல பாதிப்புகளை இச்சமூகம் ஏற்படுத்தினாலும், 60 சதவீதம் குழந்தைகள் இன்று இந்நிலைக்குத் தள்ளப்படுவது பொறுப்பற்ற பெற்றோர்களினாலேதான்.

### அனுபவம் ஒன்று:

கடந்த ஆண்டு சிறார் சீர்திருத்தப் பள்ளிக்குச் செல்லும் வாய்ப்பு கிடைத்தது. அங்கு 12 வயதுடைய ஒரு சிறுமி என்னிடம் பகிர்ந்து கொண்டாள். ''நான் 6ஆம் வகுப்பு படித்துள்ளேன். வகுப்பில் முதல் இரு இடங்களில்தான் வருவேன். நன்றாகப் படிப்பேன். என் தந்தை திடீரென இறந்துவிட்டார். என் தாயின் நடவடிக்கை மாறியது. எனக்குக் கீழ் உள்ள என் தங்கையைக் காப்பாற்ற வேண்டும் என்ற நிலையில் நான் வீட்டு வேலைக்கு அமர்த்தப்பட்டேன். என் சம்பளப் பணத்தை மாதந் தோறும் என் தாய் வந்து பெற்றுச் செல்வாள். என்னைப் பற்றி எந்த அக்கறையும் அவளுக்கு இல்லை. நான் தங்கியிருந்த வீட்டினர் என்மீது அக்கறை கொண்டு என் சம்பளப் பணத்தை வங்கியில் சேமிக்கத் தொடங்கினர். இதனால் கோபம் கொண்ட என் தாய் பொய் வழக்குப் போட்டு என்னைப் பொலிஸில் பிடித்துக் கொடுத்தாள். இவ்வாறு அச்சிறுமி கூறினாள். 6 வயது குழந்தையைப் பெற்றோர் பிச்சை எடுக்கக் கட்டாயப்படுத்தியதால் சைல்ட் லைன் உதவியுடன் அக்குழந்தை மீட்கப்பட்டது.

### அனுபவம் இரண்டு:

சிறுவர்களிடம் நான் பேசிய போது பல நிகழ்வுகளைக் கூறினார்கள். ''என் தந்தையை அரிவாள் எடுத்து வெட்ட வந்தவனை நான் வெட்டிவிட்டேன்''. ''பிக்பாக்கெட் இருவரும் சேர்ந்து அடித்தோம்!'' ''எனக்குப் பங்கு தராததால் நான் பொலிஸில் காட்டிக் கொடுத்தேன். கஞ்சா விற்றேன். அதனால் இந்நிலை!'' - இவ்வாறு அடுக்கிக் கொண்டே சென்றார்கள்.

### அனுபவம் மூன்று:

தஞ்சாவூரில் ஒரு சிறார் சீர்திருத்தப் பள்ளியைச் சந்தித்தபோது அங்கு சுமார் 100 குழந்தைகள் அரசு உதவியுடன் கல்வி கற்கின்றனர். இதில் சில குழந்தைகள் அனாதைகள். பெற்றோரால் கைவிடப்பட்டவர்கள், தெருவோரச் சிறுவர்கள், இவர்களின் கூக்குரல் என்னை மனம் நெகிழச் செய்தது. இவ்வகையில் தனிமனித சமுதாய மாற்றம் மிக மிக அவசியமானதும், அவசரமானதும்கூட. இதயத்தில் ஈரம் உள்ளவர்களாக இக்குழந்தைகளை அரவணைப்போம். இவர்களின் உரிமைகளைப் பெற உதவுவோம்.

★★★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றி பெற்றார் ஓல்சன்

- எச்.பி. ராஜ்குமார்

## புரூஸ் ஓல்சன் வாழ்க்கைச் சரிதம்

**தனது பேச்சைக் கேட்ட பிறகு மோடிலோன் பழங்குடிகள் ஒன்றுமே பேசாமலிருப்பதைக் கண்டு ஓல்சன் வியப்படைந்தார். தான் சொன்னது அவர்களுக்குப் புரியவில்லையோ என்ற சந்தேகமும் எழுந்தது.**

தனியாகச் சென்று முழங்காற்படியிட்டு ஊக்கமாக ஜெபித்தார் ஓல்சன். ஒவ்வொருவராகத் தனித்தனியே சந்தித்து இதைப்பற்றிக் கேட்க வேண்டும் என்று தீர்மானித்துக்கொண்டார்.

பாவத்தைப் பற்றி மோடிலோன் குடிகளுக்குத் தெளிவான எண்ணம் இல்லாததுதான் இதற்குக் காரணம் என்று ஓல்சன் புரிந்துகொண்டார்.

மற்றவர்களுடைய பொருட்களை எடுப்பதை அவர்கள் தவறாகக் கருதுவதில்லை. அந்தப் பொருள்களை எடுப்பவன் அந்தப் பொருள்களை உருவாக்கத் தெரியாததினால் தான் அவைகளை எடுக்கிறான். இதனால் அவன் தான் திறமையில்லாதவன் என்பதைத் தானே ஒப்புக்கொள்கிறான். இதனால் அந்தப் பொருளைப் பறிகொடுத்தவனின் பெருமைதானே அதிகமாகிறது?

ஆனால் இதற்குப் பதிலாக, மற்றவர்களின் பொருளை எடுத்துப் பயன்படுத்திவிட்டு, அதை மீண்டும் வைத்துவிடுவது ஏமாற்றுவதாகக் கருதப்படுகிறது. அதை அவர்கள் பெரிய பாவமாகக் கருதுகிறார்கள்?

மற்றவர்களுடைய பொருட்களை எடுப்பதே பெரிய தவறு என்று அவர்களுக்குப் புரிய வைப்பதற்கு ஓல்சன் பெரும்பாடுபட வேண்டியிருந்தது.

மோடிலோன் கிராமத்துக்கு அருகிலிருந்த காட்டின் வழியாகத் தொலைபேசிக் கம்பிகள் சென்றன. இந்தக் கம்பிகளை வெட்டி வளையங்களாகச்



சுருட்டி, கழுத்திலோ கைகளிலோ அணிந்துகொள்வார்கள். இது தொலைபேசித் துறைக்குப் பெரும் தொல்லையை அளித்து வந்தது. இதைக் கண்ட ஓல்சன் தொலைபேசிக் கம்பிகளைத் திருடுவது குற்றமென்றும் அது டிபோ - டிபோவுக்குப் (கடவுள்) பிடிக்காதென்றும் வற்புறுத்தத் தொடங்கினார்.

படிப்படியாக அவருடைய முயற்சி பயன் தரத் தொடங்கியது. தொலைபேசிக் கம்பித் திருட்டுக்கள் நின்று போயின. ஏற்கனவே செய்து வைத்திருந்த மாலைகளையும், வளையங்களையும் கூடத் தூக்கியெறிந்துவிட்டார்கள். இந்த வகையிலாவது தனது முயற்சி பயன் தருகிறதே என்று மகிழ்ச்சியடைந்தார் ஓல்சன்.

ஆனால் ஒருநாள் மோடிலோன் பழங்குடி ஒருவன் இடுப்பில் மீண்டும் கம்பிச் சுருளைக் கண்டு அதிர்ந்து விட்டார் ஓல்சன். அவர் கவனிப்பதைக் கண்டவுடன் அவன் ஒளிந்துகொள்ள முயன்றான்.

ஓல்சன் அவனைப் பிடித்திழுத்து நிறுத்தி



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

னார்.

''நான் கம்பியை எடுத்தது உண்மைதான், ஆனால் அதற்குப் பதிலாக வேறொன்றுக்கு இதைக் கட்டிவிட்டேன்'' என்று அவன் கூறினான். ஆனால் ஓல்சனுக்கு ஒன்றும் புரியவில்லை.

அவன் அவரை இழுத்துக்கொண்டு காட்டுப் பகுதிக்குச் சென்று காட்டினான்.

அங்கே இரண்டு தொலைபேசிக் கம்பங்களுக்கு இடையிலிருந்த கம்பி வெட்டப்பட்டிருந்தது. அந்த இடத்தில் ஒரு காட்டுச் செடியின் கொடியை அவன் கட்டிவைத்திருந்தான். இரண்டுக்குமுள்ள வித்தியாசத்தை ஓல்சன் அவனுக்கு விளக்கிச் சொல்ல வேண்டியிருந்தது.

ஓல்சனின் நீண்டநாள் ஜெபமும், முயற்சியும் இறுதியில் விரும்பிய பயனைத் தந்தது.

ஒருநாள் கொராய்ரா போராரிஷோரா என்ற இளைஞன் ஓல்சனை நோக்கி வந்தான்.

அவன்தான் ஓல்சன் முதன்முறையாகக் கிராமத்துக்கு வந்தபோது அம்பெய்தி அவரைத் தாக்கியவன்! அவன் ஏன் வருகிறான் என்பதை அறியாமல் படபடக்கும் நெஞ்சத்தோடு காத்திருந்தார் ஓல்சன்.

அவன் தன்னுடன் பேசத்தான் வந்திருக்கிறான் என்பதை அறிந்தவுடன் ஓல்சன் தேவனைத் துதித்துத் தனக்கு வழிகாட்டுமாறு மௌனமாக ஜெபித்தார்.

ஏற்கனவே ஒருநாள் ஓல்சன் இஸ்கோரிடா என்ற மோட்சத்தைக் குறித்துச் சொல்லியிருந்ததை அவனும் கேட்டிருந்தான்.

ஓல்சனின் அருகே வந்து அமர்ந்தான் அவன்.

''இஸ்கோரிடாவுக்கு போனால் அங்கே நமக்குப் பசிக்குமா? போகும் பாதையில் முள் இருக்குமா? அங்கே போய்ச் சேர எவ்வளவு காலம் பிடிக்கும்?'' என்று படபடவென்று கேட்கத் தொடங்கினான் அவன்.

ஓல்சன் தனது வேதாகமத்தைத் திறந்து வைத்து, வசனங்களை அவனுடைய மொழியில் பெயர்த்து, ஒவ்வொரு கேள்விக்கும் தெளிவான பதிலைக் கூறிப் புரியவைத்தார். இயேசுவானவரை விசுவாசித்து, நமது பாவங்களை அறிக்கையிட்டு, அவரை ஏற்றுக் கொண்டால் மட்டுமே இஸ்கோரிடாவுக்குச் செல்ல முடியும் என்று அவனுக்கு விளக்கினார் ஓல்சன்.

ஆண்டவர் கொராய்ராவின் மனதில் கிரியைச் செய்யத் துவங்கினார். இயேசுவானவரைப் பற்றி இன்னுமதிகமாகக் கேட்டுத் தெரிந்து கொண்டான் அவன்.

''இயேசுவின் வார்த்தைகள் என் வாயிலும் வயிற்றிலும் நிரம்பிவிட்டன'' என்ற திருப்தியோடு கூறினான் அவன். மோடிலோன்கள் வயிற் றின் மூலம்தான் சிந்தனை செய்வதாக நம்பினார்கள்.

கொராய்ரா கொஞ்சம் கொஞ்சமாகக் கிறிஸ்துவுக்குள் வந்து தனது வழக்கமான கெட்ட குணங்களை விட்டு முற்றிலுமாகத் திருந்திவிட்டான்.

தனது நீண்டகால முயற்சியின் முதல் பயனாகிய கொராய்ராவுக்காக ஓல்சன் தேவனைத் துதித்தார்.

கொராய்ராவின் மூலம் மோடிலோன் பழங்குடிகளில் இன்னும் அநேகரைக் கிறிஸ்துவுக்குள் வழிநடத்தி விடலாம் என்ற நம்பிக்கை ஓல்சனுக்கு வந்தது. அந்த இளைஞனும் இந்தப் பணியில் அதிக ஆர்வம் காட்டுவதைக் கண்டு அவர் தேவனைத் துதித்தார். நீண்ட காலமாகக் காட்டின் நடுவே ஊழியம் செய்து வந்த ஓல்சன் கொராய்ராவையும் அழைத் துக் கொண்டு கொலம்பியாவின் தலைநகரான பகோடாவுக்கு சென்றார்.

முதன் முதலாக ஆபத்து விளைவிக்காத ஒரு மோடிலோன் பழங்குடியைக் கண்டு அரசு அலுவலர்களும், நண்பர்களும் வியந்தனர். கொராய்ரோ நாகரிக உலகின் அதிசயங்களைக் கண்டு வியப்படைந்தான்.

திரும்பிச் செல்லும்போது ஓல்சன் படகில் பொருத்தும் மோட்டார் இயந்திரம் ஒன்றையும், மருத்துப் பொருள்களையும் வாங்கிச் சென்றார். கட்டுமரம் மட்டுமே கட்டத் தெரிந்த கொராய்ராவுக்கு மரத்தைக் கொண்டு படகு கட்டும் கலையைச் சொல்லிக் கொடுத்தார். மோட்டார் இயந்திரத்தைப் பழுது பார்க்கவும் கற்றுக் கொடுத்தார்.

- தொடரும்

## புனிதர்களின் பொன்மொழிகள்

என்னுடைய இன்பம் இயேசுவோடு வாழ்வது, இயேசுவோடு நடப்பது, அவரோடு பேசுவது, அவரோடு அவருக்காகத் துன்புறுவது, அதுவே எனக்குக் கிடைக்கும் பொக்கிஷம்.

**புனித அல்போன்ஸ் ரோட்ரிகுவஸ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழு திருத்தொண்டர்களில் முதல்வராய் விளங்கிய புனிதர் ஸ்தேவான்

- பாலினா

**ஸ்தேவான் என்ற கிரேக்கப் பெயருக்கு 'முடியப்பர்' என்று பொருள். தன் பெயருக்கு தகுந்தாற்போல் திருச் சபையின் முதல் மறைசாட்சியாக பலியாகி விண்ணகம் சென்று இறைவனால் முடி சூடப் பட்டார்.**

சவுல், ஸ்தேவான் இருவரும் இஸ்ரயேலில் மிகப்பெரிய ரபி கமாலியேலின் சீடர்கள். ஆண்டவர் இயேசு தெரிந்து கொண்ட 72 சீடர் களுள் ஸ்தேவானும் ஒருவர்.

ஸ்தேவானைப் பற்றி திருவிலியத்தில் திருத் தூதர் பணியில் பிரிவு 6 லிருந்து பிரிவு 8 சொற் றொடர்கள் 2 வரை கூறப்பட்டுள்ளது. ஆதித் திருச் சபையில் கிரேக்க கைம்பெண்கள் சமபந்தியில் சரி யாக கவனிக்கப்படவில்லை என அறிந்த திருத் தூதர்கள் அனைத்து சீடர்களையும் வரவழைத்து நற்சான்று பெற்றவர்களும், தூய ஆவி அருளும் வல்லமையும், ஞானமும் நிறைந்த எழுவரை தேர்ந்தெடுக்க செய்தனர். எழுவரில் ஸ்தேவானும் ஒருவர், திருத்தூதர்கள் அவர்களை திருத்தொண் டர்களாய் திருப் பொழிவு செய்தனர்.

ஸ்தேவான் அருளும், வல்லமையும் நிறைந்து அருஞ் செயல்களையும், அரும் அடையாளங்க ளையும் செய்து நற்செய்தியைப் போதித்ததால் ஏழு திருத்தொண்டர்களில் முதல்வராகக் கருதப் பட்டார். அவருக்கு எதிராக வாதிட்டவரை ஞானத்தாலும், தூய ஆவியின் உதவியால் பேசிய வார்த்தைகளாலும் வாயடைத்தார்.

மோசேவுக்கும், கடவுளுக்கும் எதிராகப் பழி சொற்கள் சொல்கிறார் எனப் பொய் குற்றச்சாட்டு டன் தலைமைச் சங்கத்தில் அவரை ஒப்படைத்த னர். தலைமைக் குருவுக்கு முன்பாக விசாரணை கைதியாக இயேசு நின்ற அதே இடத்தில் இப் போது ஸ்தேவான் விசாரணை கைதியாக நிற் கிறார்.

கொடூரமாக அடிக்கப்பட்டு காட்டுமிராண்டித் தனமாக இங்கும் அங்குமாக இழுக்கப்பட்டு கீழே விழுந்தார். திருக்கோவிலையும், திருச்சட்டத்தை யும் எதிர்த்து பேசுவதாகவும் பொய்சாட்சி கூறி னர். தலைமை சங்கத்தில் இருந்த மூப்பர்கள் அவரைப் பார்த்தபோது அவரது முகம் விண் ணகப் பரவசத்தில் நிறைந்து ஒரு வானதூதரின் முகம் போல் ஒளி வீசக் கண்டனர்.

தலைமைச் சங்கத்தில் நீண்ட அருளுரை நிகழ்த்திய ஸ்தேவான் 'உன்னத கடவுள் மனி தர் கையால் கட்டிய இல்லங்களில் குடியிருப் பதில்லை. விண்ணகம் கடவுளின் அரியணை, மண்ணகம் அவர் கால்மணை' என்றார்.

மேலும் 'எந்த இறைவாக்கின ரைத் தான் உங்கள் மூதாதையர் துன்புறுத்தாமலிருந்தனர்? நேர்மையானவரின் வருகையை முன்னறிவித்தோரை அவர்கள் கொன் றனர். இப்போது இயேசுவைக் காட்டிக்கொடுத்து கொன்றீர்கள். கடவுளின் தூதர்கள் வழியே தரப் பட்ட திருச்சட்டத்தை நீங்கள் பெற்றிருந்தும் கடைப்பிடிக்கவில்லை' என்று சாடினார்.

திருத்தூதர் பணி ஸ்தேவானின் வழக்கு விசார ணையை விளக்கி சொல்கிறது. விசாரணையின் போது கடவுள் அருள் வெளிப்பாட்டு தோற்றம் ஸ்தேவானுக்குக் கிடைத்தது. தந்தை கடவுளின் மாட்சிமையையும் அவர் வலப்பக்கத்தில் இறை மகன் இயேசு நிற்பதையும் கண்டு இதோ வானம் திறந்திருப்பதையும் நீங்கள் கொலை செய்த இறை மகனும் மானிட மகனுமான இயேசு கடவுளின்



வலப்பக்கத்தில் நிற்பதையும் காண்கிறேன் என் றார்.

ஓநாய்களைப் போல் வெறியோடு அவர் மேல் பாய்ந்து கீழே தள்ளி மிதித்தனர். அங் கிருந்த கமாலியேல் இன்னும் கிறிஸ்தவராக மாற வில்லை எனினும் அவர் ஒரு நீதிமானாக ஸ்தே வான் மேல் தொடுத்த வன்முறையை அங்கீகரிக் காமல் அங்கிருந்து வெளியேறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யூதர் அவரை நகரத்திற்கு வெளியே இழுத்துச் சென்றனர். ஏற்கெனவே தாக்குதலால் அவர் உடலில் ஏற்பட்ட காயங்களால் உடலெங்கும் இரத்தம் வழிந்து கொண்டிருந்தது. அவர் ஆடையைக் கிழித்து அகற்றி விட்டு ஒரு சிறிய அங்கியுடன் விட்டனர்.

ஸ்தேவானை நிற்கச் செய்து அவர்கள் அகன்று போய் வட்டமாக நின்றனர். தங்கள் மேலாடைகளைக் கழற்றிவிட்டு அவர் மேல் கல்லெறிந்தனர். ஸ்தேவானின் கொலையில் சவுலும் உடன்பட்டிருந்தார். கல்லெறிந்தவர்களின் உடைகள் சவுலிடம் தான் ஒப்படைக்கப் பட்டது.

மடியும் தறுவாயில் ஸ்தேவான் சவுலைப் பார்த்து ''நண்பரே, இயேசுவின் பாதையில் நான் உமக்காகக் காத்திருப்பேன்'' எனக் கத்தினார். அவர்கள் ஸ்தேவான்மேல் கல்லெறிந்த போது அவர் ''ஆண்டவராகிய இயேசுவே, எனது ஆவியை ஏற்றுக் கொள்ளும்'' என வேண்டினார்.

பின்னர் முழந்தாள்படியிட்டு உரத்தக் குரலில் ''ஆண்டவரே, இந்தப் பாவத்தை இவர் கள்மேல் சுமத்தாதேயும்'' என்று செவித்து விட்டு சுருண்டு கீழே விழுந்து உயிர்விட்டார். இன்னும் நிறையக் கற்கள் வீசப்பட்டு அவர் உடல் முழுவதும் மூடப்பட்டது.



அன்னை மரியா, பேதுரு, சின்ன யாக்கோபு, யோவான், தீவிரவாதி சீமோன், லாசர், நிக்கோதேமு ஒன்று சேர்ந்து ஸ்தேவான் கொலையுண்ட இடத்திற்குச் சென்றனர். கல் வாரியில் மற்றும் இயேசுவின் கல்லறையில் வியாகுல அன்னையாக தோற்றமளித்த அன்னை இப்போது மீண்டும் வியாகுலம் நிறைந்து பங்கேற்றார்.

மரியாவைவிட உள்ளத்திலும், உடலிலும் அதிக வல்லமை கொண்ட ஆண்கள் உடனிருந்து ஸ்தேவானின் உடலை துடைத்து சுத்திகரித்து அடக் கம் செய்தனர். திருச்சபையின் முதல் மறைசாட்சி ஸ்தேவானின் இறுதி வேண்டுதலில் தம்மைக் கொலை செய்தவர்களை மன்னித்து அவர்களுக்காக மன்றாடியதன் விளைவாக இயேசு ஆதித் திருச்சபையை துன்புறுத்தி அழிக்க மதம் பிடித்துத் திரிந்த சவுலை மனந்திருப்பி திருத்தூதரர் பவுலாக மாற்றினார். ஸ்தேவானின் வீர மறைசாட்சி மரணத்தில் சிந்திய இரத்தத்தின் பேறுபலன்களால் ஆதித் திருச்சபை நல்ல வளர்ச்சி கண்டது.

ஸ்தேவானுடைய ரபி கமாலியேல் மனமாற்றம் பெற்று கிறிஸ்தவராக திருமுழுக்குப் பெற்றார்.

* * *

## வீண்பெருமை

ஒரு மயில் எப்போதும் தனது அழகுத் தோற்றம் பற்றி வீணாகப் பெருமையடித்துக் கொள்ளும். பக்கத்திலுள்ள ஆற்றங்கரைக்கு ஒவ்வொரு நாளும் செல்லும். ஆற்று நீரில் பிரதிபலிக்கும் தனது அழகை பார்த்து ஒரு நாள் ஒரு கொக்கு நிற்பதை மயில் பார்த்தது, உடனே தனது முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டது. பின், முரட்டுத் தனமாகக் கொக்கிடம் சொன்னது, என்னாது, நெறமேயில்லாத நீசப் பறவை நீ, உனது சிறகுகள் ரொம்பச் சாதாரணமா, பார்க்கச் சகிக்காம இருக்கு.

உன்னுடைய சிறகுகள் நிச்சயமாக அழகாகத்தான் இருக்கு, என்னுடையது அப்படியில்லை. அதனால் என்ன? உன்னுடைய சிறகுகளைக் கொண்டு உயரமாகப் பறக்க முடியாது. ஆனால் என்னுடைய சிறகுகள் என்னை வானம் மட்டும் உயர்த்திச் செல்லும்.

*பாடம்: வெறும் அழகைவிடப் பயன்பாடே சிறந்தது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயேசுவின் நாமத்தில் எதையும் சாதிக்கலாம்!

- P.S. ராஜாமணி

இளைஞர் பகுதி



**"விசுவாச அப்போஸ்தலன்" என்று பேர் பெற்ற விசுவாச வீரர் ஸ்மித் விக்கிள் ஸ்வொர்த் இங்கிலாந்து தேசத்தில் 1859, ஜூன் 8ஆம் திகதி மென்ஸ்டன் என்ற கிராமத்தில் பிறந்தார். ஸ்மித் ஏழைக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவர். குடும்பத்தின் வறுமையின் நிலை காரணமாக தகப்பனுடன் 7 வயதிலேயே காட்டுக்குச் சென்று கடின வேலையில் ஈடுபட்டார். எட்டு வயதிலேயே பாட்டியுடன் ஆலய ஆராதனைக்குச் சென்று பாடக் கற்றுக்கொண்டார். இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு இரட்சிக்கப்பட்டார். இவர் இரட்சிக்கப்பட்டவுடன் தன் தாயை இரட்சிப்பிற்குள் நடத்தினார்.**

சிறுவயதிலேயே காட்டு வேலைக்குச் சென்றதால் ஸ்மித் கல்வி கற்கும் வாய்ப்பை இழந்தார். 13ஆம் வயதில் குடும்பமாக வேறு ஊருக்கு மாறிப் போனார்கள். அங்கே மெத்தடிஸ்ட் சபைக்குப் போக ஆரம்பித்தார். தனக்குச் சரியாக வாசிக்கத் தெரியாவிட்டாலும் எப்போதும் பாக்கெட் டில் புதிய ஏற்பாட்டை வைத்திருப்பார்.

1975இல் சால்வேஷன் ஆர்மி (Salvation Army) சபை அந்த ஊரில் ஆரம்பிக்கப்பட்டபோது, ஸ்மித் அவர்களுடைய ஆத்தும ஆதாய வாஞ்சையைப் பார்த்து அவர்களுடைய ஆராதனைகளில் கலந்து கொண்டார்.

17ஆம் வயதில் பைப் ரிப்பேர் பண்ணும் வேலை (Plumbing) கற்றுக்கொண்டார். முழுகி ஞானஸ்நானம் பெற்றார். வேலை தேடி ஒரு கம்பெனிக்குப் போனார். அங்கிருந்த முதலாளி இப்போது வேலை இல்லை என்று சொன்னார். ஸ்மித் திரும்பிப் போனார். உடனே அந்த முதலாளி ஸ்மித்தை திரும்ப அழைத்து "உன்னிடத்தில் ஏதோ ஒரு விசேஷம் இருக்கிறது. உனக்கு வேலை தருகிறேன்" என்றார். இப்படி வேலையில் சேர்ந்தார்.

லிவர்பூல் என்ற ஊருக்குச் சென்று பைப் ரிப்பேர் வேலை செய்துகொண்டே சிறு பிள்ளைகளுக்கு நற்செய்தி அறிவித்தார். நூற்றுக்கணக்கான பிள்ளைகள் இயேசுவை ஏற்றுக்கொண்டு இரட்சிக்கப்பட்டனர். மருத்துவமனைக்குச் சென்று வியாதியஸ்தருக்கு ஜெபிக்க ஆரம்பித்தார். பலர் சுகம் பெற்றனர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1882இல் ஸ்மித் பாலி (Poly) என்ற பெண்ணைத் திருமணம் செய் தார். ஸ்மித் பைப் ரிப்பேர் தொழிலில் நல்ல முன் னேற்றம் கண்டார். தன் தொழில் சம்பந்தமாக வேறு ஒரு ஊருக்குப் போனபோது அங்கே நடந்த தெய்வீக சுகமளிக்கும் கூட்டத்தில் கலந்து கொண்டார். பலர் அற்புத சுகம் பெற்றதைப் பார்த்து வியப்படைந்தார். தன் மனைவியையும் அந்த கூட்டத்துக்குக் கூட்டிச் சென்றார். அவளுக்கிருந்த வியாதி நீங்கி அற்புத சுகம் பெற்றாள். அதிலிருந்து இவரும் விசுவாசத்தில் பலப்பட்டார். ஸ்மித் தெய்வீக சுகமளிக்கும் கூட்டங்களை நடந்த ஆரம்பித்தார்.

முதல் கூட்டத்தில் 12 பேர் வியாதிக்காக ஜெபிக்க வந்தனர். 12 பேரும் அற்புத சுகம் பெற்றனர். பெரிய கட்டியினால் வேத னைப்பட்ட ஒரு பெண்ணுக்கு ஜெபம் பண்ணினார். உடனே கட்டி மறைந்துபோனது. சிறு தழும்பு மட்டும் இருந்தது.

**1) மரித்துக் கொண்டிருந்த பெண் சுகம் பெற்றாள்**

மரித்துக் கொண்டிருந்த பெண்ணுக்கு ஜெபிக்க அழைப்பு வந்தது. போதகரை அணுகி ஜெபிக்கக்கூட வரும்படி கேட்டார். அவர் மறுத்துவிட்டார், இன்னொரு நண்பரை அழைத்துக்கொண்டு போய் ஜெபிக்க வைத்தார். அவர் அவிசுவாச வார்த்தைகளைக் கூறி அனுப்பி ஜெபித்ததைக் கண்டு வேதனைப்பட்டார்.

மரித்துக் கொண்டிருந்த பெண்ணின் கணவனை ஜெபிக்கக் கூறினார். அவரும் ஜெபத்தில் புலம்பினார். "கர்த்தாவே இந்த மனுஷன் ஜெபிப்பதை நிறுத்தும்" என்று கத்தினார். அவர் ஜெபத்தை நிறுத்தினார். ஸ்மித் உள்ளத்தில் விசுவாசம் பொங்கி எழுந்தது. தன் பாக்கெட்டிலிருந்து எண்ணெய்ப் போத்தலை எடுத்து அந்தப் பெண்மீது ஊற்றினார். உடனே இயேசு அந்த இடத்தில் தரிசனமானார். ஸ்மித்தைப் பார்த்து இயேசு புன்னகை பூத்தார். உடனே அந்தப் பெண் பூரண சுகமடைந்து படுக்கையிலிருந்து எழும்பி உட்கார்ந்தாள்.

ஸ்மித் பைபிளைத் தவிர வேறு எதையும் வாசிக்க மாட்டார். கிறிஸ்தவ பத்திரிகையானாலும், தினசரி பத்திரிகையானாலும் தன் வீட்டுக்குள் வரக்கூடாது என்பதில் கவனமாயிருந்தார். வாசிக்கத் தேவையானது பரிசுத்த வேதாகமம், அது ஒன்றை வாசித்தால் போதும் என்பதில் கண்டிப்பாயிருந்தார்.

ஒருநாள் ஸ்மித் திடீரென்று நோய் வாய்ப்பட்டார். தாங்கமுடியாத வேதனையால் துடிதுடித்தார். தான் மருந்து எடுப்பதில்லை என்று தீர்மானம் பண்ணியிருந்தபடியால் டாக்டரை கூப்பிடவில்லை. எவ்வளவோ ஜெபித்தார். சுகம் உண்டாகவில்லை. கடைசியில் டாக்டர் வந்தார். குடல்வால்வில் கொடிய நோய் பற்றியுள்ளது. உடனே சிகிச்சை செய்யாவிடில் உயிருக்கு ஆபத்து என்று எச்சரித்தார். திடீரென்று இரண்டுபேர் வீட்டுக்குள் வந்து ஜெபித்தனர். ஸ்மித்மீது கைவைத்து "பிசாசே இவரைவிட்டுப் போ" என்று அதட்டி ஜெபித்தனர். உடனே அற்புத சுகம் கிடைத்தது.

பின்பு அவர் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தையும், அந்நிய பாஷை பேசுதலையும் கேள்விப்பட்டு அந்த அனுபவத்தைப் பெற ஆவலுடன் பல நாட்கள் காத்திருந்து கண்ணீருடன் ஜெபி த்தார். அற்புதமாய் அபிஷேகம் பெற்றார். உபவாசித்து ஜெபிப்பதில் அதிக நாட்கள் செலவிட ஆரம்பித்தபோது அவருடைய விசுவாசம் அதிகமாய் பெருகிற்று. அவர் மூலம் அற்புத அடையாளங்கள் நடக்க ஆரம் பித்தன.

> **புனிதர்களின் பொன்மொழிகள்**
>
> அன்பு தன்னிலே நிறைவானது. அன்பு அதற்குரிய பலனை வெளியே தேடுவதில்லை. அது தனக்கே உரித்தான சொந்த வெகுமதியைப் பெறுகிறது. இதை அனுபவத்தில்தான் காணமுடியும்.
>
> - புனித பெர்னார்ட்

**2) மரித்த மனைவி உயிர் பெற்றாள்**

ஊழியத்துக்கு ஸ்மித் வேறு ஓர் ஊருக்குப் போயிருந்தபோது ஒரு துக்க செய்தி வந்தது. அவருடைய மனைவி மரித்து விட்டாள் என்பதே அது வீட்டுக்கு வந்தார். நான் இல்லாத போது என் மனைவியை யார் எடுக்க முடியும் என்று கூறி மனைவியின் சடலத்தை கட்டிலிலிருந்து எடுத்து சுவர் அருகே கொண்டுபோய் சுவரில் சாய்ந்து நிற்கும்படி செய்து... "மரணமே, இயேசுவின் நாமத்தில் உனக்குக் கட்டளையிடுகிறேன். என் மனைவியின்மேல் உனக்கு அதிகாரமில்லை. இப்போது அவள் உயிர் திரும்பட்டும் என்று சத்தமிட்டார்". மரித்துப்போன அந்த சரீரம் குலங்க ஆரம்பித்தது. "இயேசுவின் நாமத்தில் நட என்று கட்டளையிடுகிறேன் என்று திரும்ப திரும்ப கத்தினார்"... உடனே அவர் மனைவி உயிர் பெற்று நடக்க ஆரம்பித்தாள்.

**விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும்!**

இதற்குப் பின்பு ஸ்மித்தின் ஊழியத்தில் இரட்டிப்பான தேவ வல்லமை வெளிப்பட்டது. விசுவாச வரம் இவரிடம் வல்லமையாய் கிரியை செய்தது. அசைக்க முடியாத மலைபோன்ற விசுவாசமுடையவராய் செயல்பட்டார். இயேசுவுடன் நெருங்கிய உறவு கொண்டிருந்தால் விசுவாசம் தானாய் வரும். எதையும் அவர் நாமத்தில் எளிதாய் சாதிக்க முடியும் என்று போதித்தார்.

★★★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Publicity விளம்பரம்

## இளைஞர் பகுதி

டோணி

**உவமை: இன்றைய உலகம் ஒரு விளம்பர உலகம். எதற்கெடுத்தாலும் விளம்பரம் தேவைப்படுகிறது. விளம்பரம் இல்லாத பொருட்கள் எவ்வளவு தரமுள்ளதாக இருந்தாலும் வியாபாரச் சந்தையில் போட்டியிட முடியாமல் பின்தங்கி விடுகின்றன.**

அவ்வாறே அரசியல் தலைவராவதற்கும், மக்களைக் கூட்டுவதற்கும் செபக் கூட்டங்கள் நடத்துவதற்கும் விளம்பரங்கள் செய்யப்படுகின்றன. சாலை நெடுகிலும் தலைவர்களின் கட்அவுட்களை வைப்பவர்களுக்கு கட்சியில் பதவி கொடுக்கப்படுகிறது. அறச்செயல்களுக்கு உதவி செய்பவர்களும், ஆலய பணிகளுக்கு உதவி செய்பவர்களும் பலர் தனது பெயர் அறிவிக்கப்படுமா என்பதைத் தெரிந்து கொண்டே உதவி செய்கின்றனர்.

மனிதர்களின் இப்படிப்பட்ட போக்குகளுக்கு பதில் தரும் வகையில் இன்றைய நற்செய்தியில் இயேசு நாம் எப்படி தர்மம் செய்ய வேண்டும். எவ்வாறு செபிக்க வேண்டுமென்று அறிவுரை கூறுகிறார்.

*அருள்மொழி:*

'மக்கள் பார்க்க வேண்டுமென்று அவர்கள் முன் உங்கள் அறச்செயல்களைச் செய்யாதீர்கள். இதைக் குறித்து நீங்கள் எச்சரிக்கையாய் இருங்கள்' (மத். 6:1).

*வார்த்தை வாழ்வாக:*

நாம் கடவுளை அன்பு செய்வதற்கும், அவ ரோடு உறவில் இணைந்திருப்பதற்கும் வழிபாடும், செபமும் அவசியம். பிறரன்பை வெளிப்படுத்துவதற்கு ஏழை எளியவர்களுக்கு உதவிகள் செய்ய வேண்டியதும் மிகவும் அவசியமானது. ஆனால் இவற்றை எத்தகைய மனநிலையில் செய்கிறோம் என்பது மிகவும் முக்கியமானது. அதைக் குறித்தே இயேசு இன்றைய நற்செய்தியில் எச்சரிக்கிறார்.

தர்மம் செய்யும்போது பிறர் பார்க்க வேண்டுமென்று தம்பட்டம் அடிக்காதீர்கள். உங்கள் வலக்கை செய்வது இடக்கைக்குத் தெரியாதிருக்கட்டும் என்கிறார். நமது தர்ம காரியங்கள் பிறர் நம்மை புகழ வேண்டுமென்று இருத்தலாகாது.

நம்மில் சிலர் பணக் கஷ்டத்தில் இருப்பவர்களுக்கு மறைவாக உதவி செய்வார்கள். உதவி பெறும் நபரும் தனது கஷ்டம் மற்றவருக்கு தெரிய வேண்டாம் என்று மிகவும் இரகசியமாகவே உதவி கேட்பார். ஆனால் உதவி செய்தவர் பிறரிடம் இவருக்கு நான் உதவி செய்தேன் என்று சொல்லிக் காட்டுவார். இது துன்பப்படுபவர்களை மேலும் துன்பப்படுத்துகின்ற செயலாகும்.

மனிதர் நம்மை பெருமை பாராட்ட வேண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மென்று தர்மம் செய்கின்ற செயல்களால் எந்தப் பயனுமில்லை.

மறைவாய் செய்யப்படும் அறச்செயல்களுக்கே கடவுள் தகுந்த கைமாறு அளிப்பார் என்பதே இயேசு நமக்குத் தரும் போதனை. இதனை வாழ்க் கையில் பின்பற்றுவோம். விண்ணகத்தில் நமக்கு செல்வத்தை சேர்த்து வைப்போம்.

**சுய ஆய்வு:**

எனது பெயர் விளம்பரப்படுத்தப்பட வேண்டு மென்று விரும்புகிறேனா? பிறருக்கு உதவி செய்யும்போது அதனை இரகசியமாக வைத்திருக் கின்றேனா?

**இறை வேண்டல்:**

ஆண்டவரே, உமது மகிமைக்காக நற்காரியங் களை ஆற்றிட எனக்கு மனதினைத் தந்தருளும். ஆமென்.

## புனிதர்களின் பொன்மொழிகள்

★ இயேசு தம் ஞானத்தில், மக்கள் மத்தி யில் வழங்கப்பட்ட வார்த்தைகளையும், எடுத் துக்காட்டுகளையும் பயன்படுத்தினார். நாமும் அவ்வாறே நற்செய்திப் பணியில் மக்கள் மத்தி யில் வழங்கும் சாதாரண மொழியையே கையாள வேண்டும்.

*- புனித ஜோசப் கபேசா*

★ வாழ்க்கைக் கடலில் எழும் புயல் மத்தி யில் கவனமாக வாழ்வை ஓட்டுவோம். நம் இதயம் சுத்தமாயிருந்து, நமது கருத்து துடிப் புடன் கடவுள் மீது நம்பிக்கையில் ஊன்றி இருந்தால் போதும். சில வேளைகளில் ஆழ் அலைகள் நம்மைத் தாக்கினாலும் பயப்படா மல் தொடர்ந்து செல்வோம்.

*- புனித பிரான்சிஸ் சலேசியர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேதாகமத்தில் வினா-விடை

1. இயேசு, இம்மானுவேல் என்ற பெயர்களின் பொருள் என்ன?

2. என் பின்னே வாருங்கள், நான் உங்களை மனிதரைப் பிடிப்பவர் ஆக்குவேன்? என்று இயேசு யாரை அழைத்தார்?

3.நீங்கள் தர்மம் எப்படி செய்யவேண்டும் என இயேசு கற்பித்தார்?

4.நற்செய்தியில் கூறப்படும் பொன் விதி யாது?

5. முன்மதி கொண்டது எது? கபடு அற்றது எது?

6. இயேசுவின் உண்மையான உறவினர்கள் யார் எனக் குறிப்பிடுகின்றார்?

7. இயேசு ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் எத்தனை பேருக்கு பங்கிட்டுக் கொடுத்தார்? மீதி எத்தனை கூடைகளில் எடுத்தனர்?

8. மனிதரை எது தீட்டுப்படுத்தும்?

9. பரிசேயர் சதுசேயரின் புளிப்பு மா என்று எதைக்குறித்து யேசு கூறினார்?

10.இயேசு வரிதண்டுவோருக்கு எங்கிருந்து பணத்தை எடுத்துக் கொடுத்தார்?

11. விண்ணரசில் மிகப் பெரியவர் யார்? என்ற கேள்விக்கு இயேசு என்ன பதில் கூறினார்?

12. விண்ணகத்தந்தையின் திருவுளம் என்ன?

13.விண்ணக தந்தை எம்மை மன்னிக்க நாம் என்ன செய்யவேண்டும்?

14. ஆண்டவரே தாவீதின் மகனே எம்மீது இரங்கும் என்று உறக்கக்கத்தியவர் யார்? அவர்களுக்குப் பார்வை கிடைத்ததா?

15. மத்தேயு சுவிஷேசத்தில் எந்த பகுதியில் இந்த வாக்கியம் உள்ளது. ஐயோ, பாவத்தில் விழச் செய்யும் உலகுக்கு ஐயோகேடு பாவத்தில் விழுவதைத் தவிர்க்க முடியாது? ஆனால் ஐயோ அதற்கு காரணமாய் இருப்போருக்க கேடு.

## பதில்கள்

1.இயேசு -அவர் தம் பாவங்களை அவர்களுடைய பாவங்களிலிருந்து மீட்பார். **(மத் 1:21)**

இமானுவேல்-கடவுள் நம்முடன் இருக்கிறார். **(மத். 1:23)**

2.பேதுரு அவர் சகோதரான அந்திரேயா. **(மத். 4:18)**

3. நீங்கள் தர்மம் செய்யும்போது உங்கள் வலக்கை செய்வது இடக்கைக்குத் தெரியாதிருக்கட்டும் **(மத். 6:3)**

4. பிறர் உங்களுக்குச் செய்யவேண்டும் என விரும்புகிறவற்றை எல்லாம் நீங்கள் அவர்களுக்குச் செய்யுங்கள் இறைவாக்குறுதிகளும் திருச்சட்டமும் கூறுவது இதுவே.

5. முன் மதி கொண்டது பாம்பு.

கபடற்றது புறா. **(மத்.10:16)**

6. விண்ணகத்திலுள்ள என் தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றுபவரே என் சகோதரரும் சகோதரியும் தாயும் ஆவார். **(மத். 12:50)**

7. பெண்களும், சிறுபிள்ளைகளும் நீங்கலாக உணவுண்ட ஆண்களின் தொகை ஏறத்தாள ஐயாயிரம். 12 கூடைகளில் எடுத்தனர் **(மத்.14:20, 21)**

8. வாய்க்குள் செல்வது மனிதரைத் தீட்டுப்படுத்தாது. மாறாக வாயிலிருந்து வெளிவருவதே மனிதரைத் தீட்டுப்படுத்தும் **(மத்.15:11)**

9. அவர்களின் போதனை? **(மத் 16.12)**

10. மீனின் வாயிலிருந்து ஸ்காத்தேர் நாணயத்தை எடுத்துக் கொடுத்தார். **(மத்.17:27)**

11. சிறுபிள்ளையைப்போல் தம்மைத்தாழ்த்திக் கொள்பவரே விண்ணரசில் மிகப்பெரியவர் **(மத்.18:4)**

12. சிறியோருள் ஒருவர்கூட நெறி தவறிப் போகக்கூடாது **(மத்.18:14)**

13. எம் சகோதர சகோதரிகளை மனசார மன்னிக்கவேண்டும். **(மத்.18:35)**

14. பார்வையற்றவர்கள் இருவர். ஆம் அவர்களுக்குப் பார்வைய கிடைத்தது.

**மத்.20 : 31,34**

15. **மத்.18:7 வசனம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதை

# தரிசனம்



லூர்து அன்னை காட்சிதந்து
நூற்றைம்பதாண்டு முடிந்தபோதும்
லட்சோபலட்சம் மக்கள் தினமும்
அருள் முகம் காண கூடுவர் தலத்தில்!
பிரான்ஸ் நாட்டின் தென் பகுதிதனில்
மசபியேல் எனும் பிரனீஸ் மலைமேல்
'காவ்' நதிபாயும் நதிக்கரையோரம்
சங்கு போன்ற அழகுறு மாடம்
தங்கரோஜா மலர் நின்ற பாதம்
கையில் செப மாலை மணிகள் மிளிர
பெர்னதத் சிறுமிக்கு பதினெட்டு
முறைகள்
தரிசனம் தந்தாள் சோதி சுடராய்!
கேட்டது கிடைக்கும் நினைத்தது
நடக்கும்
நோய்கள், வாதைகள் மாறிப் போகும்
ஊற்று நீரின் உயரிய மகிமை
சாற்றுது புதுமை அனைவர் அறிவர்!
மலைபோல் தொடரும் துன்ப துயரம்
மறைந்து போகும் மதிமுகம் பார்த்தால்
பாவ வழி நீங்கி உயர் நெறி காண
மாமரி சொன்னாள் காட்சிகள் மூலம்
நாளும் செபிப்போம் பொற்பதம்
பணிவோம்!
செபமாலை சொல்லி புண்ணியம்
பெறுவோம்
விண்ணப்ப மனைத்தும் பரிவுடன்
கேட்பாள்
கைவிட மாட்டாள் காலம் முழுதும்!

– கவிஞர். வி.ஜி.ஏ. ஆல்பர்ட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பர்திமேயு என்ற ஒரு பிறவிக் குருடன் எரிகோ என்ற பட்டணத்தில் சாலையின் ஓரத்தில் அமர்ந்து எத்தனையோ வருடங்களாக பிச்சை எடுத்துக் கொண்டிருந்தான். அவனுக்கு வாழ்க்கையே சூனியமாக இருந்தது. என்ன வாழ்க்கை இது? பிறந்து விட்டோம் வாழ்ந்து தான் ஆக வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தில் வாழ்ந்து கொண்டிருந்தான். பல டாக்டர்களிடம் அவன் சென்றிருக்கலாம்; சுகப்படுத்த யாராலும் முடியவில்லை. பிறவியிலேயே குருடனாயிருந்தவனை யார் குணப்படுத்த முடியும்? நம்பிக்கையற்றவனாய் காலத்தை ஓட்டி வந்தான்.**



இப்படிப்பட்ட சூழ்நிலையில் பலர் அவனிடம் வந்து ஆண்டவராகிய இயேசு என்பவர் ஒருவர் குஷ்டரோகிகளைச் சுகப்படுத்துகிறார், மரித்தோர்களை எழுப்புகிறார். குருடர்களுக்கு பார்வையளிக்கிறார் என்று கூறினார்கள். ஆனாலும் அவன் தன் நம்பிக்கையை அவர் மேல் வைக்கவில்லை. மேலும் ''நானே குருடன் அவரைத் தேடி நான் எங்கு செல்ல முடியும்?'' என எண்ணி சும்மா இருந்து விட்டான். ஆனால் ஒரு நாள் திரளான சத்தம் கேட்கவே அருகிலிருந்தவர்களிடம் இது என்ன சத்தம் என விசாரித்தான். அவர்கள், ''ஆண்டவர் இயேசு என்ற ஒருவர் வருகிறார் அவரிடம் சுகத்தையும் ஆசீர்வாதத்தையும் பெற திரளான ஜனங்கள் அவரைச் சுற்றிலும் வருகிறார்கள்'' என்று கூறினார்கள். உடனே அவனுக்கு ஒரு நம்பிக்கை பிறந்தது. ஒன்றுமில்லாமலா அவர் பின் இவ்வளவு பேர் போவார்கள். காசா, பணமா, இலவசம் தானே நாமும் அவரிடம் கேட்டுப் பார்ப்போம் என எண்ணினான். கூட்டம் அருகில் நெருங்கிவரும் சத்தம் கேட்கவே அவன்,

''இயேசுவே தாவீதின் குமாரனே எனக்கு இரங்கும்'' என்று உரக்கக் கூறினார்.

ஆனால் மற்றவர்களோ, அவன் பேசாதிருக்கும்படி அவனை அதட்டினார்கள். எல்லோரும் சத்தம் போடுகிறார்களே என எண்ணி அவன் சும்மா இருந்து விடவில்லை. சொல்பவர்கள் சொல்லட்டும் கஷ்டம் எனக்குத் தானே இனிமேல் இப்படியொரு சந்தர்ப்பம் கிடைக்குமோ? கிடைக்காதோ என எண்ணி யார் என்ன சொன்னாலும் பரவாயில்லை என மீண்டும் உரத்த சத்தமாய் ''இயேசுவே தாவீதின் குமாரனே எனக்கு இரங்கும்'' என்று முன்னிலும் அதிகமாயக் கூப்பிட்டான். (மாற்கு. 10:48)

அவன் ஓர் ஏழை பிச்சைக்காரன். அவரோ தேவாதி தேவன். இருந்தாலும் அவன் கூப்பிடுதலுக்கு ஆண்டவர் இயேசு செவி சாய்த்து நின்றார். அவனை அழைத்து வரச் சொன்னார். அவர்கள், ''ஆண்டவர் இயேசு உன்னை அழைக்கிறார் வா'' என்றார்கள். உடனே அவன் தன் மேல் வஸ்திரத்தை எறிந்து விட்டு எழுந்து இயேசுவினிடத்தில் வந்தான். இயேசு அவனை நோக்கி நான் உனக்கு என்ன செய்ய வேண்டும் என்று விரும்புகிறாய்?'' என்று கேட்டார். அவனுக்கு என்ன தேவை என்பதை அவர் அறிவார். ஆனாலும் அவனே சொல்வதை அவர் எதிர்பார்த்தார். அவன் ''ஆண்டவரே வாழ்நாள் முழுவதும் பிச்சை எடுத்துக் கொண்டிருக்கிறேன். வீடு வாசல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இல்லை. மொத்தமாக பணம் தாரும், அல்லது வீடு நிலம் தாரும் என அவன் கேட்கவில்லை. அப்படி அவன் பெற்றாலும் அவன் குருடனானபடியால் யாராவது ஏமாற்றிவிடுவார்கள் மீண்டும் பழைய நிலைதான். இதை எல்லாம் சித்தித்துப் பார்த்த அவன், ஆண்டவரே நான் பார்வையடைய வேண்டும்'' என்றான்.

ஆண்டவர் இயேசு அவனிடம், ''உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது'' என்றார். உடனே அவன் பார்வையடைந்து தேவனை மகிமைப்படுத்தினான். அவன் எதை விசுவாசித்தான்? ஆண்டவர் கூப்பிட்டு வரச்சொன்னார் என்ற பொழுது தன் மேல் வஸ்திரத்தை எறிந்து விட்டு வந்தான். அதில் என்ன விசேஷம்? பல இடங்களில் குருடர்கள் பிச்சை எடுப்பதை நாம் கண்டிருப்போம். தனக்கு முன் ஒரு துண்டை விரித்திருப்பார்கள்.

ஆள் நடமாட்டம் சத்தம் கேட்கும் பொழுது ''ஐயா, சாமி, இரண்டு கண்ணும் தெரியாத பிச்சைக்காரனுங்க, ஏதாவது தர்மம் பண்ணுங்க'' என சத்தமாய் கேட்பார்கள். போட விரும்புகிறவர்கள் காசை எடுத்து துணிமேல் போடுவார்கள். விழுந்த இடத்தில் அல்லது ஒரு ஜம்ப் செய்து துண்டிற்குள்ளேயே அந்த காசு கிடைக்கும். உருண்டு ஓடாது. அவன் பிச்சை எடுத்து முடித்தவுடன் 4 மூலையையும் பிடித்து சேர்ந்த பணத்தை எடுத்து பாக்கெட்டில் போட்டுக் கொண்டு அந்தத் துண்டை மேலே போடும் (துண்டு) வஸ்திரமே அவனுக்கு பிச்சை எடுக்க ஆயுதமாய் இருந்தது. இயேசு கூப்பிட்டார் என்று கேட்டவுடன் அவன் மனதில் ஓடியது என்ன? ஆண்டவர் இயேசு கூப்பிட்டு விட்டார். நிச்சயம் எனக்கு கண்பார்வை கிடைத்துவிடும். பார்வை கிடைத்த பின் நான் பிச்சை எடுக்க வேண்டிய அவசியமில்லை என்பதை உறுதியாய் நம்பினபடியால் அந்த மேல் வஸ்திரத்தைத் தூக்கி எறிந்தான். ஒரு வேளை சுகம் கிடைக்காமல் போய்விட்டால் மீண்டும் பிச்சை எடுக்கத்தானே வேண்டும்? எதற்கும் இதை வைத்துக் கொள்வோம். கண் பார்வை கிடைத்தவுடன் தூக்கிப் போடலாம் என எண்ணவில்லை. ஆண்டவர் இயேசு சுகம் தருவார் என்று உறுதியாய் விசுவாசித்தான். சுகத்தைப் பெற்றுக் கொண்டான். ஆண்டவர் நம்மிடமும் எதிர்பார்ப்பதும் விசுவாசத்தைத்தான்.

இதைப் படித்துக் கொண்டிருக்கிற நீங்கள் நல்ல பார்வை உடையவர்தான். ஆனால் ஆவிக்குரிய மனக்கண் திறக்கப்பட்டுள்ளதா? ஆவிக்குரிய மனக்கண் திறக்கப்படாவிட்டால் சரீரப் பிரகாரமான கண்கள் இருந்தாலும் வாழ்க்கையில் ஒரு குருடனைப் போல தட்டுத் தடுமாறித்தான் வாழ்க்கை நடத்துவீர்கள். ஒருவர் மனக் கண் திறக்கப்படாது (இரட்சிக்கப்படாது) வாழ்வாரேயானால் அது வேதனை நிறைந்ததாகவும் இருக்கும். ஏன்? பாவம் ஒரு மனிதனுக்குள் இருக்கும் பொழுது அது யாவற்றையும் அழித்து விடும்.

ஆனால் ஒரு மனிதனின் மனக் கண் திறக்கப்படுமானால் அதாவது இரட்சிக்கப்படுவானேயானால் இன்னும் தெளிவாகக் கூற வேண்டுமானால் பாவ மன்னிப்பைப் பெற்று பாவத்திலிருந்து விடுதலை பெற்றிருப்பானேயானால் அதுதான் அவனுக்குள்ள பெரிய ஆசீர்வாதம்.

# பிறவிக்குருடருக்கு பார்வையளித்தார்

- S.J. தினகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பலை ஆனந்தக் களிப்பாக மாற்றுவார்!

- சகோதரி மேரி தெரேசா

''என் புலம்பலை ஆனந்தக் களிப்பாக மாறப்பண்ணினீர்; என் மகிமை அமர்ந்திராமல் உம்மைக் கீர்த்தனம் பண்ணும்படியாக நீர் என் இரட்டைக் களைந்துபோட்டு, மகிழ்ச்சியன்னும் கட்டினால் என்னை இடைகட்டினீர்''

(சங்கீதம் 30:11)



**இந்த உலகத்தில் சந்தோஷமாக இருக்கிறோம். எல்லாம் நிறைவாக இருக்கிறது என்று திருப்தியாக வாழ்கிறோம். திடீரென்று எங்கிருந்தோ வருகிறது பயங்கரமான புயல், சுனாமி அலைகள் வந்து இப்படிப்பட்ட பயங்கரமான வாழ்வை பலர் அனுபவிக்கும்படி செய்ததை நாம் கண்கூடாகக் கண்டோம். கேள்விப் பட்டோம்.**

ஆம்! இது தான் உலக வாழ்வு. ஆனால் இப்படிப்பட்ட புலம்பல், திகைப்பு, ஆபத்து இவை மத்தியில் ஆண்டவர் அந்த பிரச்சினைகளையெல்லாம் மாற்றி நமக்கு ஆனந்தத்தையும், களிப்பையும் உண்டாக்க வல்லவராயிருக்கிறார் (ஏசாயா 35:10). அவருடைய பிள்ளைகளாகிய நாம் வாழ்ந்திருக்க வேண்டும் என்பதே ஆண்டவருடைய விருப்பம் (3 யோவான் 2).

1969 ஆம் ஆண்டு எங்களுடைய திருமண வாழ்வில் பத்து ஆண்டுகள் முடிந்திருந்தன. இன்பமான இல்லற வாழ்வையும் இனிமையான இரு குழந்தைகளையும் ஆண்டவர் எங்களுக்கு கொடுத்து எங்கள் வாழ்வை வளமாக்கியிருந்தார். எங்கிருந்தோ வந்தது ஒரு புயல்! நற்சுகத்துடனிருந்த என் கணவர் திடீரென்று மரணத் தருவாயிலானார்.

உங்கள் கணவர் இன்னும் கொஞ்ச நாட்களே உயிரோடு இருப்பார் என்று மருத்துவர் சொன்னதைக் கேட்டபொழுது, என் மனம் சுக்குநூறாக உடைந்தது. என் அறைக்கு ஓடினேன். முழங்காற்படியிட்டேன். ஆண்டவரை நோக்கி அழுது புலம்பினேன்.

''என் தெய்வமே! உமக்காக தானே ஊழியத்தை சந்தோஷமாக செய்து வந்தோம். இப்படி என் குடும்பம் உடைந்து போக நீர் அனுமதிப்பீரோ?'' என்று அழுதேன். உடனடியாக பரிசுத்த ஆவியானவர் என்னை நிரப்பினார்.

இதற்காகத் தான் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் ஒவ்வொருடைய வாழ்விலும் தேவை என்பதை நான் என்னுடைய செய்தியிலெல்லாம் ஆணித்தரமாக கூறி வருகிறேன். பரிசுத்த ஆவியானவர் என்னோடு பேசினார்.

''மகளே, உன் கணவர் உயிரோடு எழுந்திருப்பார். இதுவரை செய்த ஊழியம் மிகவும் குறைவு. இனி மிகவும் அதிகமான முறையிலே அவனை நான் உபயோகிப்பேன்'' என்றார். அவ்வளவு தான்! அதைக்கேட்ட என் உள்ளம் புது நம்பிக்கை, புது விசுவாசம் கொண்டு துள்ளியது. ஏறக்குறைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நான்கு மாதங்கள் கடந்தன. முழங்காற்படியிடக் கூட முடியாமல் இருந்த என் கணவர் முழங்காற் படியிட்டு கர்த்தரை ஸ்தோத்திரிப்பதைக் கண்ட போது என் உள்ளம் துள்ளிக் குதித்தது. கர்த்தரை நான் துதிக்க ஆரம்பித்தேன். பரி சுத்த ஆவியானவர் தம்முடைய வார்த்தையின்படியே முன்னைக் காட் டிலும் அதிகமாக உபயோகிக்க ஆரம் பித்தார்.

ஆம்! உங்கள் புலம்பலையும் இதே ஆவியானவர் தம்முடைய வல் லமையால் தலைகீழாய் மாற்றுவார். ஆனந்தக் களிப்பு உங்கள் வாழ்க் கையை, உள்ளத்தை நிரப்பும்படி அருள்புரிவார் (சங்.92:4).

**ஜெபம்:** ''அன்பு தெய்வமே, நீர் மகத்துவமானவர்! என் புலம்பலை. துக்கத்தை மாற்ற ஒருவராலும் கூடாது. ஆனால் உம்மால் ஆகாதது ஒன்றுமில்லை என்று நான் விசுவாசிக் கிறேன். என் வாழ்விலும் உம்முடைய மகிமையைக் காணும்படி இன்று எனக்கு அருள் தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென்!''

★★★

# எல்லாம் கடவுளின் கொடையே!
(11ஆம் பக்கத் தொடர்ச்சி...)

''நடந்துட்டே மத்த விஷயங்களையும் சொல் றியா? பால்காரப் பையனைப் பத்திச் சொன்னே. மோர்க்காரப் பையனுக்கும் மாதா காட்சி தந்த தாகச் சொல்வாங்க இல்லியா?''

''ஆமா. பிறவியிலிருந்தே கால் முடமான சிறுவன். மரத்தடியில் உட்கார்ந்து மோர் வித்தவ னுக்குத்தான் இந்த யோகம் கிடைச்சிருக்கு.

மாதா பிள்ளையோட வந்து நின்னு மோர் கேட்டிருக்காங்க. சந்தோஷமா கொடுத்த சிறு வன்ட்ட நாகப் பட்டினத்திலிருந்த ஒரு பணக் காரக் கத்தோலிக்கர்ட்ட போய் அந்த இடத்தில ஒரு கோயில் கட்ட தான் கேட்டதாகச் சொல்லச் சொன்னாங்க.

'என்னால நடக்க முடியாதே. நான் எப்படிப் போவேன்'னு அவன் கேட்க, மாதா நடக்கச் சொல்ல, அவன் நடக்க முயற்சி பண்ணி, மாதா வும் பிள்ளையும் அவனுக்குச் செஞ்சிருக்க புது மையை புரிஞ்சுக்கிட்டு, துள்ளிக் குதிச்சு ஓடிப் போய் செய்தியைச் சொல்ல, அந்த செல்வந்த ருக்கு ஒரே ஆச்சரியம்.

அவருக்கும் மாதா ராத்திரி கனவிலே தோன்றி அதே செய்தியைச் சொல்லியிருக்காங்க. மத்த வங்க உதவியோட மாதா காட்சி கொடுத்த இதே இடத்தில அவர் கட்டின கூரைக் கோயில் தான் முதல் கோயில்'' என்றார் அமலா.

''அப்புறம் போர்த்துக்கல்ல இருந்து கப்பல்ல கொழும்பு போன கத்தோலிக்கரோட கப்பல் புயல்ல சிக்கி, மூழ்கப் போனப்போ, அவங்க மாதாட்ட கெஞ்சி மன்றாட, புயல் நின்னு கரை சேர்ந்த இடத்தில இந்தக் கோயிலப் பார்த்துட்டு, தாங்க வாக்களிச்ச மாதிரியே அந்தக் கோயி லைப் பெரிசா, அழகாக் கட்டிக் கொடுத்தாங்க'' என்றார் ஆனந்தி.

''ஒன்னைக் கவனிச்சியா? ஏறக்குறைய எல்லா இடங்கள்லயும் மாதா சிறுவர் சிறுமி யருக்கே காட்சி கொடுத்திருக்காங்களே, ஏன்?'' என்று கேட் டார் ஆனந்தராஜ்.

''அவுங்களுக்குத் தானே கள்ளம் கபடம் இல்லாத வெள்ளை மனசு?'' என்றார் அமலா.

''இன்னொரு விஷயமும் இருக்கு. அந்தச் சிறுவர்கள் ரெண்டு பேரும் பரம ஏழைங்க. இந் துச் சிறுவர்கள், அதில என்ன செய்தி இருக்கு?''

''மாதாவுக்கு சாதி, மத பேதம் எதுவும் இல்ல. தாய்க்கு எல்லாப் பிள்ளையும் பிள்ளை தான். சரியா?'' என்றார் ஆனந்தி.

★★★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மோட்சப்பயணம்

# ராஜாதிராஜாவின் ஊழியன்!

எச்.பி.ராஜ்குமார்

பள்ளத்தாக்கில் சென்றபோது அப்பொல்லியோன் என்ற கொடிய பிசாசானவன் அவனுக்கு எதிரே வந்தான். திடுக்கிட்டு நின்ற கிறிஸ்தியான் முன்னே போவதா அல்லது பின்னே போவதா என்று ஒருகணம் தயங்கினான். பின்பு விசுவாசத்தோடு கேடயத்தைப் பிடித்தவனாக, கையில் பட்டயத்தை எடுத்துக் கொண்டு முன்னால் சென்றான்.

அப்பொல்லியோன் மிகவும் கொடூரமான தோற்றம் உடையவன்! அவன் உடலெங்கும் மீனைப்போலச் செதிள்கள் இருந்தன! கரடியைப் போன்ற பாதங்களையும், பறவையைப் போன்ற இறக்கைகளையும் கொண்டிருந்தான். சிங்கத்தின் வாயைப்போல இருந்த அவன் வாயிலிருந்து நெருப்பும் புகையும் புறப்பட்டுவந்தது! அழிநகரத்தின் அரசன் அவன்! தன்னுடைய நகரத்திலிருந்து தப்பிச் செல்லும் கிறிஸ்தியானை எப்படியாவது கொன்றுபோட வேண்டும் என்பதே அவன் எண்ணமாகும்.

"நில்லப்பா நில். நீ என்னுடைய நகரத்தைச் சேர்ந்தவன். எனக்கு ஊழியம்செய்ய வேண்டியவன். என்னை விட்டுவிட்டு எங்கே போகிறாய்?" என்று கோபத்துடன் கேட்டான் அப்பொல்லியோன்.

"நான் உமது நகரத்தில் பிறந்தவன் என்பது உண்மை தான். ஆனால் உமக்கு ஊழியம் செய்தால் எனக்கு என்ன சம்பளம் கிடைக்கும் எனத் தெரிந்து கொண்டேன். 'பாவத்தின் சம்பளம் மரணம்' அல்லவா? அதனால்தான் நான் இப்போது ராஜாதிராஜாவின் ஊழியக்காரனாக ஆகிவிட்டேன். அவருடைய சம்பளம், அவர் உறவு. தடுக்காதே. நான் அவரையே பின்பற்றுவேன்-" என்று திடமாகக் கூறினான் கிறிஸ்தியான்.

இதைக்கேட்ட அப்பொல்லியோன் கடும் கோபம் கொண்டான். ஓர் ஈட்டியை எடுத்து கிறிஸ்தியானின் மார்புக்கு நேராக வீசியெறிந்தான். ஆனால் அவனோ தனது கேடயத்தால் அதைச் சுலபமாகத் தடுத்து வீழ்த்திவிட்டான்! ஆவியின் பட்டயத்தினால் அப்பொல்லியோனைத் தாக்கத் துவங்கினான் கிறிஸ்தியான்!

அரைநாள் வரை மிகக் கடுமையான சண்டை நடந்தது. தலையிலும், காலிலும் காயமடைந்த கிறிஸ்தியான் அதிக அளவு இரத்தத்தை இழந்திருந்தான். மேலும் சமாளிக்க முடியாமல் கீழே விழுந்துவிட்டான் அவன்! அவனது பட்டயம் அவன் கையிலிருந்து நழுவித் தொலைவில் விழுந்து விட்டது!

கிறிஸ்தியானை வெட்டி வீழ்த்தும்படி அருகில் ஓடி வந்தான் அப்பொல்லியோன். தனது பலத்தையெல்லாம் திரட்டி எழுந்த கிறிஸ்தியான் வாளைத் தன் கையில் பிடித்துக் கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''என் சத்துருவே, எனக்கு விரோதமாய்ச் சந்தோஷப்படாதே; நான் விழுந்தாலும் எழுந்திருப்பேன்'' (மீகா 7:8) என்று ஆவேசமாகக் கூறிய படி பாய்ந்த கிறிஸ்தியான் அப்பொல் லியோனின் மார்பில் தன் வாளைச் சொருகினான். படுகாயப் பட்ட அவன் புறமுதுகு காட்டியபடி ஓடி விட்டான்! கிறிஸ்தியான் அதன் பிறகு அவனைப் பார்க்கவேயில்லை!

அப்பொல்லியோனிடமிருந்து தன்னைக் காப்பாற்றியதற்காக ஆண்டவருக்கு நன்றி கூறினான் கிறிஸ்தியான். அப்போது ஒரு கை தோன்றி, ஜீவ மரத்தின் இலைகளை அவனுக்கு அளித்தது! அந்த இலைகளைத் தனது காயத்தின் மீது வைத்தான் கிறிஸ்தியான். உடன்தானே அவன் பூரண குணமடைந்து விட்டான்!

தனக்குக் கொடுக்கப்பட்டிருந்த ரொட்டியைப் பிட்டுச் சாப்பிட்டு, திராட்ச ரசத்தை அருந்தினான். அதன் பிறகு புத்துணர்வு பெற்றவனாக, பட்டயத்தைக் கையில் ஏந்தியபடி, தனது பயணத்தைத் தொடர்ந்தான் கிறிஸ்தியான்.

அதன் பிறகு, கிறிஸ்தியான் மரண இருளின் பள்ளத்தாக்கை அடைவதை நான் என் கனவில் கண்டேன். அப்போது இருவர் அவனுக்கு எதிராக ஓடிவந்தார்கள்.

''ஐயா, நேரே போகாதீர்கள். இந்தப் பள்ளத்தாக்கு முழுவதும் ஒரே இருளாக இருக்கிறது. கொடிய மிருகங்களையும் விகாரமான ஜந்துக்களையும் அங்கே கண்டோம். எங்கும் வேதனையில் துடிப்பவர்களின் கூக்குரல்தான் கேட்கிறது-'' என்று கூறி அவனைத் தடுத்தார்கள்.

ஆனால் கிறிஸ்தியானோ ''நான் செல்ல வேண்டிய வழி இதுதான். எனவே திடமனதோடு இதில்தான் செல்வேன்-'' என்று கூறியபடி நேரே சென்றான்.

மரண இருளின் பள்ளத்தாக்கின் நடுவே சென்ற பாதை மிகவும் குறுகலாக இருந்தது. இதன் இடது புறம் ஆழமான குழி காணப்பட்டது. வலது புறம் ஒரே சதுப்புநிலக் காடாகக் காட்சியளித்தது! இரண்டு புறமும் சறுக்கிவிழாமல் நடுவில் நடந்து செல்லுவது கடினமாகவேயிருந்தது!

பள்ளத்தாக்கின் மையப் பகுதியில் நரகத்தின் வாசல் இருந்தது. அதிலிருந்து நெருப்பும், புகையும் புறப்பட்டு வந்தது. கர்ணகடூரமான சத்தங்களும் கேட்டன!

கிறிஸ்தியான் தனது பட்டயத்தை உறையில் போட்டுவிட்டு, ஒரு புதிய ஆயுதத்தைக் கையில் எடுத்துக் கொண்டான். ஜெபமே (எபே 6:18) அந்தப் புதிய ஆயுதம்! ''ஆண்டவரே, என்னைக் காப்பாற்றும்'' என்று தொடர்ந்து ஜெபம்செய்தான்.

துஷ்ட மிருகங்கள் அவனை நெருங்கிவந்தன. ''ஆண்டவருடைய வல்லமையால் நான் தொடர்ந்து நடப்பேன்'' என்று விசுவாசத்தோடு சத்தமிட்டான் அவன், அந்த மிருகங்கள் விலகி ஓடிப்போயின!

இருள் விலகி காலையில் வெளிச்சம் வந்தவுடன் கிறிஸ்தியான் தான் வந்த பாதையைத் திரும்பிப் பார்த்தான். ஆபத்துக்களுக்கு மத்தியில் மிகவும் குறுகலான பாதையில் தன்னைப் பத்திரமாக வழிநடத்திய ஆண்டவரைத் துதித்தான்!

பள்ளத்தாக்கிலிருந்த ஒரு குன்றுப் பகுதியை அடைந்தான் கிறிஸ்தியான். மேடான இடத்திலிருந்து சுற்றிலும் பார்த்தான். அப்போது சற்றுத் தொலைவில் உண்மையானவன் நடந்து செல்வதைக் கண்டான்.

''உண்மையானவனே, கொஞ்சம் நில். நானும் உன்கூட வருகிறேன்'' என்று குரல் கொடுத்தான் கிறிஸ்தியான்.

''என்னால் நிற்க முடியாது. பழிவாங்குகிறவர்



கள் என்னைத் தொடர்ந்து வருகிறார்கள்'' என்று கூறிய உண்மையானவன் நிற்காமல் சென்றான்.

இதைக் கண்ட கிறிஸ்தியான் அவனை எப்படியாவது பிடித்து விட வேண்டும் என்று எண்ணத்தோடு அவன் பின்னால் வேகமாக ஓடினான். ஓடிச் சென்ற அவன் உண்மையானவனைச் சுலபமாகத் தாண்டிவிட்டான். தன்னுடைய வேகத்தை எண்ணிப் பெருமைப்பட்டவன் பாதையைக் கவனிக்கவில்லை! கால் தடுக்கிக் கீழே விழுந்து விட்டான்!

உண்மையானவன் ஓடிவந்து அவனைத் தூக்கி விட்டான். இருவருமாகப் பேசிக்கொண்டே நடந்து சென்றார்கள். கிறிஸ்தியான் வழியில் தான் பெற்ற அனுபவங்களையெல்லாம் விவரித்துக் கூறினான்.

- தொடரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தாம் உடல் நலமடைந்த இந்தப் புதுமை யான அனுபவத்தை யாரிடமும் சொல்ல வேண்டா மென்று உருசுலாம்மாவிடம் கெஞ்சினார். ஆகையால் ஏலியாஸ் அடிகளார் வழியாக அல்போன்சா குணமடைந்தார் என்று மட்டும் பிறரிடம் கூறப்பட் டது.**

அடுத்த நாள் காலை. ஆலயத்தில் திருப் பலி ஆரம்பமாகும் நேரம். பிறர் உதவி யின்றி எழுந்திருக்க முடியாமலிருந்த அல்போன்சா திருப்பலியில் பங்கேற்றார். நன்மை வாங்கி னார். பிற சகோதரிகளுடன் எல்லா வேலை களும் செய்யத் தொடங்கினார்.

அவர் அற்புதமாகக் குணமடைந்ததைக் குறித்து நிறையப் பேர் அவரிடம் கேள்வி கேட்டார்கள். வற்புறுத்தலின் பேரில் மட்டும் சிலரிடம் இதைப் பற்றிப் பேசியுள்ளார்.

புண்ணியத்தின் பாதையில் அவர் எளி தாக முன்னேறிக் கொண்டிருந்தார். ஆத்ம நாதனைப் பின் தொடர சிலுவையைச் சுமக் கத் தயாரானார். தன்னுடைய உலக ஆசைக ளையும், விருப்பங்களையும் தலைவர்களின் வழிநடத்தலுக்கு விட்டுக்கொடுத்தார். தெளிந்த நீர்த்தொட்டியின் அடித்தட்டுபோல் அவருடைய அந்தரங்க நிலைமை அதிகாரி களுக்குத் தெளிவாகப் பார்க்க முடிந்தது. அவ ருடைய ஆர்வத்தைக் கண்டறிந்த அவர்கள் ஆன்மீகத் தியாகத்தின் பாதையை அவருக் குச் சுட்டிக்காட்டினார்கள்.

தன்னலமற்ற அன்பு எதிர்பார்ப்பற்றது. 'கொடுப்பது என்பதைத் தவிர பெறுக' என் பது உத்தம அன்பின் அடையாளம் அல்ல. பரிசுத்தமான அன்பு இருக்கும் இடத்தில் தன் னலத்தின் இருள் ஒளிந்து மறைந்துவிடும்.

சிறுவயதிலிருந்தே அசாதாரண அன்பின் உடைமையாக இருந்தார் அல்போன்சா. பிறரை ஆழமாக நேசித்தார். பெற்றோர்களிட மிருந்து கிடைக்காமல் போன அன்பு பிறரிட மிருந்து கிடைக்க ஏங்கினார். நவகன்னிகை வாழ்க்கையில் அவருடைய ஆன்மீகத்தை யும், உடல் பூர்வமுமான காரியங்களையும் கவனிப்பதற்கும், கட்டுப்படுத்துவதற்கும் நிய மனம் செய்யப்பட்டிருந்த உரூசுலாம்மாவிடம் தன்னலமற்ற அன்பும், நம்பிக்கையும் வைத் திருந்தார், அல்போன்சம்மா.

ஒருவேளை இப்படிப்பட்ட அன்பு, அர்ப் பண வாழ்க்கைக்கு தடையாக இருக்கலாம் என்று அவருக்குத் தெரியவில்லை. அவரு டன் அமர்ந்து, தாயிடம் குழந்தை பேசுவது போல் கொஞ்சிக் கொஞ்சிப் பேச



# கலங்கமற்ற நேசமலராய்

## புனிதை அல்போன்சா

டோரா ஸி. பொரியத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் விரும்பினார். இச்செயல் பிறருக்கு இடையூறாக இருக்கலாம் என்று அவர் நினைத்த தில்லை.

இப்படிப்பட்ட தன்னுடைய நேய குணத்தைக் குறித்து லூயீஸ் அடிகளாருக்குத் தெரிவித்தார். வாரத்தில் ஒரேயொரு முறை பதினைந்து நிமி டங்கள் மட்டும் நான் உரூசுலாம்மாவைப் பார்க்க வேண்டும் என அவர் அறிவுரை கூறினார். நிறை வாழ்வுக்காக ஆசைப்பட்ட அவர், அதற்குக் கீழ்ப் படிந்தார். தன் ஆசைகளை அடக்கினார். வாரத் தில் ஒருமுறை பார்க்க ஆவலோடு செல்லும் பொழுது ''சகோதரி போகலாம்'' என்று திருப்பி அனுப்பப்படுவார். பிற நவகன்னியர்கள் உரூசு லாம்மாவிடம் வெகுநேரம் பேசுவார்கள். தான் மட்டும் சீக்கிரமாக விரட்டப்படுவதைக் கண்ட அவர் அதிக வேதனைப்பட்டார். பின்பு அந்தத் துன்பத்தையும் சந்தோஷமாக ஏற்றுக்கொண்டார்.

''அன்று குருநாதர் அவ்வாறு கட்டளையிட் டது எனது நலனுக்காகத்தான். யாரையும் பார்க் கவோ தனியாக நேசிக்கவோ இப்போது நான் விரும்புவதில்லை. எல்லா அன்பும் இறைவ னுக்கே உரியது'' என்று பிற்காலத்தில் அவர் கூறினார்.

நவதுறவற வாழ்க்கையின் போது 1935இல் தன் நேய குணத்தைக் கட்டுபடுத்துவதைக் குறித்து இவ்வாறு எழுதினார். ''இன்று முதல்... இடம் நான் வைத்திருக்கும் தனி நேசத்தை விட்டு விடுகிறேன். இயற்கையான அன்பை வைத்து நான் பேசவோ செயல்படவோமாட் டேன். தவறி னால் அதற்காக வருந்தி பரிகாரம் செய்வேன். என்னுடைய ஆன்ம சோதனையில் இதற்கு முக்கியத்துவம் கொடுப்பேன்''.

நோய்வாய்ப்பட்டதால் அதிகத் துன்பப்பட் டார். ஆன்ம குருவின் அறிவுரைக்குப் பணிந்து எல்லாத் துயரங்களையும் பொறுத்துக் கொண் டார். உடல் நோயைவிட மனப்பீடைகள் அவரை வாட்டின. பிறரிடமிருந்து வந்த குற்றச்சாட்டுகள் பொறுக்க முடியாதவை என்று சில நேரம் தோன்றியது. பிறகு, எப்படிப்பட்ட துன்பங்களையும், சந்தோஷமாக ஏற்றுக் கொள்ளக் கூடிய மன நிலையை அவர் அடைந்தார். குற்றச்சாட்டுகளுக்கு மறுமொழி பேச, வந்த ஆத்திரத்தைக் கட்டுப்படுத்தினார். முடிந்தால் நல்ல வார்த்தைகளையே பதிலாகக் கூறினார். இல்லை என்றால் மௌனமாக உள்ளே ஒதுங்கினார். இயேசுவின் திரு இதயத்துக்குத் தன்னைத்தானே அர்ப்பணித்த அந்த நவ கன்னிகை, தான் அவமதிக்கப்படும்போதும் இகழப்படும்போதும் அவருடைய திருப் பாதங்களில் அபயம் தேடினார். அந்தத் துன்பங்களுக்காக இறைவனுக்கு நன்றி கூறினார். வீணாகக் குற்றம் சாட்டப்பட்ட போதும் மன் னிப்புக் கேட்டார்.

அல்போன்சாவின் எளிமை, கீழ்ப்படிதல் எவ் வளவு என்று சோதிக்க அதிகாரிகள் முயன்றார் கள். புனித வாழ்க்கையில் அவருடைய நிலை மையைத் தெரிந்துகொள்ளத்தான் அவ்வாறு செய்தார்கள்.

அல்போன்சாவுக்குக் கறுப்பு நிற சோறு கண் டாலே பிடிக்காது. ஒருநாள் அவருக்குப் பரிமா றப்பட்ட சாதத்தில் ஏராளமான கறுப்பு நிற சாதம் இருந்தது. தன்னுடைய விருப்பு வெறுப்பு களை வெளியே காட்டாமல் அதை ருசித்துச் சாப்பிட் டார். அவரை நன்கு அறிந்த கன்னியர்கள் இதைப் பற்றி ஆராய்ந்தபொழுது, தன்னுடைய அகந்தையை அகற்ற, கடவுள் கொடுத்த தண் டனையாக நினைத்து சந்தோஷமாக உண்டேன் என்று சொன்னார். அவரைச் சோதிப்பதற்காக அதிகாரிகளின் கட்டளைப்படி அவ்வாறு செய் யப்பட்டது என்ற உண்மையை அவர் அறிந்த தில்லை.

ஒருநாள் ஆயர் அவர்கள், நவகன்னியர்களி டம் பேசும்பொழுது எந்த துன்பத்தையும் தாங் கிக் கொள்ள அவர்கள் பயில வேண்டுமென்றும், வீணாக குற்றம் சாட்டப்படும் பொழுது நியாயம் பேசக்கூடாது என்றும் நினைவு படுத்தினார். அடுத்த நாள் ஆயர் மீண்டும் மடத்துக்கு வந்தார்.

''மடத்தில் பரிமாறப்படும் உணவின் தரக் குறைவைப் பற்றி நீங்கள் முறையிட்டதாகக் கேள்விப்பட்டேன்'' என்றார். தாங்கள் அவ்வாறு புகார் கூறவில்லை என்று சகோதரிகள் மறுத் தார்கள்.

''ஆண்டவரே, தவறு செய்தோம், எங்களை மன்னியும்'' என்று சொல்லி அல்போன்சா தலை யைக் குனிந்து நின்றார்.

- தொடரும்

## அமுதமொழிகள்

''ஆண்டவரே, என் முழு இதயத் தாலும் உம்மைப் புகழ்வேன். வியத்தகு உம் செயல்களை எல்லாம் எடுத்துரைப் பேன்'' **(திபா 9:1)**

''ஒடுக்கப்படுவோர்க்கு ஆண்டவரே அடைக்கலம். நெருக்கடியான வேளை களில் புகலிடம் அவரே'' **(திபா 9:9)**

''ஆண்டவரே என்மீது இரக்க மாயிரும். என்னைப் பகைப்போரால் எனக்கு வரும் துன்பத்தைப் பாரும். சாவின் வாயினின்று என்னை விடுவியும்'' **(திபா 9:13)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மீட்பரின் அமைதி மண்ணில் மலர...

- அருட்தந்தை. ஐ.சகாய அம்புரோஸ் ராஜா

**ஓர் இல்லத்தில் கணவன் கம்பியூட்டர் வித்தகன் மற்றும் பெரிய புத்திசாலி. வீடு, மனைவி, குழந்தைகள் என்று எதைக் கவனிக்கவும் அவனுக்கு நேரமில்லை. ஒருநாள் கம்பியூட்டரில் எதையோ மும்முரமாகத் தேடிக்கொண்டிருந்த போது, மனைவி அருகில் சென்றாள்.**

''நான் இங்கே தனியாக மனம்விட்டு பேச வேண்டும், எப்போது பேசலாம்?'' என்று கேட்டாள். அதற்குக் கணவன், ''எனக்கு இங்கு நிறைய வேலை இருக்கிறது. சட்டுப்புட்டென்னு பேசி முடித்துவிட்டுச் சொல். அதுவரை நான் வெளியே காத்திருக்கிறேன்'' என்று கூறிவிட்டு வெளியே போய் விட்டானாம். மனைவியின் பிரச்சினை என்னவென்றே தெரியாமல், தனியாகப் பேச இடம் ஒதுக்கித் தந்த புத்திசாலிக் கணவனைப் போன்று பலர் இவ்வுலகில் வாழ்ந்து வருகின்றனர். பிரச்சினை என்னவென்று தெரியா மல், தீர்வு காண முயல்கிறோம்.

ஒரு நோயாளியின் பிரச்சினை அறியாமல் மருத்துவர் மருந்து தர இயலுமா? பிரச்சினையைப் பற்றித் தெரிவதற்கு பொறுமையும், நேரமும், மன உளைச்சல் இல்லாத மனோபாவமும் வேண்டும். பரபரப்பிலும், படபடப்பிலும் மருத்துவர் வெற்றி கரமாக அறுவை சிகிச்சையைச் செய்ய முடியுமா? இன்றைய உலகில் எல்லாமே அவசரம்தான். நிறுத்தி நிதானமாகச் சாப்பிட வேண்டிய உணவைக்கூட ஃபாஸ்ட்புட் என்கிற பெயரில் அவசரமாகச் சாப்பிட்டுவிட்டு ஓடிக் கொண்டிருக்கிறோம்.

''பதறாத காரியம் சிதறாது'' என்று சொல்லுவார்கள். சிந்தனைத் தெளிவும், செயலும் கை கோர்க்கும் பொழுது வாழ்வில் என்றும் வெற்றியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிராமத்தில் பார்வையற்ற நபர் லாந்தர் விளக்கைக் கையிலேந்தி நடந்து சென்று கொண்டிருந்தார். எதிரே வந்த பார்வையற்ற நபர் மீது மோதி விட்டார். பார்வையற்ற நபர் அவரிடம், ''இருட்டில் யாரும் என் மீது மோதிவிடக்கூடாது என்பதற்காக கையில் லாந்தர் விளக்கினை ஏந்தி வருகிறேன். அதைப் பார்த்தாவது ஒதுங்கிச் செல்ல வேண்டாமா?'' என்று கேட்டார். அதற்கு அந்த நபர் கூறினார். ''ஐயா, கையில் லாந்தர் விளக்கு உள்ளது. ஆனால் அது எரிந்தால் தானே வெளிச்சம் கிடைக்கும்?'' ஆம், அந்த பெரியவர் வைத்திருந்த லாந்தர் விளக்கு காற்றில் அணைந்து போயிருந்தது.

நம்மிடம் ஒளிவிளக்கு உள்ளது. ஆனால், ஒளி ஏற்றியும், படபடப்புக் காற்றும், பரபரப்புப் புயலும், மன உளைச்சலும் ஏற்பட, ஒளி அணைந்து விடுவதைப் பார்க்கிறோம். இது குடும்பத்தில் மட்டுமல்ல, பல நாடுகளிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் உண்மை நிகழ்வு.

இதன் பின்னணியில், உற வின் உன்னதத்தை அலசி ஆராய்வோம். உறவுகள் வாழ்வில் மகிழ்ச்சியைக் காணச் செய்கின்றன. ஊனமில்லா உறவுகள் அனைவரையும் புரிந்து கொள்ளச் செய்கின்றன. கோபமும், பொறாமையும் கொண்ட மன நிலையிலும், உறவுகள் மனதில் அமைதியை ஏற்படுத்துகின்றன. ஆம், தானங்களில் சிறந்த தானம் இரத்த தானம் அல்ல. கண் தானம் அல்ல, உடல் உறுப்பு தானம் அல்ல, மாறாக, நிதானம். நிதானத்தோடும், விவேகத்தோடும் வாழ்வை வழி நடத்தும் பொழுது வாழ்வில் அமைதி உண்டாகிறது. இதையே இயேசு ''அமைதியை உங்களுக்கு விட்டுச் செல்கிறேன். என் அமைதியையே உங்களுக்கு அளிக்கிறேன். நான் உங்களுக்குத் தரும் அமைதி உலகம் தரும் அமைதி போன்றது அல்ல. நீங்கள் உள்ளம் கலங்க வேண்டாம்.'' (யோவா 14.27) என்று கூறுகின்றார்.

*மீட்பரின் அமைதி*
*மண்ணில் மலரட்டும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுநலத்துக்காகத் தம்மையே அர்ப்பணித்த

# பதினாறாம் போப் கிரிகோரி

- அவி

**பதினாறாம் போப்பாண்டவர் கிரிகோரியின் இயற்பெயர் பார்டோலோமியோ கேப்பள்ளரி என்பதாகும். இத்தாலியில் உள்ள பெல் லூனோ என்னுமிடத்தில் 1765ஆம் ஆண்டில் பிறந்தார்.**

பெல்லூனோவில் கிரிகோரியின் குடும்பம் மிகவும் வசதி வாய்க்கப் பெற்ற செல்வந்தர் குடும்பமாகும். இவருடைய தந்தை புகழ்பெற்ற வழக்குரைஞராக இருந்தார். குடும்பத்தில் உள்ள அனைவரின் விருப்பத்துக்கு எதிராகவும், கிரிகோரி மிகக் கடுமையாக விதிமுறைகளை அமுல்படுத்தும் வெனிஸ் நகரத்திலுள்ள துறவியர் மடத்தில் கற்பதற்காகச் சேர்ந்தார். இவருடைய பெயரை மௌரோ என மாற்றி அமைத்துக் கொண்டார். 1787ஆம் ஆண்டில் கிரிகோரி பாதிரியாராகப் புனிதப் பதவியளிக்கப்பட்டு பணியில் அமர்த்தப் பட்டார்.

தமது இருபத்தைந்தாவது வயதில் 1790ஆம் ஆண்டில் இவர் ஸான் மிச்சிலியில் உள்ள துறவியர் பயிற்சிக் கூடத்தில் விஞ்ஞானம் மற்றும் தத்துவப் பாடங்களைப் போதித்தார். இங்கு இவருடைய அறிவாற்றலும் திறமையும் அடையாளம் காணப் பட்டது. 1799ஆம் ஆண்டில் ஏழாம் பயஸ் சிறைப்படுத்தப்பட்ட போது, ஒரு நூலை கிரிகோரி வெளியிட்டு அதனில் 'ஹோலி ஸீ'யின் மூலமாக அமலாக்கப்பட்ட நாட்டு விதிமுறைகளையும் கட்டுப்பாடுகளையும் கடுமையாக எதிர்த்தார்.

மேலும் போப்பாண்டவருக்கான தவறே செய்யாத நிலைத்தன்மையையும் உலகியல் சார்ந்த தற்காலிக அதிகாரங்களையும்கூட அவர் விமர்சித்தார். ஏழாம் பயஸின் பணிக்காலத்தில் அருள் தந்தை மௌரோ எனப்பட்ட கிரிகோரி மாண்டே செலியோவின் செயிண்ட் கிரிகோரி துறவியர் மடத்தின் மடாதிபதியாக பணியமர்த்தப்பட்டார்.

ஏழாம் பயஸ் சிறைப்பட்டிருந்த காலம் முழுவதற்கும் அதாவது 1814ஆம் ஆண்டுவரை, நெப்போலியப் போர் முடியும் வரையிலும் இவர் ரோமை விட்டு வெளியே இருக்கும்படியாயிற்று.

1825ஆம் ஆண்டு வரை கிரிகோரி பல பொறுப்புகள் நிறைந்த மிக முக்கியத்துவம் வாய்ந்த பதவிகளை வகித்தார். பின்னர் அதே ஆண்டில் ஏழாம் பயஸ் இவரை கார்டினலாக நிலை உயர்த்தினார். கார்டினலாகப் பதவி வகித்த காலத்தில் கிறிஸ்தவ நெறிகளைப் பரப்புகின்ற பணியைச் செவ்வனே செய்தார்.

நவம்பர் 1830ஆம் ஆண்டு எட்டாவது பயஸ் இறந்தபோது அடுத்த போப் பாண்டவரைத் தேர்வு செய்வதில் மிகுந்த குழப்பங்களும் சர்ச்சைகளும் நிலவின. ஸ்பெயின் தேசத்தைச் சார்ந்த கார்டினல்கள் ஆட்சேபனை வாக்குகளைப் பதிவு செய்தார்கள். நாற்பத்தைந்து கார்டினல்களுக்கு நூற்று ஐம்பது வாக்குச் சீட்டுகளுடன் சுமார் ஐம்பது நாட்கள் ஆயின போப்பாண்டவரைத் தேர்வு செய்வதற்கு. அப்போதிருந்த புரட்சிகரமான சூழ்நிலையில் போப்பாண்டவரின் எல்லைகளை ஆள்வதற்கு சக்கரவர்த்தியைப் போன்று ஒருவர் தேவைப்பட்டார்.

ஆஸ்திரியாவின் ஆளுனர் மெட்டர்நிச் முழு அதிகாரம் படைத்த வல்லமை நிறைந்த ஒருவரே போப்பாண்டவராகப் பொறுப்பேற்க வேண்டுமென விரும்பினார். 1831ஆம் ஆண்டில், அருள் தந்தை மௌரோ எனவும் அதற்கு முன்னர் பார்டோலோமியோ கேப்பள்ளரி என்றும் விளங்கிய இவர் தமக்கு மடாதிபதி பதவி வழங்கிய செயின்ட் கிரிகோரியைக் கௌரவிக்கின்ற விதத்தில் தனது பெயரை கிரிகோரி என அமைத்துக் கொண் டார். தனது அறுபத்தைந்தாவது ஆண்டில் 1831ஆம் ஆண்டில் கிரிகோரி போப்பாண்டவராகப் பதவி ஏற்றுக்கொண்டார். பதினைந்து ஆண்டுகாலம் போப் பாண்டவராகப் பதவி வகித்தவர்.

மடத்துறவியாக இருந்து பின்னர் போப் பாண்ட வராக மாற்றமும் பதவி உயர்வும் பெற்ற நிகழ்வுக்கு இவரே கடைசியானவர் ஆவார். கிரிகோரி போப்பாண்டவராகப் பதவி ஏற்றுக் கொண்ட நேரத்தில் ஏற்கனவே தகித்துக் கொண்டிருந்த புரட்சி சூழ்நிலை பெரிதாக வெடித்தது. பிரான்ஸ் மற்றும் ஆஸ்திரியா தேசத்தவர்கள் போப் பாண்டவர் எல்லைக்குட்பட்ட இடங்களை வெகு காலத்திற்கு அதிகாரத்தைச் செலுத்தி ஆட்சி புரிந்துவிட்டனர். இப்போது இத்தாலியின் மக்கள்

## அமுதமொழிகள்

★ "நான் ஆண்டவரைப் போற்றிப் பாடுவேன். ஏனெனில் அவர் எனக்கு நன்மை பல செய்துள்ளார்" **(திபா 13: 8)**

★ "இறைவா என்னைக் காத்தருளும், உம்மிடம் நான் அடைக்கலம் புகுந்துள்ளேன்" **(திபா 16:1)**

★ "ஆண்டவரை எப்போதும் என் கண்முன் வைத்துள்ளேன். அவர் என் வலப்பக்கம் உள்ளார்" **(திபா 16:8)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாங்களும் ''போப் பாண்டவரின் எல்லைப் பிரதே சங்களை ஆளவேண்டும் - என்ற கோரிக்கைகள் வலுத்தன.

இதற்குக் காரணம் 'வத்திக்கானின்' அதிகாரப் பெருக்கமும் வத்திக்கான் பிரதேசத்தில் சேர்ந்து கொண்ட சொத்துக்களுமே ஆகும். கிரிகோரி பத வியில் இருந்த காலம் முழுவதும் பல சமூக, அரசி யல், மதச்சார்புடைய மற்றும் தத்துவார்த்தமான விடயங்கள் தொடர்பான சர்ச்சைகளும் பிரச்சினை களும் இருந்து கொண்டே இருந்தன.''

1839ஆம் ஆண்டில் போப் கிரிகோரி அடிமை வியாபரத்தை பெரிதும் கண்டித்தார், அச்செயல் கிறிஸ்தவத்துக்கு எதிரானது எனப் பிரகடனப்படுத்தினார். இவ்வண்ணம் தனிமனித சுதந்திரம் காக்கப்படவேண்டும் என விருப்பம் தெரிவித்தார். கிரிகோரிக்கு கைவண்ணத்தால் உருவாக்கப்படும் கலையின்மீது தனியாத ஆர் வம் இருந்தது. இவற்றில் சுவரோவியங்கள், சிற்பங்கள், வெண்கலச்சிலைகள் அடங்கும். கலை சம்மந்தப்பட்ட ஆராய்ச்சியை ரோம் நகரில் ஊக்கப்படுத்தினார்.

ஓர் அருங்காட்சியகத்தை வத்திகனி லும் மற்றொரு கிறிஸ்தவ அருங்காட்சிய கத்தை லாட்டரானிலும் நிறுவினார். இவற்றில் 1830ஆம் ஆண்டில் தொடங் கப்பட்ட அருங்காட்சியகத்தில் ''எட்ரஸ் கன் கலை'' தொடர்பான மிகச்சிறந்த கலைப்பொருட்கள் காட்சியில் வைக்கப் பட்டன. எகிப்தின் பழைமைப் பொருட் களை வைப்பதற்கென்றே ஒரு தனியான அருங்காட்சியகத்தையும் உருவாக்கி னார்.

பால் விநியோகத்தை புனரமைப்புச் செய்தார் மற்றும் 1823ஆம் ஆண்டில் பெருந்தீயில் சேதமடைந்த செயிண்ட் பால்ஸ் பெஸிலிக்காவையும் புதிதாகக் கட்டச் செய்தார்.

இக்கட்டான சூழ்நிலைகளிலேயே இவர் வாழ்ந்திருந்த போதிலும் மக்க ளின் பொதுநலத்தை இவர் ஒரு போதும் மறந்தாரில்லை. யூதர் களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்திட வேண்டுமென வலியுறுத்தினார். மக்களுக்கு திபெர் மற்றும் அனி யன் ஆற்றிலிருந்து நல்ல தண் ணீர் கிடைத்திட வழிவகுத்தார். சிவிட்டாவெச்சியா என்னுமிடத் தில் ஒரு புதிய துறைமுகம் உரு வாகிட முயற்சிகள் மேற் கொண்டார்.

1845ஆம் ஆண்டில் போலந்தில் கத்தோலிக்கர்கள் கொல்லப்படுவதை எதிர்த் துக் குரல் கொடுத்தார். போப் பாண்டவர் பதவியில் பல இன்னல்களைத் தொடர்ந்து சந்தித்த போதிலும் பாமர மக்களுக்கு உதவ வேண் டும் என்கின்ற எண்ணம் அவர் உள்ளத்தில் எப்போதும் துளிர் விட்டுக் கொண்டேயிருந்தது.

போப் கிரிகோரி 1846-ம் ஆண்டு கர்த்தருக்குள் நித்திரை எய்தினார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டகாசமான ஓர் உவமை, ஆம், ஆடு மேய்ப்பவர் பற்றி ஆண்டவர் இயேசு சொன்ன ஒரு கதை. உலகம் முழுவதும் உயர்வாகக் கருதுகின்றது இதனை. ஏன் தெரியுமா? இஸ்ரயேல் நாட்டில் இயேசு வாழ்ந்த காலத்தில் ஆடு மேய்ப்பது ஓர் அருமையான பணி.

ஆடுகளை மேய்க்கின்றவருக்குப் பெயர் ஆயர். தங்களது ஆடுகளை மிகவும் பக்குவமாகவும் இதமாகவும் அவர்கள் நடத்துவார்கள். தங்களுடைய உறவுக்காரர்களைப் போல அவற்றை நடத்துவார்கள். நாள் கணக்காக, வாரக்கணக்காகத் தம் ஆடுகளோடு தங்கியிருப்பார்கள்.

கொடிய விலங்குகளிடமிருந்தும் இயற்கைச் சீற்றங்களிலிருந்தும் அவற்றைக் காப்பாற்ற தங்கள் உயிரையே கொடுப்பார்கள். ஆடுகளும் தங்கள் மேய்ப்பர்களின் குரலுக்குச் செவிமடுத்துக் கீழ்ப்படியும். ஓர் ஆடோ, குட்டியோ காணாமல் போய் விட்டால் அவற்றை தேடிக் கண்டுபிடிப்பார்கள். இயேசு ''நானே நல்ல ஆயன்'' என்கின்றார். அந்த அளவுக்கு நம் மேல் மிகுந்த அன்பும், அக்கறையும் கொண்டுள்ளார். தமது ஆடுகளாகிய நமக்காகத் தம் உயிரையே கொடுத்தார். இன்றும் நம்மைத் தேடும் ஆயனாக இயேசு வருகின்றார். நாமும் ஆயனுக்கேற்ற ஆடுகளாவோமா!

## அமுதமொழிகள்

★ ''கடவுளே! என் விண்ணப்பக் குரலைக் கேட்டருளும்... பொல்லாரின் சூழ்ச்சியினின்றும், தீயோரின் கூட்டத்தினின்றும் என்னை மறைத்துக் காத்திடும்'' **(திபா 64:1-2).**

★ ''நேர்மையாளர் ஆண்டவரில் அகமகிழ்வர். அவரிடம் அடைக்கலம் புகுவர். நேரிய உள்ளத்தோர் அவரைப் போற்றிடுவர்'' **(திபா 64:10).**

# ஆண்டவர் இயேசுவே நல்ல ஆயர்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னம்மா பாட்டி முதியோர் பென்ஷன் தொகையில்தான் தமது வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருந்தார். அந்த மாதம் 10ஆம் திகதி ஆகியும் பணம் வரவில்லை. தட்டுத் தடுமாறி மாவட்ட சமூகநல அலுவலகத்தை அடைந்தார்.

''ஐயா ராசா, மாசாமாசம் எனக்கு வர்ர பென்சன் காசு இந்த மாசம் இன்னும் வரல, மேலுக்கு வேற நல்லா இல்ல, கையில காசு இல்லாததுனால டாக்டர்ட்டயும் போக முடியல, கொஞ்சம் பெரிய மனசு வச்சு எனக்குச் சீக்கரம் பணத்த அனுப்புங்க,





# அநியாய சம்பாத்தியம் அதிரடியாய் செலவாகும்

ஒங்களுக்குக் கோடி புண்ணியம்'' என்று அங்கலாய்த்தார்.

அந்த செக்ஷனுக்குப் பொறுப்பாயிருந்த மைக்கேல் தமது இருக்கையை விட்டு எழுந்து, அந்தப் பாட்டி பக்கத்தில் வந்து மெதுவாக ''அம்பது ரூபா குடுங்க'' என்றார். அன்னம்மாள் பாட்டி தனது சுருக்குப் பையில் கைவிட்டுக் கஷ்டப்பட்டுத் துளாவி இருபது ரூபாயை அவரிடம் கொடுத்து விட்டு, மீதி முப்பது ரூபாயை பென்சன் பணம் வந்த பிறகு தருவதாகச் சொல்லிச் சென்றார்.

அவர் சென்றவுடன் மைக்கேல் பக்கத்து மேஜை யில் அமர்ந்திருந்த சுரேஷ், ''பாவம் அந்தப் பாட்டிகிட்டப் போய் பணம் கேக்குறது பாவ மில்லையாடா, அதுவும் பென்சன் பணம் நேத்தே அனுப்பிட்ட, அப்புறம் ஏண்டா இப்புடி...'' என்று அவரைக் கடிந்து கொண்டார்.

அடுத்த நாளே அன்னம்மாள் பாட்டி அவர் சொல்லியிருந்தது போலவே முப்பது ரூபாயோடு வந்து மைக்கேலிடம் நீட்டினார். மைக்கேல் அவர் அருகில் வந்தார். ஏற்கனவே அவர் வாங்கியிருந்த ரூபாயை இருபதை எடுத்துப் பாட்டியிடம் திருப்பிக் கொடுத்தார்.

''கடவுளு எனக்கு ஒரு நல்ல பாடம் கற்பிச்சுட்டாரு, பாட்டி, நேத்து என் சின்ன மகளுக்கு பயங்கர வயித்துவலி வந்து, சுருண்டுட்டா. ஆஸ்பத்திரிக்குத் தூக்கிட்டு போனோம், முந்நூறு ரூபா செலவாயிருச்சு என்று வேதனையோடு விவரித்தார்.

இதைச் சொல்லும் போதுதான் அவரது ஆசிரியர் பல வருடங்களுக்கு முன் சொன்னது நினைவுக்கு வந்தது.

''அநியாயமாச் சம்பாதிக்கிற ஒவ்வொரு ரூபாய்க்கும் ஆயிரம் மடங்கு செலவு வரும்''!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 179ஆம் ஆண்டில் காலடி பதிக்கும்

## பருத்தித்துறையின் புதுமைமிக்க தலம்!

**வடமராட்சி பருத்தித்துறை 4 ஆம் குறுக்குத் தெருவில் விசாலமான ஆலயமாக வானுயர உயர்ந்து நிற்கின்றது பாதுவா நகர் புனித அந்தோனியார் தேவாலயம்.**

இவ்வாலயம் 25 பரப்பு நிலத்தினைக் கொண்டு, 1833 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட பழைமையான ஓர் ஆலயம். 179 ஆம் ஆண்டில் காலடி வைத்துள்ள இந்த ஆலய வரலாறு இதுதான்:

ஆலயத்தின் கிழக்குப் பக்கத்தில் லூர்து அன்னை ஆலயமும் தும்பளை கிராமமும் மேற்கினிலே பருத்தித்துறை நகரமும் வட திசையிலே கடலலை தாலாட்டும் புனித தோமையார் ஆலயமும் முனைக் கிராமமும் தெற்கினிலே மருதங்கேணி பிரதான வீதியும் உள்ளன.



காலனித்துவ காலத்தில், குறிப்பாக டச்சுக்காரர் காலத்தில் கத்தோலிக்க மக்கள் பல இன்னல்களுக்குள்ளாகினர், மத வழிபாட்டுத் தலங்கள் இடித்து நொறுக்கப்பட்டன. அதனால் அன்றைய காலத்தில் மறைவான இடத்திலேயே ஆலய வழிபாடுகள் நடத்தப்பட்டன. 1656 - 1794 ஆண்டு காலப்பகுதிகளில் குருவானவர்கள் தம்மை இனங்காட்டிக் கொள்ளாமல் நாடோடிகளாகவும் வழிப்போக்கர்களாகவும் வியாபாரிகளாகவும் மாறுவேடம் பூண்டு கத்தோலிக்க வழிபாடுகளை நடத்தி வந்தனர்.

இவ்வாறு பலரோடும் வந்த ஒருவர், இன்றைய பருத்தித்துறை 4 ஆம் குறுக்குத் தெருவில் உள்ள மில் எதிர் ஒழுங்கைப் பகுதிக்கு வந்தார். களைப்புற்றிருந்த அவர், இன்று பலாமரம் உள்ள காணியில் வாழ்ந்த குடும்பத் தலைவியிடம் ஓர் இளநீர் தருமாறு கேட்டார். அவரோ, அதில் உள்ள இளநீர் தமது சிவனுக்குப் படைத்த பின்பு தான் ஏனையோருக்குத் தர முடியும் எனக்கூறி மறுத்துவிட்டார்.

அப்போது அங்கு வந்த குடும்பத் தலைவன், நடந்ததையறிந்து 'தாகத்துக்கு இளநீர் கொடுக்காவிட்டால் கடவுளே நம்மைத் தண்டித்து விடுவார்' என்று கூறி அவருக்கு இளநீர் கொடுத்தார்.

அவர் அதனைப் பருகித் தாகம் தீர்த்த பின்பு, அக்குடும்பத்துக்கு நன்றி தெரிவித்து விட்டு தனது பையில் இருந்த பொதி ஒன்றை எடுத்து, 'இதனைப் பத்திரமாக வைத்திருங்கள் நான் பின்பு திரும்பி வரும் பொழுது எடுத்துச் செல்கிறேன்' என்று கூறிவிட்டுச் சென்று விட்டார்.

அந்தப் பொதியைக் கொண்டு போய் அவர்கள் பெட்டிக்குள் பத்

# புனித அந்தோனியார் ஆலயம்!

- நிசாந்தினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரமாக வைத்தார்கள். இரவு நித்திரையின்போது, அந்தக் குடும்பத் தலைவர், திடுக்கிட்டு எழுந்தார். வந்தவர் தந்த பொதி குறித்த கனவு ஒன்றைக் கண்டதாக அவர் கூறினார். உள்ளே சென்று பெட்டியைத் திறந்து, பொதியைப் பிரித்து பார்த்த போது, அதனுள் ஒரு சுரூபம் பிரகாசமாக இருக்கக் கண்டு, பயந்து, அருகில் உள்ள கிணற்றுக்குள் போட்டு விட்டு உறங்கி விட்டார்.

அதிகாலை சென்று பார்த்த போது, கிணற்றில் உள்ள நீர் பொங்கிக் கொண்டிருக்கக் கண்டார். இதனால் அவர்கள் மேலும் பயமடைந்து, நடந்த அதிசயத்தை கத்தோலிக்க பாதிரியார் ஒருவரிடம் தெரிவித்தனர். உடனே அவ்விடம் வந்த பாதிரி



யார், கிணற்று நீர் பொங்கிக் கொண்டிருப்பதை அவதானித்து அதன் முன் முழங்காற் படியிட்டுச் செபித்தார். அதன்பின் கிணற்று நீரின் நுரை அடங்கியது. மக்கள் ஆச்சரியமடைந்தனர்.

குடும்பத் தலைவர் கிணற்றில் இறங்கித் தாம் போட்ட சுரூபத்தை எடுத்து வந்து செபித்த பாதிரியாரிடம் கொடுத்தார். அவர் அதை வாங்கி வணங்கி விட்டு, 'இது நன் நா அழியா வரம் பெற்ற புனித அந்தோனியாரின் திருச்சுரூபம்' என்று கூறிவிட்டு அதனை எடுத்துச் சென்றார்.

மதக் கலவரம் ஒழிந்து, 1802 இல் மக்கள் விடுதலையடைந்ததும், திருச்சுரூபத்தைக் கொண்டு சென்ற பாதிரியார் மீண்டும் அதனை அந்தக் குடும்பத் தலைவரிடம் கொடுத்தார். அதன் பின், அந்தத் தம்பதியர் இருவரும் மதம் மாறினர். இருவருக்கும் ஞானஸ்நானம் கொடுத்து அந் தோனி, திரேசா என்று அவர்களுக்குப் பாதிரியார் நாமமிட்டார். ஒரு குடிசை அமைத்து, அதில் திருச்சுரூபத்தை வைத்து வழிபட்டு வாருங்கள், நன்மை உண்டாகும் என்று கூறிச் சென்றார் பாதிரியார்.

பின்பு ஒழுங்கையில் உள்ள பலாமரம் அமைந்த இடத்தில் அந்தோனி குடும்பத்தினர் குடிசை அமைத்து புனித அந்தோனியாரின் சுரூபத்தை வைத்து வழிபட்டு வந்தனர். அவரைத் தொடர்ந்து அவரது உறவினர்களும் கத்தோலிக்கச் சமயத்தில் இணைந்து புனித அந்தோனியாரை வழிபட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

புதுமை நிறைந்த கிணறு இன்றும் அங்குள்ளது. சுரூபத்தை முதன் முறையாக பெற்றுக் கொண்ட கோயில் வளவாளரான அந்தோனியின் தலை முறையில் இருந்து ஏழு தலைமுறை வரை இன்று இப்பதியைச் சூழவுள்ள குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

சிற்றாலயமாக புனித அந்தோனியார் ஆலயம் ஆரம்பிக்கப்பட்டு 200 ஆண்டுகளுக்கு மேலாகின்றன. ஆலயத்தைப் பராமரித்தவர்கள், கட்டிடக் கலை, சிற்பவேலை, இசைத்துறையிலும் நல்ல ஈடுபாடு உள்ளவர்களாகச் சிறந்து விளங்கியதால், தற்போதைய பருத்தித்துறை 4 ஆம் குறுக்கு வீதியில் நிலம் ஒன்றை வாங்கி சுண்ணாம்பினால் அமைக்கப்பட்ட ஆலயத்தை 1833 ஆம் ஆண்டு அமைத்தார்கள்.

காலப் போக்கில் ஆலயம் பழுதடைந்து போகவே, 1896 இல் அதனோடு இணைந்த அறை வீடு மீண்டும் புனரமைக்கப்பட்டது என்பதை நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் வெளியிட்டுள்ள புத்தகத்தில் தெளிவுபடுத்தியுள்ளார்.

இதனோடு பாடசாலை ஒன்று வளவுக்குள் இயங்கியது. இது திருச்சபையால் வழி நடத்தப் பட்டது என்பதை அறியக்கூடியதாகவுள்ளது. பின்னர் இப்பாடசாலை 1952 ஆம் ஆண்டு இடமாற்றப்பட்டது. தொடர்ந்தும் புனித அந்தோனியர் ஆலயம் பழுதடைந்து போகவே 1932 ஆம் ஆண்டு அப்போது பங்குத்தந்தையாய் இருந்த அருட்திரு அல்போன்ஸ் குரூஸ் அடிகளாரின் ஆலோசனைப்படி கட்டிடக் கலைஞர் ஞானப்பிரகாசம் தேவ சகாயம் தலைமையில் ஆலய பங்கு மக்கள் ஒன்றிணைந்து பின் பகுதியை உடைத்து அத்திவாரமிட்டனர்.

கட்டிடக்கலைஞர் வைத்தி சந்தியாப்பிள்ளை அவர்களின் தலைமையில் நிர்மாணப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து, பெரிய கோயிலும் உடைக்கப்பட்டு, 1960 ஆம் ஆண்டு மக்கள் வழிபாட்டுக்கேற்ப ஒரு பகுதி கட்டி முடிக்கப்பட்டது.


1976 ஆம் ஆண்டில் முழு வேலையும் நிறைவடைந்தது. தொடர்ந்து பலிபீடம், அந்தோனியார் கூடு, பின் பீடம், மாபிள் பதிப்பு என்பன நடைபெற்றன.

179 ஆம் ஆண்டில் காலடி எடுத்து வைத்துள்ள இவ்வாலயத்தை மேலும் மெருகூட்டும் வகையில் ஆலய திருப்பணி வேலைகள் இவ்வாண்டு ஆரம்பமாகி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. 179 ஆண்டுகள் (1833 2012) பழைமைவாய்ந்த இவ்வாலயம் புதுப்பொலிவு பெற்று மேலும் மெருகேற புனித அந்தோனியாரிடம் அருள்வரம் வேண்டுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை



# தொடரும் உறவுகள்

*சிங்கை அருள்ராஜ்*

**"என்னங்க, உங்க அக்கா திருச்சியிலிருந்து போன் பண்ணினாங்க"**

**"என்ன சொன்னா?" என வினவினார் செபாஸ்டின். "நம்ம மருமகப்பிள்ளைகளுக்கு லீவு விட்டாச்சாம். அடுத்த வாரம் குடும்பத்தோட வர்றதா சொன்னாங்க" என்றாள்.**

"விண்ணரசி... அந்தக் குரங்குக் கூட்டம் வந்தா வீட்டை அதகளம் பண்ணிப்போடுமே... மனுசனை நிம்மதியா இருக்க விடமாட்டாங்களே" என்று புலம்பினார் செபாஸ்டின்.

"சின்னப் பிள்ளைங்க ஆசையா வர்றாங்க. அவங்களைப் போயி குரங்கு... அது இதுன்னு சொல்றீங்களே... நம்ம வீட்ல இருக்கறதுகள்... குறைஞ்ச குட்டிகளா" என்றாள் விண்ணரசி.

அதுக்குத்தானே பயப்படறேன். இதுகளே சீமை வாலுங்க... காணாக்குறைக்கு அதுக வேற வந்து நம்மை உண்டு இல்லைன்னு பண்ணப் போறதை நெனச்சா எனக்கு குலைநடுங்குது" "எதுக்கு எடுத்தாலும் டென்சன் தான்... கூடப் பிறந்த அக்காவும் பிள்ளைகளும் வர்றது உங்களுக்கு பொறுக்கலியா"

"உனக்கென்ன உன் மைனி காரிகூட ஊர் சுற்றலாம்னு பார்க்கிறே..."

"ஆமா... அப்படியாவது நம்ம குழந்தைகளும் நாலு இடத்துக்குப் போயி மகிழ்ச்சியாய் இருப்பாங்கல்ல."

"சரிசரி பலசரக்கு சாமான் வாங்கணும்னு சொன்னியே... லிஸ்ட் எழுது" என்றார். விண்ணரசி பலசரக்குக்கான லிஸ்ட் தயார் செய்தாள். விருந்தினர் வருவதால் எல்லாமே கொஞ்சம் அதிகம்தான். லிஸ்டைப் பெற்றுக்கொண்டவர் முணங்கிக்கொண்டே பலசரக்குக் கடைக்கு விரைந்தார்.

தகப்பனார் தலைமறைந்ததும் ஓடிவந்த பனிமலர் "அம்மா... அம்மா... அத்தை எப்ப வருவாங்க... அக்கா, அண்ணன்லாம் வருவாங்கல்ல" என்று கேட்டாள்.

"ஆமாடி செல்லம்" என்றாள் விண்ணரசி. கிரிக்கெட் மட்டையுடன் வந்த பனிராஜிடம் "அண்ணே நம்ம அத்தை, மாமால்லாம் வரப் போறாங்க" என்றாள்.

"அப்படியா... அய் ரீகன்கூட நல்லா கிரிக்கெட் விளையாடலாம்" என்று மட்டையை வீசியபடியே சென்றான்.

வீட்டைச் சுத்தம் செய்வது, தேவையற்ற குப்பைகளை அப்புறப்படுத்துவது, பழைய பேப்பர்களை எடைக்குப் போடுவது என்று இந்த வாரம் முழுவதும் விண்ணரசி பிஸியாக இருந்தாள். செபாஸ்டின் மண்டை காய்ந்து போயிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்நிலைப் பள்ளி ஆசிரியர் ஆகையால் விடைத் தாள் திருத்தும் பணி வேறு அவரை சிரமத்துக் குள்ளாக்கியது.

''விண்ணரசி, தலை விண்விண்னென்று தெறிக் குது. சூடா காபி கொண்டுவா'' என்றார். ''ஒரே யடியா பேப்பர் திருத்தாதீங்க... கொஞ்சம் ரெஸ்ட் எடுங்க'' என்றாள். ''ஓய்வா, அந்த வாலுங்க வர்ற துக்குள்ள பேப்பர் திருத்தியாகணும். ஹெட்மாஸ் டர் வேற ஸ்டிரிக்டா சொல்லியிருக்கார். பத்து நாளுக்குள்ளே பேப்பர் குடுத்தாகணும்'' என்றார்.

பிள்ளைகள் எதிர்பார்த்த நாளும் வந்தது. பேக் சகிதமாக வந்து சேர்ந்தார்கள் ஜீலியும் அவள் பிள் ளைகள் ரீகனும், ரீனாவும்.

''மைனி வாங்க... வாங்க பசங்களா என்று முகமலர்ச்சியுடன் வரவேற்றாள் விண்ணரசி.

''வாம்மா... என்ன அத்தான் வரலியா'' என்று ஒப்புக்கு கேட்டு வைத்தார் செபாஸ்டின்.

''இல்ல தம்பி அவருக்கு லீவு கிடைக்கல'' என் றாள். செபாஸ்டின் கடைக்கு சென்று குளிர்பானம் வாங்கி வந்தார்.

இரு குடும்பத்தினருக்கும் மகிழ்ச்சி இல்ல. பிள்ளைகள் மாடிப்படியில் தடதடவென ஏறி மாடிக்குச் சென்று கும்மாளமடித்தனர். செபாஸ்டின் நன்றாகப் பல்லைக் கடித்தார். வேறு என்ன செய் வது? பிள்ளைகளை எச்சரித்துக் கொண்டேயிருந் தார். விண்ணரசிதான் அடிக்கடி குறுக்கிட்டு அவ ரைச் சாந்தப்படுத்தினாள். அன்று இரவு 10 மணி வரை விண்ணரசியும், ஜீலியும் குடும்ப விசயங் களைப் பரிமாறிக் கொண்டிருந்தனர். பிள்ளைகள் டிவி பார்த்துக் கொண்டிருந்தனர். செபாஸ்டின் பத்து மணிக்கே தம் அறைக்குள் சென்று படுத்துக் கொண்டார். மறுநாள் டேம் பார்க்கச் செல்வதாக ஏற்பாடு.

காலையில் டிபன் சாப்பிட்டு முடித்ததும் தக் காளிச் சாதம் தயாரித்தார்கள். 11 மணிக்குக் குளிப் பதற்கான ஆயத்தத்தோடும், மதிய சாப்பாட்டைக் கையிலெடுத்துக் கொண்டும் காரையார் பஸ் ஏறி டேமுக்கு வந்தார்கள். குழந்தைகள் மகிழ்ச்சியால் ஆர்ப்பரித்தார்கள். பக்கத்தில் பெண்கள் பொரித்த மீன் விற்பனை செய்து கொண்டிருந்தனர். அதைக் கேட்ட குழந்தைகளுக்கு செபாஸ்டின் வாங்கிக் கொடுத்தார். பின்னர் சேர்வலாறு அணைக்குச் சென்றனர். அங்கே பூங்காவில் ஊஞ்சல் துலாப் பலகை, சறுக்கு என்று ஓடியாடி விளையாடினர். சாப்பிட ஆரம்பித்தனர்.

நாலா பக்கங்களிலிருந்தும் குரங்குகள் வந்து தொந்தரவு கொடுத்தன. செபாஸ்டின் ஒரு நீண்ட குச்சியைக் கையிலெடுத்து விரட்டினார். அங்கி ருந்து பேருந்தில் அகஸ்தியர் அருவி வந்தனர். ஆனந்தக்குளியல் போட்டனர். இந்தக் கோடை வெயிலுக்கு இந்த அருவிக் குளியல் இதமாக இருந்தது.

கோடை மழையின் காரணமாக குற்றாலத்தில் அருவிகளில் ஓரளவு தண்ணீர் விழுந்தது. மறு நாள் குற்றாலத்தில் கும்மாளமிட்டனர். செபாஸ் டின் செய்வதறியாது திகைத்தார். வேண்டா விருப்பாக உடன் சென்றார். இரவு மனைவி யிடம் பேசிக் கொண்டிருந்தார். ''ஜீலி இன்னும் எத்தனை நாளைக்கு இங்கு தங்கப்போகிறாளோ'' என்று ஆதங்கப்பட்டார். ''அதுக பாட்டுக்கு விரும் புற வரைக்கும் இருந்துட்டுப் போகட்டும்'' என்றாள் விண்ணரசி.

''புருசன்காரன் பொண்டாட்டிய அனுப்பிட்டு ஹாய்யாக அங்கே இருந்துக்கிட்டான்'' என்றார். தற்செயலாக அந்தப்பக்கமாக வந்த ஜீலி காதில் இந்த வார்த்தைகள் விழுந்தன. செபாஸ்டின் அமை தியானார். ஜீலியின் மனம் உடைந்து போனது. தம்பியின் ஆதரவு நன்றாயிருக்கும் என்று வந்த வளுக்கு, ஏன் வந்தோம் என்று ஆகி விட்டது. கணவனுக்கு போன் செய்தாள். நாளை புறப்பட்டு வருவதாகக் கூறினாள். இந்நேரம் ரீகன் அம்மா வின் கையிலிருந்த செல்போனில் ஸ்பீக்கரை ஆன் செய்தான். எதிர் முனையிலிருந்து ஜீலியின் கண வர் பேசினார்.

''ஏண்டி... தம்பி வீட்டுக்குப் போயி இருபது நாள் ஜாலியா இருக்கப் போறேன்னு சொன் னியே... நாளு நாள்ல விருந்து முடிஞ்சி போச்சா... உன் தம்பி கூறுதான் எனக்குத் தெரியுமே. அவன் வெறும் கருமில்லா... எண்ணி எண்ணி பார்த்து செலவு பண்ணுவானே'' என்று செபாஸ்டினை அர்ச்சனை செய்தார். இதைக் கேட்க நேர்ந்த செபாஸ்டினுக்கு பக்கென்றது. அவமானத்தால் உடல் கூசிற்று.

மறுநாள் காலையில் அத்தானுக்கு போன் செய் தார் செபாஸ்டின்.

''அத்தான் சௌக்கியமாயி ருக்கியளா... நீங்க வராதது எங்களுக்கு மனசுக்குக் கஷ்டமாயிருக்கு... அக்காவும், மருமகப்பிள்ளைகளும் கோடை விடு முறை முழுசும் இங்க இருக்கட்டும்... நீங்களும் வாருங்கள்'' என்றார். ஜீலியும் விண்ணரசி யும் ஆனந்தத்தால் கட்டித்தழுவினர்.

## அமுதமொழிகள்

★ ''கடவுளே! சீயோனில் உம்மைப் புகழ்ந்து பாடுவது ஏற்புடையது. உமக்குப் பொருத்தனைகள் செலுத்துவதும் சால்புடையது'' (திபா 65:1)

★ ''எங்கள் மீட்பின் கடவுளே, உமது நீதியின் பொருட்டு எங்கள் மன்றாட்டுக்கு மறுமொழி பகர்கின்றீர்'' (திபா 65:0)

★ ''அனைத்துலகோரே! கடவுளைப் போற்றி ஆர்ப்பரியுங்கள். அவரது பெயரின் மாட்சியைப் புகழ்ந்து பாடுங்கள்'' (திபா 66:1-2).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கோபத்திற்கு மருந்து

- என். தானியேல் தாசன்



**“டாக்டர் நீங்க எனக்கு வந்த வியாதியையெல்லாம் குணப்படுத்தி விட்டீங்க. இந்த கோப வியாதியை போக்க ஏதாவது மாத்திரை மருந்து ஏன், ஊசியானாலும் போடுங்க டாக்டர். இந்த கோபத்தால் வீட்டில் தினமும் சண்டைதான்'' என வடக்குத் தெரு அம்மா டாக்டர் முகத்தைப் பார்த்தார்கள்.**

''அம்மா, விஞ்ஞானிகள் புது புது வியாதிக்கு புது புது மருந்து கண்டுபிடிக்கிறார்கள். இந்த கோபத்திற்கு மருந்து கண்டுபிடித்த பின் சொல்லுகிறேன். அப்படி ஒரு மருந்து கண்டுபிடித்து விட்டால் எனக்கும் ஏகப்பட்ட வருமானம் வந்து விடும்; குடும்பங்களில் சண்டையும் ஒழியும் என டாக்டரும் தன் தத்துவத்தைக் கூறினார்.

''என்னங்க டாக்டர் இந்த கோப வியாதி எங்க தாத்தாவுக்கு முன்னால் இருந்து இருக்குது. இதுமட்டும் இதற்கு மருந்து கண்டு பிடிக்கவில்லையா? அப்ப இதற்கு என்ன வழி டாக்டர்'' என வடக்கு தெரு அம்மா மன கவலையுடன் கேட்டார்கள்.

டாக்டரும் இது என்ன சோதனையாய் இருக்கே என எண்ணிக் கொண்டே, ''அம்மா உங்க போதகரிடம் கேட்டா அவர் ஏதாவது வழி சொல்லுவார்'' என கூறி அனுப்பி விட்டார்கள்.

வடக்கு தெரு அம்மா போதகர் வீடு சென்று, 'ஐயா' என சத்தம் கொடுத்தார்கள். போதகரும் வந்து, 'என்னம்மா இப்படி உட்காருங்கள்' என கூறி 'என்ன விசயம்' எனக் கேட்டார். ''ஐயா இந்த கோப வியாதி போக ஏதாவது மருந்து இருக்கா என டாக்டரிடம் போனேன். இன்னும் மருந்து கண்டுபிடிக்கவில்லை. போதகரிடம் ஆலோசனை கேட்டுப் போங்கள் என சொன்னார்கள். அதனால் இங்கு வந்தேன்'' என்றார்கள்.

போதகர் உடனே, ''டாக்டர் சொன்னது உண்மைதான். ஏனென்றால் மனிதன் நல்ல வழியில் வளர்வதற்கு தேவன் கோபத்தின் தூதனை அனுப்பி இருக்காரு. அந்த தேவனிடம் நீங்க தொடர்பு வைத்துக் கொண்டால் கோபப் பிசாசு வர பயப்படும்.''

''ஐயா, கோவித்துக் கொள்ளாதீங்கள். அந்த கோபதூதன் அதுதான் அந்த கோப பிசாசு எப்படி இருப்பான்? அவனது அடையாளத்தைச் சொன்னால் என் வீட்டு துடைப்பத்தால் அடித்து விரட்டி விடுகிறேன்'' என வடக்கு தெரு அம்மா கேட்டார்.

''அம்மா, அவன் உங்க துடைப்பத்தின் வழியிலும் வந்து உங்களை கோபப் படுத்தி விடுவான்.''

''அது எப்படி?'' என அந்த அம்மா கேட்டார்.

''சிலபேர் துடைப்பத்தைக் கொண்டு வீட்டைப் பெருக்கும்போது உங்க வீட்டுக் கோழி அசிங்கப்படுத்தும். உடனே அந்த துடைப்பத்தால் அதை வீசி எறிவீர்கள். அந்த நேரம் தெருவில் போகிறவர்கள் மேல் விழுந்து விடும் அவ்வளவுதான். இருவர் கோபம் பெரிதாகி சண்டை போட்டு பொலிஸார் ஸ்டேஷனுக்கே போய் விடுவீர்கள்'' என போதகர் கூறி முடிக்கும் முன்னர், ''ஆமா ஐயா... ஆமா ஐயா... இப்படி எங்க பக்கத்துத் தெருவில் நடந்து விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படியென்றால் என் கோபம் போக என்னய்யா வழி?.

''நான் சொல்லும் லேசான வழியைக் கேளுங்கள் ''உங்க வீட்டில் வேதபுத்தகம் இருக்கா?''

''இருக்கிறது ஐயா, எனக்கு வசனத்தை எடுத்துப் படிக்கத் தெரியாதே'' என்றார்கள். 'அப்படி யென்றால் உங்கள் தெருவில் உள்ள வாத்தியாரிடம் உங்களுக்கு கோபம் வரும்போது உங்க பைபிளைத் தூக்கிக் கொண்டு போய் பிரசங்கி-7:9ஆம் வசனத்தை படிக்கச் சொல்லுங்க' அவர் படித்த வசனத்தை சொல்லிக்கொண்டே வீட்டுக்குப்



## பல்லியின் பாசம்

ஜப்பான் நாட்டினர் பூகம்பத்தி லிருந்து பாதுகாப்பாக வாழ மரப் பலகைகளால் வீட்டை அமைக்கி றார்கள். ஜப்பானியர் ஒருவர் ஐந்து ஆண்டுகளுக்கு முன் கட்டிய தன் வீட்டைப் பழுதுபார்க்க மரச்சுவரைப் பெயர்த்தெடுத் தார். அங்கே ஒரு புதுமை யான நிகழ்வைக் காண முடிந்தது. மரப்பலகையில் ஒரு பல்லி அசையாமல் பலகையைப் பற்றிக் கொண்டிருந்தது. ஒரு குச்சியால் நகர்த்திய போதும் அது நகர வில்லை. அருகில் சென்று உற்றுப்பார்த்த போதுதான் பல்லி யின் ஒரு கால் பலகையோடு சேர்த்து ஆணி யால் அடிக்கப்பட்டிருப்பது தெரிந்தது.

ஐந்து ஆண்டுகளுக்கு முன் அறியாமல் நிகழ்ந்த தவறுதான். ஆனால் பலகையின் இடுக்கில் இந்தப் பல்லியால் எப்படி உயிர் வாழ முடிந்தது? வியப்போடு வெகுநேரம் பல்லியை கவனித்துக் கொண்டிருந்த போது அந்தப் புதுமை நிகழ்ந்தது. மரச்சுவரின் மற்றொரு பக்கத்திலிருந்து வேறொரு பல்லி வந்தது. அதன் வாயில் இரை இருந்தது. மெதுவாக வந்த பல்லி சிறைப்பட்டிருந்த பல்லியின் வாயில் உணவை வைத்தது.



இந்தப் பல்லிக்கு இருக்கிற பரிவும், பாசமும் மனிதர்களுக்கு இல்லையே என்று வருந்தினார் அந்த ஜப்பானியர்.

★★★

போங்க. வீட்டுக்கு போனதும் கோபம் போய் விடும்.

''இதுதான் கோபம் போகிறதற்கு நல்ல வழி'' என கூறிய போதகரின் ஆலோசனையைக் கேட்டு வடக்கு தெரு அம்மா அப்படியே செய்தார். சில மாதங்கள் கழித்து அந்த அம்மாவைப் போதகர் பார்த்த போது ''உங்க கோப வியாதி எப்படி அம்மா இருக்குது?'' என கேட்டார்கள்.

''ஐயா இந்த வசனத்தோடே நானும் கோபப்படும் ஆத்துமா சாகும் என சொல்லிக் கொண்டேன். இப்ப கோபத்தில் நல்ல வெற்றி கிடைத்து விட்டது. உங்கள் ஆலோசனைக்கு மிக்க நன்றி'' என வடக்குத் தெரு அம்மா கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்ற மகனையே பலி கொடுக்க முன்வந்த ஆபிரகாம்!

சேவியர்

**கடவுள் ஆபிரகாமிடம் 'உன் சந்ததியை நான் வளப்படுத்து வேன் என்று மீண்டும் உன்னிடம் கூறுகிறேன்' என்று சொல்லிவிட்டு விடைபெற்றார்.**

கடவுள் ஆபிரகாமுக்குக் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றினார். சாரா கருத்தரித்தாள்.

சாராவால் இதை நம்பவே முடியவில்லை. கடவுளின் வல்லமையை நினைத்து நினைத்து விழிகளை மூடாமல் வியந்து கொண்டிருந்தாள். அவளுடைய மனதுக்குள் நீண்ட காலமாக இருந்த வருத்தம் சட்டென்று விடைபெற்றோடியது. அளவில்லா ஆனந்தத்தில் ஆபிரகாமும், சாராளும் கடவுளை இடைவிடாமல் போற்றிப் புகழ்ந்தனர்.

குறிப்பிட்ட காலத்தில் சாரா ஒரு மகனைப் பெற்றெடுத்தாள். கடவுளின் அருளினால் முதிர்ந்த வயதிலும் தன்னால் குழந்தை பெற முடிந்ததை எண்ணி எண்ணி சாரா வியந்தாள். கடவுளின் கட்டளைப்படி மகனுக்கு ஈசாக் என்று பெயரிட்டனர்.

ஈசாக் பிறந்தபோது ஆபிரகாமுக்கு வயது நூறு.

தங்களுக்குக் குழந்தை பிறந்த மகிழ்ச்சியில் சாராவும் ஆபிரகாமும் ஆனந்தமாய் நாட்களைக் கொண்டாடினார்கள். ஈசாக்கை அவர்கள் மிகவும் செல்லமாக வளர்த்தார்கள்.

ஈசாக் தாய்ப்பால் குடிப்பதை நிறுத்திய நாளில் ஆபிரகாம் மிகப் பெரிய விருந்து ஒன்றை ஏற்பாடு செய்தார். தடபுடலான விருந்து. ஆபிரகாமுக்குத் தெரிந்த அனைவரும் விருந்துக்கு அழைக்கப்பட்டிருந்தனர். அந்த விருந்தினர் கூட்டத்தினரிடையே சாராவின் பணிப்பெண்ணான ஆகாரின் மகன் சிரித்து விளையாடிக் கொண்டிருந்தான். அதைக்கண்ட சாராவின் மனதுக்குள் பொறாமை துளிர்த்தது. இப்போது தான் எனக்கு மகன் இருக்கிறானே, அடிமையின் மகன் இனி மேல் இங்கே எதற்கு? அவனையும், ஆகாரையும் துரத்திவிட வேண்டும், என மனதுக்குள் திட்டமிட்டாள். நேராக ஆபிரகாமிடம் சென்று,

'நமக்கு ஒரு மகன் பிறந்திருக்கிறானே இனி மேல் இந்த அடிமையின் மகன் நமக்கெதற்கு? அவர்களைத் துரத்திவிடுங்கள்' சாரா ஆபிரகாமிடம் சொன்னாள்.

அவன் சின்னப் பையன். அவன் மேல் ஏன் கோபப்படுகிறாய்? அவனும் இங்கேயே வளரட்டும்.

'இல்லை. ஒரு அடிமையின் மகனும் என்னுடைய மகனும் சம அந்தஸ்தில் வளர்வது எனக்கு அவமானம். அவர்கள் இங்கே இருக்க கூடாது.

'அவனை ஏன் அடிமையின் மகன் என்கிறாய்? அவன் என்னுடைய மகன் அல்லவா?'

'ஓ... அப்படியானால் அந்த மகன் தான் உங்களுக்குத் தேவையா? நானும் என் மகனும் உங்களுக்கு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆண்டவரே உமக்கு நன்றி !

★ ஆண்டவரே, நெருக்கடியான வேளையில் நீர் எனக்கு அரணும் அடைக்கலமுமாயிருந்தீர்.

- உமக்கு நன்றி கூறுகிறேன்

★ ஆண்டவரே, நீர் எனக்குத் துணையாயிருந்தீர்.

- உமக்கு நன்றி கூறுகிறேன்

★ ஆண்டவரே, உமது வலக்கை என்னை இறுகப்பிடித்துள்ளது.

- உமக்கு நன்றி கூறுகிறேன்

★ ஆண்டவரே, மண்ணுலகைப் பேணி, அதன் நீர்வளத்தையும் நிலவளத்தையும் பெருக்கினீர்.

- உமக்கு நன்றி கூறுகிறேன்

இரண்டாம் பட்சம் தானா?' சாரா கோபமடைந்தாள்.

'ஏன் கோபிக்கிறாய். அவன் வளரட்டும். வளர்ந்த பின் வேண்டுமானால் அவர்களை அனுப்பி விடலாம்'

'இல்லை, அவர்கள் இப்போதே போயாக வேண்டும். நம்முடைய அனைத்து சொத்துகளுக்கும் என் மகன் மட்டுமே வாரிசாக வேண்டும். நம்முடைய குலம் இஸ்மாயிலிடமிருந்தல்ல, ஈசாக்கிடமிருந்தே தோன்ற வேண்டும்' சாரா பிடிவாதம் பிடித்தாள்.

'கொஞ்சம் யோசித்துப் பார் சாரா, அவன் என்னுடைய மகன். நீ சொன்னதனால் தானே நான் ஆகார் மூலமாக அவனைப் பெற்றேன். அவன் உனக்கும் மகன் போலத் தானே. உன் முடிவை மாற்றிவிடு' ஆபிரகாம் கெஞ்சினார்.

'இல்லை. ஒன்று அந்த அடிமையும் அவளுடைய மகனும் இங்கே இருக்கவேண்டும். இல்லையேல் நானும், நம் மகனும் இருக்க வேண்டும். எது வேண்டுமென்று நீங்களே முடிவெடுங்கள்' சாரா திட்டவட்டமாகச் சொன்னாள்.

ஆபிரகாம் மிகவும் வருந்தினார். ஆகாரை யும் இஸ்மாயிலையும் வீட்டை விட்டு அனுப்புவதென்று முடிவெடுத்தார். அவர் கடவுளை நோக்கி

'கடவுளே... உமது மகன் இஸ்மாயிலை நான் வீட்டை விட்டு அனுப்புகிறேன். இந்த வீட்டை விட்டு அனுப்பினாலும் உம்முடைய பாதுகாப்பை அவனுக்கு அளித்தருளும். அவனுடைய சந்ததியினரை வளப்படுத்தும்' என்று கண்ணீர் மல்க வேண்டினார்.

கடவுள் ஆபிரகாமிடம், கவலை வேண்டாம் அவனை நான் பாதுகாப்பேன் அவனுக்கு ஒரு மிகப்பெரிய சந்ததியைக் கொடுப்பேன். என்றார், கடவுளின் குரலைக் கேட்ட ஆபிரகாம் மகிழ்ந்தார்.

ஆகாரையும், அவர் மகனையும் வீட்டை விட்டு அனுப்பினார்.

ஆபிரகாமும், அவர் மனைவியும் ஈசாக்கை உயிரினும் மேலாகப் பாவித்து வளர்த்தனர். அவனுடன் விளையாடுவதிலேயே பொழுதைச் செலவிட்டனர். ஈசாக்கின் அழகிலும், திறமையிலும் இருவ ரும் குழந்தைகளாய் மாறி குதூகலித்தனர். அப் போது கடவுள் ஆபிரகாமை சோதிக்க விரும்பி னார்.

கடவுள் ஆபிரகாமிடம், 'ஆபிரகாமே... நீ மகிழ்ச்சியாய் இருக்கிறாயா?' கடவுள் கேட்டார்.

'நீர் என்னோடு இருக்கும் போது எனக்கு என்ன கவலை ஆண்டவரே?'

'இப்போது நீ அதிக மகிழ்ச்சியாய் இருப்பது போல உணர்கிறேன்...'

'ஆம் ஆண்டவரே. நீர் எங்களுக்குத் தந்த அருமை மகன் எங்களுடைய ஆனந்தத்தின் எல்லைகளை அகலமாக்கி விட்டான்.'

'சரி... நீ எனக்காக ஒன்று செய்ய வேண்டும்' கடவுள் கேட்டார்.

'சொல்லும் கடவுளே... செய்யக் காத்திருக்கிறேன்'

'என்ன சொன்னாலும் செய்வாயா?'

'உம்முடைய கட்டளைகளை நான் எப்போதுமே மீறியதில்லையே கடவுளே. இனிமேலும் மீறமாட்டேன்' ஆபிரகாம் சொன்னார்.

'அப்படியானால்... நீ உயிரினும் மேலாக நேசிக்கும் உன் ஒரே மகனை மோரியா நிலப் பகுதிக்குச் சென்று எனக்கு எரிபலி செலுத்த வேண்டும்' என கடவுள் சொல்ல ஆபிரகாம் நிலை குலைந்தார்.

ஆபிரகாமின் இதயம் உடைந்து சிதறியது. தான் உயிரினும் மேலாக நேசிக்கும் தன் மகனை வெட்டி எரித்துப் பலியிடுவதா என உள்ளுக்குள் உயிர் பதறியது. ஆனாலும் கடவுளின் கட்டளைக்குப் பணிய முடிவெடுத்தார். அன்று இரவு முழுவதும் ஆபிரகாமினால் தூங்க முடியவில்லை. தாங்க முடியாத துயரத்தில் தவித்தார்.


மறுநாள் அதிகாலையில் எழுந்து தம் வேலைக்காரர் இருவரை அழைத்து, விறகுகளையும் எடுத்துக் கொண்டு மகன் ஈசாக்கையும் கூட்டிக் கொண்டு கடவுள் குறிப்பிட்டிருந்த இடத்துக்குப் பயணமானார். மூன்று நாட்கள் நடந்து கடவுள் சொன்ன மோரியா நிலப்பகுதியை வந்தடைந்தார்கள்.

- தொடரும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழுநோயாளியை குணப்படுத்திய இயேசு!






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






தொழுநோயால் பாதிப்படைந்த ஒருவரை அவரது நண்பர்கள், மற்றவர்களுக்கு அந்த நோய் பரவாதிருக்க நகரத்திற்கு வெளியே வசிக்குமாறு கூறினார்கள். அந்தப் பகுதியில் இயேசு வருகை தந்திருப்பதாகக் கேள்விப்பட்ட அவர், இயேசு அவருடைய நோயை குணப்படுத்த முடியும் எனவும் நம்பினார். இயேசுவைச் சென்று நேரில் பார்த்து முழங்காலில் தனது நோயை குணப்படுத்துமாறு கெஞ்சினார். இயேசு தொழுநோயாளரைத் தொட்டவுடன் அவரது நோய் முற்றிலும் குணமானது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரான்சின் மைக்கேல் தேவாலயம்

- ஜோஸப் லியோ மனோகரன்.

**பிரான்ஸ் தேசத்தில் அவர்ஜென் என்னுமிடத்தில் ஓர் அழகிய சிறு மலையின்மீது லே பு-என்-வேலே எனப்படும் ஊசி முனை போன்ற மலை உச்சியில் அமைந்துள்ளது "செயின்ட் மைக்கேல் தேவாலயம்".**

ஆச்சரியப்படும்படியாக வானுயர்ந்து நிற்கும் இச்சிறுமலையானது பல்லாயிரம் ஆண்டுகளாக புனிதம் பொருந்திய இடமாகக் கருதப்பட்டது. சரித்திர காலத்துக்கு முன்பாகவே, ஆசிய நாடுகளில் பலவற்றிலும் காணப்பட்ட சுமைதாங்கிக் கல்லைப்போன்ற ஒரு அமைப்பை இங்கு கட்டி அதனை ரோமானியர்கள் மைக்கேல் தேவாலயம் அமைவதற்கு முன்பாகவே 'மெர்குரி'க்கு அர்ப்பணித்தார்கள்.

அவர்ஜென் மலைப்பகுதியின் லே பு எரிமலைப் பாறையானது தெய்வீகமாகக் கருதப் பட்டது, ஏனெனில் அவைதான் முதன் முதலில் அப்பகுதியில் மனிதர்களின் கண்களுக்குப் புலப்பட்டவை.

செயின்ட் மைக்கேல் தேவாலயக்கட்டுமானத்தில் உபயோகப்படுத்தப்பட்டுள்ள மூன்று பெரிய கற்களும் சரித்திர காலத்துக்கு முற்பட்ட மலை உச்சியில் இருந்துவந்த 'டோல்மென்' அமைப்பின் பகுதிகள் என்று சொல்லப்படுகின்றன. கால்களில் இறக்கைகளைக் கொண்ட தூதுவக் கடவுள் 'மெர்குரியை' ரோமானியர்கள் இந்த மலை உச்சியில் வணங்கிவந்தார்கள், பின்னர் இப்பகுதி கிறிஸ்து வமயப்படுத்தப்பட்ட பின் இம்மலையின் பாறை புனிதப்படுத்தப்பட்டு புனித மைக்கேலுக்கு அர்ப்பணிக்கப்பட்டது.

புனித மைக்கேல் தேவாலயம் பிஷப் கொடஸ் கால்க் என்பவராலும் மணியக்காரர் டிரயானஸ் என்பவராலும் 962இல் கட்டி முடிக்கப் பட்டது. ஒரு மத்திய திட்டத்தின்கீழ் ஒரு பிரார்த்தனைக் கூடமாக அமைக்கப்பட்ட தேவலாயம் இது.

இப்புனித தலமானது சதுரவடிவில் ஆன ஒன்றாகும். ''சாண்டியாகோ டி கம் போஸ்டெலா'வுக்கு செல்லுகின்ற வழித்தடத்தில் லேபு ஆரம்ப இடமாக அமைந்திருப்பதால் கிறிஸ்தவ யாத்ரீகர்கள் இப்புனிதத் தலத்துக்கு பெரும் எண்ணிக்கையில் வருகின்றனர். பன்னிரண்டாம் நூற்றாண்டில் தேவாலயக் கட்டிடத்தில் மேற்குப் புறத்தில் மையப் பகுதி, ஒரு மாடப்பகுதி, ஒரு மணிக்கூண்டு முதலியன புதிதாக அமைக்கப்பட்டன.

பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஓவியங்கள் மீண்டும் அதே பாணியில் புதுப்பிக்கப்பட்டு, கூடுதலாகவும் சில ஓவியங்கள் உருவாக்கப்பட்டன. ஆனால் பன்னிரண்டாம் நூற்றாண்டின் இடைக் காலத்தில் கீழே விழுந்துவிட்ட ஆலயத்தின் மணிக் கோபுரம் பத்தொன்பதாம் நூற்றாண்டுவரை மீண்டும் கட்டப்படவில்லை.

1850ஆம் ஆண்டில் பத்து மற்றும் பன்னிரண்டாம் நூற்றாண்டுகளைச் சார்ந்த பழைமை வாய்ந்த வண்ண ஓவியங்கள் தேவாலயத்தின் 'பிளாஸ்டர்களை' பிய்த்து எடுக்கும்போது கிடைக்கப்பெற்றன. பின்னர் ஒரு நூற்றாண்டுக்குப்பின் 1955ஆம் ஆண்டில் தொல்பொருள் ஆய்வாளர்கள் ஒருசில புனிதப் பொருள்களைக் கண்டுபிடித்தனர். அவை தற்போதும் ஆலயத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

மலையின் அடிவாரத்தில் பன்னிரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த புனித கிளயர் தேவாலயம் வெளிப்புற சித்திர வேலைப்பாடுகளுடன் காணப்படுகின்றது. இத்தேவாலயத்தில் ஒரு நுழைவு வாயிலில் பழங்கால மரச் செதுக்கல் முறையில் சந்திரனின் வெவ்வேறு நிலைகள் சித்தரிக்கப்பட்டுள்ளன. தேவாலயம் கட்டப்பட்டுள்ள எரிக்குழம்புப் பாறை இருநூற்று அறுபத்தொன்பது அடி உயரமும், நூற்று எண்பத்தேழு அடி குறுக்களவும், ஐநூற்று அறுபது அடி அடித்தள சுற்றுவட்டமும் கொண்டதாக இருக்கின்றது. ஒரு கல்லாலான வெளிப்புறச் சுவர் ஒரு இயற்கையான பாதுகாப்பை அளிக்கிறது.

மேலும் மிக அழகாகக் கட்டப்பட்டுள்ள பன்னிரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த கோயில் மணிக்கோபுரம் உயரத்தைக் கூட்டுகின்றது. இந்த மணிக் கோபுரத்தின் பாணி லே பு கத்திட்ரலை ஒத்ததாகும். இதனில் கல்வளைவுகள் வெவ்வேறு வண்ணங்களுடன் பொருத்தப்படுள்ளன. புனித மைக்கேல் தேவாலயத்தை அடைவதற்கு அருமையான வேலைப்பாடுகளுடன் கூடிய இரு நூற்று அறுபத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெட்டு படிகள் பாறைநெடுகிலும் கட்டப்பட்டுள் ளன. இந்தப் படிகள் அனைத்தும் நல்ல அகல முடையதாகவும், நல்ல நிலையில் உள் ளதாகவும் இருக்கின்றன. படிகளைத் தொட்டுக் கொண்டு பாதுகாப்புச் சுவரும் உள்ளது. படிகளில் நடந்து செல்லும்போதே களைப்பாற்றிக் கொள்ளும் விதமாக ஓய்வு வசதிகள் ஆங்காங்கே ஏற்படுத் தப்பட்டுள்ளன. பாறையின் உச்சியிலிருந்து கீழே பார்க்கும் பொழுது கண்ணுக்கும் மனதிற்கும் இத மளிக்கின்ற ரம்மியமான காட்சி காணக் கிடைக் கின்றது. தேவாலயத்தைச் சுற்றி லும் அமைக்கப்பட்டுள்ள அகல மான பாதை, ஆலயத்தின் வெளிப்புறத் தோற்றத்திற்கு மெரு கூட்டுகின்றது, மேலும் இப்பாதை யிலிருந்து லே புவின் முழுத் தோற்றத்துக்கு சுற்றியிருக்கின்ற பசுமையான கிராமப்புறக் காட்சிகளும் தென்படுகின்றன. தேவாலயத்தைச்சுற்றிலும் பிறப் பையும் இரட்சிப்பையும், சித்திரிக்கின்ற வகையில் ஏராளமான 'மர மற்றும் கல் வேலைப்பாடுகள்' செய்யப்பட்டுள்ளன.



தேவாலயத்தின் சுவர்களில் இறந்தோர் உயிர்த் தெழுதல், ஒரு மாளிகையின் ஜன்னல்களின் பின் னேயிருந்து மக்கள் எட்டிப் பார்ப்பதைப் போன்ற அமைப்புடைய சுவர்க்கம், பிசாசுகள் மக் களைக் கொடூரமாகத் தண்டித்துக் கொண்டிருப்பதைப் போன்ற அமைப்புடைய நரகம் முதலியன மிக வும் அழகாகவும் தத்ரூபமாகவும் சித்திரிக்கப்பட் டுள்ளன.

★★★





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சாத்தானின் சவால்

- கவி. தாமஸ் ஆதன்

**ஒரு கிறிஸ்தவனைப் பார்த்து, சாத்தான் சவாலாய் ஒரு கேள்வி கேட்டான். "என்னை விட நீ அதிகமாக என்ன செய்கிறாய்?"**

"நான் தவறாமல் ஆலயத்ததுக்குச் செல்கிறேன். ஆனால் நீதான் ஆலயத்துக்கெல்லாம் செல்வதில்லையே" எனக் கிறிஸ்தவன் பதிலளித்தான்.

"அதுதான் இல்லை. நீங்கள் என்னை தவறாக எண்ணுகிறீர்கள். எப்போதும், யாரும் சபைக்கு வருமுன்னால், முதல் ஆளாக நான்தான் அங்கிருப்பேன். உண்மையைச் சொன்னால், நான் உங்கள் சபையின் கௌரவ உறுப்பினர்."

"நான் ஜெபம் செய்வதை நீ அறியாயோ?" என்றார் கிறிஸ்தவன்.

"உனக்கு ஒரு செய்தி சொல்கிறேன். நான் ஒரு போதும் ஜெபக் கூட்டங்களில் கலந்து கொள் ளத் தவறியத்தில்லை. நான் ஜெபக்கூட்டங்களுக்கு வருவதால் தான் சிலரது மனதின் கவனத்தைத் திருப்பி, சிலரைத் தூங்கவும் பண்ணுகிறேன்.

"நான் மருத்துவமனைகளில் உள்ள நோயாளிகளைப் போய்ச் சந்திக்கிறேனே" என்றான் கிறிஸ்தவன்.

"நானும் எல்லா மருத்துவமனைகளையும் சிறைச்சாலைகளையும் தவறாமல் சந்திக்கிறேன். ஏனென்றால் அங்குள்ளவர்களில் பலர் என்னால் வஞ்சிக்கப்பட்டவர்கள்."

"நான் வாரமொருமுறை உபவாசிக்கிறேன்" என்றார் கிறிஸ்தவன்.

"நீ வாரமொருமுறை தான் உபவாசிக்கிறாய், நானோ ஒவ்வொரு நாளும் உபவாசிக்கிறேன். அதனால் என்ன?" என்றான் சாத்தான் வெற்றிப் புன்னகையோடு.

கிறிஸ்தவனுக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியவில்லை. ஒரு நிமிடம் கண்களை மூடி ஜெபித்தான். பதில் வந்தது.

"பரிசுத்த ஆவியின் உதவியினால், நான் என்னையே வெறுத்து, என் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவைப் பின் தொடர்கிறேன்."

கிறிஸ்தவனுக்கு தன்னையறியாமலேயே கண்களிலிருந்து கண்ணீர் சொரிந்து. இதற்கு மேலும் சாத்தானுக்கு விவாதம் செய்ய வராததால், கிறிஸ்தவனை விட்டுப்போய் விட்டான்.

கர்த்தராகிய இயேசு என் மேய்ப்பர். அவரைத் தொடர்ந்து நான் பின் செல்வதால்தான், என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடர்கிறது (கலா.23:16).

"நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்" (1 கொரி. 15:57).

★★★




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழலையர் பகுதி

## வர்ணம் தீட்டுங்கள் குட்டீஸ்!







குழந்தைகளே, மோசஸ் அவர்களுக்கு சினாய் மலைக்கு செல்ல வழி காட்டுங்களேன்!



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**கிறிஸ்துவுக்குப்பின் ஏழாம் நுற்றாண்டில் இங்கிலாந்தில் கல்வியில் சிறந்து விளங்கிய பக்தருள் பரி. பீட் ஒருவர். இவர் கல்வியில் மேம்பட்டு விளங்கியதோடு, தினந்தோறும் அதிகநேரம் ஜெபத்தில் செலவிட்டு தூய வாழ்க்கை நடத்தி வந்தார். இவர் ஓயாமல் படித்தார்.**

ஓயாமல் எழுதினார். எனவே, இவரை நன்கறிந்த தொண்டரிலொருவர் இவர் ஜெபத்தில் அநேக நேரம் செலவழிப்பதையும் அத்துடன் பல நூல்களைப் படிப்பதிலும் எழுதுவதிலும் முனைந்திருப்பதைக் கண்டு அவருடைய ஓயா உழைப்புக்கு எவ்வாறு அவருக்கு பலன் கிடைக்கிறதென்று வியந்தார்.

பரி. பீட் கி.பி. 673ஆம் ஆண்டில் இங்கிலாந்தின் வடகிழக்கு பாகத்தில் ஜாரே என்னுமிடத்தில் பிறந்தார். அவருடைய ஏழாம் வயதில் பக்திமானான பரி. பெனட் என்பவரின் அரவணைப்புக்குள் வந்தார். சுந்தர்புரி அத்தியட்சகரான

# மறைநூல் புலவராய் திகழ்ந்த பரி. பீட்

*-A.R. இராஜரத்தினம்*

தியோடரஸ் என்பவரிடம் கிரேக்கு, லத்தீன் மொழிகளைப் பயின்றார். பதினேழாம் வயது வரை திருமறை நூல்களையும், பக்தி விருத்திக்கேதுவான பல நூல்களையும் வாசித்தார். எல்லாவற்றைக் காட்டிலும் பரி. வேதாகமத்தை வாசிப்பதிலேயே அவருடைய உள்ளம் தோய்ந்து கிடந்தது.

கி.பி 691ஆம் ஆண்டில் அவரை டீக்கனாகத் தெரிந்துக்கொண்டார்கள். 30 ஆம் வயதில் குருப் பட்டம் பெற்றார். கிறிஸ்தவ இசைப் பாடல்களைப் பாடுவது அவருக்கு அதிக ஊக்கமும், விடாமுயற்சியும் நிறைந்த பிறவி குணங்களாக அமைந்திருந்தன. தகுந்த பயிற்சியின்றி ஒருவரும் குருவாக பணியாற்ற துணிதலாகாது என்பது அவர் கருத்து. எனவே வேத வாசிப்பிலும் திருச்சபை பிதாக்கள் எழுதிய நூல்களைப் படிப்பதிலும், திருமறை பற்றிய விளக்க உரைகளைப் படிப்பதிலும், ஜெபத்திலும் நாட்களைச் செலவிட்டார்.

கி.பி. 702 ஆம் ஆண்டு இவர் குருப்பட்டம் பெற்றபின்பு, சபை மக்களுக்கு ஊழியம் செய்வ



தில் ஊக்கம் காண்பித்தார். கர்த்தருடைய ஜெபத்தையும், விசுவாசப் பிரமாணத்தையும் ஒவ்வொரு சிறு பிள்ளையும் கற்க வேண்டுமென்று வற்புறுத்தினார். இரவும் பகலும் தியானத்திலும், ஜெபத்திலும் செலவிட்டார். பக்தியில் பரவசப்பட்டு இவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெபம் செய்கையில் ஆனந்த கண்ணீர் விட்ட நாட்கள் அநேகம் உண்டு.

பல நூல்களைப் படிக்கும் பழக்கம் இவருக்கிருந்தது. கிறிஸ்து பிறந்த நாள் முதல் உலகச் சரித்திரம் ஒன்று எழுதினார். கி.பி. 731 இல் ஆங்கிலத் திருச்சபை சரித்திரத்தை விரிவாக எழுதினார். இது மிகச் சிறப்பு வாய்ந்தது. இவைகளைத் தவிர 45 நூல்களையும் இவர் எழுதினார். தாவீதின் சங்கீதங்களையும், புதிய ஏற்பாட்டையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். அவருடைய வேதாகம அறிவுரைகளை யாவரும் புகழ்ந்தனர்.

இங்கிலாந்திலேயே அக்காலத்திலுள்ள அறிஞரில் சிறந்தவர் என்று கருதப்பட்டார். அவருடைய வேத ஆராய்ச்சி திறமையையும், பரந்த அறிவையும், பன்மொழி புலமையையும், கேள்விப்பட்ட




பெரியோர் அவரைத் தம் நாடுகளுக்கு அழைத்தனர். அவரோ அதற்கு இணங்காமல் இறுதிவரை இங்கிலாந்தை விட்டு பிற நாடுகள் செல்லாமல் தம் நாட்டிலேயே பணியாற்றி வந்தார்.

பரி. பீட் இவ்வுலகத்தை விட்டு மறைவதற்கு முன் சில மாதங்களாக கடவுளிடம் போவதை எதிர்நோக்கியவராக வாழ்ந்தார். கிறிஸ்து பரலோகத்திற்கு செல்வதற்கு முந்திய நாளாகிய செவ்வாய்க்கிழமையன்று அவர் கூறின வார்த்தைகளையே பரி. பீட் தன்னைப் பார்க்கவரும் வாலிபர்களிடம் கூறி அவர்களைத் துரிதப்படுத்தி, ''கடவுள் எப்பொழுது என்னை எடுத்துக் கொள்வாரென்று நான் அறியேன். நான் எழுதி முடிக்க வேண்டிய விரிவுரைகள் ஏதாவது இருந்தால் அவைகளை எனக்குத் தெரிவியுங்கள்'' என்றார்.

அவர்களிலொருவர் ''எழுதி முடிக்க வேண்டிய அதிகாரம் ஒன்று இருக்கிறது'' என்று பதிலுரைத்தார். ஒரு வாலிபனிடம் பேனாவைக் கொடுத்து உட்கார்ந்து எழுது என்று அவரிடம் சொல்லி அந்த வாலிபனைக் கொண்டு அதை எழுதி முடித்தார். பின் தன் தலையை உயர்த்தி வைக்கும்படி தன் அருகிலிருந்தவர்களிடம் சொல்லி, தாம் ஜெபிக்கும் அறைக்கு நேராக தன் முகத்தைத் திருப்பி பிதாவுக்கும், குமாரனுக்கும், பரிசுத்தாவிக்கும் மகிமையுண்டாவதாக என்று சொல்லி மலர்ந்த முகத்துடன் தம் ஆவியை கடவுளிடம் ஒப்புக்கொடுத்தார்.

இங்கிலாந்து திருச்சபையின் விளக்கு என்று பரி. பானிபஸ் இவரைக் குறித்து எழுதியுள்ளார். இவர் தூய்மையான வாழ்க்கை நடத்தியதோடு மறைநூல் புலவராகவும் விளங்கினார். சென்னையில் உள்ள ஓர் உயர்தர பள்ளிக்கூடத்துக்கு ரோமன் கத்தோலிக்க சபையார் இவர் பெயரை சூட்டியிருக்கிறார்கள். இந்தியக் கிறிஸ்தவர்கள் நாட் காட்டிப்படி இந்தியக் கிறிஸ்தவ மக்கள் ஞாபகத்தில் வைக்கக் கூடிய பக்தரில் பரி. பீட் அவர்களும் ஒருவர். இப்பக்தனின் அடிச்சுவடிகளைப் பின்பற்ற இறைவன் நமக்குத் திருவருள் புரிவாராக.

## ஆண்டவரே உமக்கு நன்றி !

★ கடவுளே, உண்மையில் நீர் எனக்குச் செவி கொடுத்தீர்.

- உமக்கு நன்றி கூறுகிறேன்

★ கடவுளே, நாட்டின்மீது மிகுதியான மழை பொழியச் செய்தீர்.

- உமக்கு நன்றி கூறுகிறேன்

★ ஆண்டவரே, என் வலக்கையை ஆதரவாய்ப் பிடித்துள்ளீர்.

- உமக்கு நன்றி கூறுகிறேன்

★ கடவுளே, உமக்கு நன்றிசெலுத்துகின்றேன்; உம் பெயரைப் போற்றுகின்றேன்.

- உமக்கு நன்றி கூறுகிறேன்

★ கடவுளே, எல்லா நாட்டினரும் உமக்கே சொந்தம்.

- உமக்கு நன்றி கூறுகிறேன்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**இந்தியாவின் தமிழ்நாட்டில் நாகபட்டினம் மாவட்டத்தின் தலைநகரமான நாகப்பட்டினத்திற்கருகில் வேளாங்கண்ணி என்னும் சிறிய கிராமத்தில் அமைந்துள்ளது உலகெங்கிலும் போற்றப்படுகின்ற அருள் நிறை ஆரோக்கிய அன்னையின் ஆலயம்.**

நாடு, மதம், இனம், மொழி ஆகிய எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டு வணங்கப்படுகின்ற புண்ணியத் திருத்தலமாய் விளங்குகின்றது அன்னை வேளாங்கண்ணி ஆலயம். அனைவருக்கும் நோய் நொடிகள் நீக்கி ஆரோக்கியம் அளித்த காரணத்தால் ஆரோக்கிய மாதா ஆலயம் என்று வழங்கப்பட்டு பின்னர் கிராமத்தின் பெயரான வேளாங்கண்ணியையும் சேர்த்து 'வேளாங்கண்ணி ஆரோக்கிய மாதா' என அழைக்கப்பட்டார் அருள்மழை பொழியும் அன்னை.

அன்னையின் அதிசயத் தோற்றங்கள், அன்னையின் அருள்மிகுந்த அற்புத நிகழ்ச்சிகளின் அடிப்படையிலேயே இவ்வாலயம் தோற்றம் பெற்றது. முடமான சிறுவனை நடமாடச் செய்து, பால் கொண்ட பானை பொங்கி டச் செய்து, பொருள் கொண்ட சீமான் அன்னை யின் பொற்பாதங்கள் பணிந்து ஆலயம் எழுப்பச் செய்ததும், மாதாவின் கொடைகளாய் மாதாவின் பக்தர்களால் இன்றளவும் போற்றப்படுகின்றது. மாதா சிறுவனுக்குக் காட்சி யளித்த குளமானது இன்றும் 'மாதாகுளம்' என்று அன்னையின் அருள் நினைவோடு அழைக்கப்படுகின்றது.

மனிதர்களின் துன்பங்களை எல்லாம் கருணையுடன் போக்கி, கேட்டவர்க்கு கேட்ட கோரிக்கைகளையெல்லாம் எப்பொழுதும் நிறைவேற்றித் தந்து கொண்டிருக்கும் காரணத்தால் தான் காணிக்கை அருட்காட்சியகம் வருடத்திற்கு வருடம் நிறைந்து கொண்டிருக்கின்றது. ஆண்டவர் இயேசுவையே கருவில் சுமப்பதற்காகவே செயிண்ட் ஜோசம் மற்றும் செயிண்ட் அன்னே ஆகிய பெற்றோருக்கு புனிதமான புதல்வியாக அவதரித்தார் மாதா.

முந்தைய நூற்றாண்டுகளில் மாதா வின் அவதார தினமானது மிகப்பெரிய விழாவாக கிறிஸ் தவப் பெரு மக்களால்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டாடப்பட்டு வந்தது. ஆயினும் மீட்புச் சரித்திரத்தில், மாதாவின் அவதார நாள் மிக முக்கியமான நாளாகும். மாதாவின் சரியான பிறந்த நாள் கணக் கிடப்படவில்லையாயினும், போர்த்துக்கீசிய மாலுமிகள் கடல் சீற்றத் திலிருந்து அன்னை யின் அரு ளால் காப்பாற்றப் பட்ட பின்பு, நன்றிக் கடன்

## ஆண்டவரே உமக்கு நன்றி !

★ ஆண்டவரே, நீர் என்மீது காட்டிய அன்பு மிகப் பெரியது.

**- உமக்கு நன்றி கூறுகிறேன்**

★ ஆண்டவரே, நீர் எனக்குத் துணை செய்து ஆறுதல் அளித்துள்ளீர்.

**- உமக்கு நன்றி கூறுகிறேன்**

★ ஆண்டவருக்கு நன்றி உரைப்பது நன்றி.

**- உமக்கு நன்றி கூறுகிறேன்**



# அன்னையின் திருநாள்!

A.A.ராஜன்

செலுத்துமுகமாக அன்னைக்கு ஆலயம் அமைத்துக் கொடுத்த தினமான செப்டம்பர் எட்டாம் திகதியே மாதாவின் பிறந்த தினமாக எடுத்துக் கொள்ளப் பட்டுள்ளது.

இத்தினத்தை உலகம் முழுவதும் இருக்கின்ற மாதா பக்தர்கள், மாதா மக்கள் மேல் கொண்டுள்ள அன்பை நெஞ்சில் நிறுத்தி பக்தியோடு நினைவு கொள்கின்றார்கள்.

லட்சக்கணக்கான மாதா ஆலயங்களில் ஆண்டவர் இயேசுவின் தாய்க்கு பிறந்தநாள் விழா மிகச் சிறப்பாகச் செய்யப்பட்டாலும், வேளாங்கண்ணி ஆரோக்கிய மாதா ஆலயத்தில் சுமார் பத்து நாட்கள் இந்த விழா வெகு சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட், 29ஆம் திகதி கொடி யேற்றம் செய்யப்பட்டு, செப்டெம்பர் எட்டாம் திகதி தேர் பவனியுடன் அன்னை மாதாவின் பிறந்த நாள் மிகச்சிறப்பாகவும், கோலாகலமாகவும் நடைபெற்று முடிகிறது.

அன்னை பிறந்த இந்த அற்புதத் திருநாளில் இலட்சக்கணக்கில் பக்தர்கள் பங் கேற்று ஆசி பெற்று, மன அமைதியும், நோய் நீக்கமும், வாழ்வியல் முன்னேற்றங் களும் பெறுகின்றனர். உலகாளும் தாயை நாமும் பக்தியோடு வணங்கி வளம் பெறுவோமாக.

★★★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவன் நியாயந்தீர்ப்பார்

- சாம்சன் பால்



******

**மனுஷருடைய அந்தரங்கங்களைக் குறித்து நியாயத் தீர்ப்புக் கொடுக்கும் நாளிலே...**

ரோமர் - 2:16

தண்டர்போல்ட் என்ற மிகப் பெரிய கொள்ளைக்காரன் தன்னைப் பொலிஸார் பிடிக்கப் போகிறார்கள் என்று அறிந்ததும் தப்பியோடினான்.

இன்னொரு நாட்டுக்குச் சென்று தன்னை ஒரு டாக்டர் என்று கூறி வாழ்ந்து வந்தான். அவன் ஒரு நாள் மரித்தபோது அவன்தான் பொலிஸாரால் தேடப் பட்ட தண்டர் போல்ட் என்பது தெரிய வந்தது. கடைசிவரை அவன் தண்டனைக்குத் தப்பித்துக் கொண்டு வாழ முடிந்தது.

ஆனால் மரணத்துக்குப் பிறகு ஒவ்வொரு மனிதனும் தேவனால் ஒருநாள், நியாயந்தீர்க்கப் படும் வேளை வரும் என்று வேதம் சொல்கின்றது. உலகத்தில் எல்லாருடைய கண்களையும் மறைக்க இயலும்.

யாருக்கும் தெரியாமல் தவறுகளைச் செய்யவும், யாருக்கும் தெரியாமல் அதனை மறைக்கவும் வாய்ப்புண்டு. ஆனால் தேவனுடைய பார்வையிலிருந்து எதையும் நாம் மறைக்க முடியாது. உலகத்தில் பொலிஸையும், நீதிமன்றத்தையும் திறமையாக ஏமாற்றக்கூடிய பலர் உளர்.

வக்கீல்களின் திறமையான வாதங்கள் பல குற்றவாளிகளைத் தண்டனைக்குத் தப்புவித்தது உண்டு. ஆனால் தேவனுடைய நியாய சபையில் எதையும் துப்பறிந்து கண்டுபிடிக்கவோ, விசாரணை செய்து முடிவு செய்யவோ தேவையில்லை. அனைவருடைய மன சாட்சியும், உள்ளந்திரியங்களும் அங்கே தெளிவாக வெளிப்படும். அந்த நாள் நம்மை யாரும் காப்பாற்ற முடியாது.

எனவே இந்த பூமியில் வாழும்போது, நாம் மனிதர்களின் கண்களையோ, சட்டத்தின் கண்களையோ மறைத்துச் செய்த தவறுகளை ஒரு திறமையாகவோ, சாதனையாகவோ எண்ணக் கூடாது. யாரும் நம்மைக் கண்டுபிடிக்கவில்லை என்பதற்காகத் தப்பி விட்டதாக எண்ணிவிடக் கூடாது.

நியாயதிபதியாகக் கடுமையாக நியாயந் தீர்க்கப்போகிற ஆண்டவராகிய இயேசு இன்று நம்மைத் தண்டனையிலிருந்து தப்புவிப்பதற்காக அழைத்து மன்னிக்க விரும்புகிறார். அவரிடம் நாம் எதையும் மறைக்காமல் அறிக்கையிட்டுப் பாவ மன்னிப்பை உடனேயே பெற்றுக் கொள்வோமாக.

***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அமைதியின் தூதுவர் அசிசியார்

**அசிசியார் என்றாலே அமைதியின் தூதுவர் என்ற அலாதியான ஓர் எண்ணம் அனைவர் மனதிலும் எழும். செல்வக் குடும்பத்தில் தோன்றினார், செல்வாக்கோடு வளர்ந்தார், சேஷ்டைகள் பலவும் இளமையில் செய்தார்.**

ஆனால், ஆண்டவர் இயேசு அவரை முற்றிலும் தனது பாதைக்குக் கொண்டு வந்து விட்டார். ஏழ்மையைத் தனது எல்லாமாகத் தேர்ந்து கொண்டார். பெரும் பணக்காரக் குடும்பத்தில் பிறந்த அவர் ஒரு பிச்சைக்காரராகவே மாறி விட்டார். சொந்தம் சுற்றம் எல்லாம் இறைவன் தான் அவருக்கு. சூரியன் அவருக்குச் சகோதரன், நிலா அவருக்குச் சகோதரி, ஏன், இறப்பைக்கூடச் சகோதரியாய்ப் பாவித்து, வாஞ்சையோடு வரவேற்றார்.

சிலுவையில் அறையுண்ட இயேசுவையே அவர் தேர்ந்து கொண்டார். ஜெபமே அவருக்குச் சுவாசம், இப்பிரபஞ்சமே அவருக்கு இல்லம். படைப்பு முழுவதையும் தனது உறவாகக் கொண்டார். பரமனின் பிரசன்னத்தை எங்கும் கண்டார். தனது இதயத்தின் ஆழத்தில் அமைதியை அனுபவித்தார். ஆகவே, அகிலத்திலும் அடுத்தவரிலும் அந்த அமைதியைக் கண்டார்.

சொல்லொண்ணா வலியையும் வாதையையும் தனது உடலில் அணுஅணுவாக அவர் உணர்ந்தாலும் ஆனந்தமாக வாழ்ந்தார். ஆண்டவரை எப்போதும் வாழ்த்திக் கொண்டேயிருந்தார். அவரது வாழ்வே ஓர் அருமையான, ஆழமான அன்புச் செய்தியாகும், படைப்பின் மீது அவருக்கிருந்த நேசமே அவரது மாபெரும் மறைத்தூதுப்பணி ஆகும். இவ்வாறு இறைவன் அவரை அமைதியின் கருவியாகப் பயன்படுத்தினார். சுற்றுச் சூழல் பாதுகாவலர் இவர், இருப்பினும், எல்லா காலங்களுக்கும் எல்லா மக்களுக்கும் ஏற்ற புனிதர் இவர் என்றால் மிகையாகாது.

***





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# லீனாவின் வாழ்வில் கர்த்தர் செய்த அதிசயம்!

- எஸ். ஆகாஷ்

**பள்ளிக் கூடத்தில் சிறிய வகுப்புகளில் படிக்கின்ற காலத்திலிருந்தே சிலர் எந்த நேரமும் கடவுள் சிந்தனையோடும், ஆன்மீக விடயங்களில் ஈடுபாடு கொண்டவர்களாகவும் இருபார்கள்.**

இதுவும் ஒரு விதத்தில் கடவுளின் ஆசீர்வாதம் என்று தான் சொல்ல வேண்டும். இந்த பாக்கியம் பெற்றிட குடும்ப மற்றும் பள்ளிச் சூழ்நிலைகள் பெருமளவில் உதவுகின்றன. அது மட்டுமின்றி ஒரு சிறு உடல் ஊனத்தை அடைந்து விட்ட ஆண்களும் சரி பெண்களும் சரி தம்மை மற்றவர்களிடமிருந்து வேறுபடுத்திக் கொண்டு தமக்கு எல்லாமே கடவுள் தான் என்ற எண்ணத்தையும் உருவாக்கிக் கொண்டு மற்றவர் போல் தாமும் வாழ்வில் வெற்றியடைய வேண்டும் என ஆண்டவரை இடைவிடாது வேண்டிக் கொள்வார்கள்.

இப்படிப்பட்ட குணாதிசயத்தைக் கொண்டவள் தான் லீனா அன்னபுஷ்பம். சிறுவயதில் போலியோ நோயின் தாக்கத்தால் தனது வலது கால் சற்றே பாதிக்கப்பட்டு, நடக்கும்போது கொஞ்சம் காலை விந்தி நடக்கின்ற ஒரு நிலை. இவளுடைய தந்தை ஜோஸப்பும் தாய் மதலேனும் இலங்கையின் நீர்கொழும்பில் உள்ள ஒரு கிறிஸ்தவப் பள்ளியில் ஆசிரியர்களாகப் பணியாற்றுபவர்கள். இவர்கள் மூவரும் அடங்கிய இந்தக் குடும்பம் ஆண்டவர் இயேசு பிரானை எந்த நேரமும் மனதில் வைத்து ஆராதிக்கின்ற அருள் நிறைந்த கத்தோலிக்கக் குடும்பமாகும். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் இவர்கள் தேவாலயம் சென்று ஆண்டவனிடம் மனம் ஒன்றித்து தூய்மையான பிரார்த்தனைகளை தமக்காக மட்டுமல் லாது எல்லோருக்காகவும் சமர்ப்பிப்பார்கள். ஆசிரியர்களாக இருப்பதாலோ என்னவோ, லீனாவின் பெற்றோர் நல்ல விடயங்களைப் போதித்ததோடு மட்டுமல்லாது, ஆண்டவரிடத்தில் பிரார்த்தனையின் மனம் ஐக்கியமாவது. ஆண்டவரிடத்தில் தமது எல்லாவற்றையும் அர்ப்பணிப்பது. ஆண்டவரே் வாழ்வின் எல்லாமுமாக நினைப்பது ஆகியவற்றையும் லீனாவின் மனதில் பதியும்படி செய்தார்கள்.

தாம் உடல் ஊனமுற்றவர் என்பதையே ஒரு காரணமாக வைத்து சோம்பல் அடையாமல், பள்ளிக் கல்வியையும் கல்லூரியைப் படிப்பையும் நல்ல மதிப்பெண்களுடன் எடுத்து, நீர்கொழும்பிலுள்ள கணினி பயிற்சி நிறுவத்திலும் சேர்ந்து ''ஜாவா'' என்னும் படிப்பிலும் தேர்ச்சி பெற்று உள்ளூரிலேயே ஒரு தனியார் நிறுவனத்தில் நல்ல சம்பளத்தில் பணியில் அமர்ந்து விட்டாள் லீனா. ஆனால் இவற்றையெல்லாம் செய்து முடிப்பதற்கு லீனா அவளுடைய உழைப்பை மட்டுமே நம்பியிருக்கவில்லை. ''மனிதன் முன் மொழிகிறான். கடவுள் முடித்துக் கொடுக்கிறார்'' என்ற வார்த்தையில் அவள் முழு நம்பிக்கை கொண்டிருந்தாள். தாம் எடுத்துக் கொண்ட காரியங்கள் தடையின்றி நிறைவேற ஒவ்வொரு நிமிடமும் இயேசுவை நினைத்து பிரார்த்தனை செய்து கொண்டேயிருந் தாள். இவளுடைய தோழிகள் கூட ''நீ பேசாமல் கன்னியாஸ்திரியாகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போயிருக்ககலாம், எப்போதும் கடவுளையே ஸ்தோத்திரம் செய்து காலத்தைக் கழித்திருக் கலாம்'' என்று கேலி பேசினார்கள்.

இலங்கை சிலாபத்தில் பிறந்த, கொழும்பு நகரத்தில் வணிக நிறுவனம் ஒன்றில் நல்ல சம்பளத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த கிறிஸ் தோபர் வில்லியம்ஸ் என்பவருக்கு லீனாவைத் திருமணம் செய்து கொடுக்க இரு குடும்பத்தின ரும் பேசி முடிவு செய்தார்கள். மாப்பிள்ளை வீட்டாரை அறிமுகப்படுத்திய நண்பர் ஒருவர், மாப்பிள்ளை கிறிஸ்தோபரின் குடும்பத்தில், கிறிஸ்தோபருடன் பிறந்த இரண்டு இளைய சகோதரிகளும் திருமணம் முடித்து விட்டார்கள் என்றும் இந்தக் குடும்பமும் மிகுந்த 'இறை உணர்வு' கொண்டது தான் என்றும் சொல்லி யிருந்தார். இதற்கிடையில் மாப்பிள்ளையின் தந்தையிடமிருந்து லீனாவின் தந்தை ஜோஸப் புக்கு மூன்று முறை தொலைபேசி அழைப்பு வந்து அவர் சென்று பார்த்துப் பேசி வந்தார்.

## பொன்மொழிகள்

★ இயேசு கிறிஸ்து நம்மில் நண்பராக வாழ்ந்தால் நாம் எல்லாவற்றையும் தாங்கி கொள்ள முடியும். ஏனெனில் இயேசுவே நம்மைப் பலப்படுத்துவார்.

*புனித அவிலா தெரசா*

★ உன்னைப் புனிதப்படுத்து, அப்போது உன் சமூகத்தையும் புனிதப்படுத்துவாய்.

*புனித அசிசி பிரான்சிஸ்*

ஆனால் அவர்கள் எதற்காக அழைத்தார் கள் என்பதை லீனாவின் தந்தை லீனாவிடம் கூறிக் கொள்ளவில்லை.

ஒரு ஞாயிற்றுக்கிழமை மாலை லீனாவின் தாய் மதலேன் சமையல் அறையில் தனியாக அமர்ந்து கொண்டு கண்ணீர்சிந்தி அமைதியாக அழுது கொண்டிருப்பதைக் கண்டு அதிர்ந்து விட்டாள் லீனா. ''என்னம்மா இது பிளட் பிரஷர் உள்ள நீ இப்படி குமுறிக் குமுறி அழலாமா, என்னம்மா விடயம்'' என்று ஆறுத லாகக் கேட்டுக்கொண்டே அம்மாவின் அருகில் அமர்ந்தாள் லீனா.

மடை திறந்த வெள்ளம்போல் ஓவெனக் கதறிக்கொண்டு மகள் லீனா மீது சாய்ந்து விட்டாள் அம்மா மதலேன். பிறகு மீண்டும் வற்புறுத்திக் கேட்டபிறகு அழுதுகொண்டே கூறினாள். ''லீனா நீ ஊனமாயிருந்தாலும், படித்திருக்கிறாய். வேலைக்கு போய் கொண்டி ருக்கிறாய். என்பதால் மாப்பிள்ளை வீட்டார் சீர் சீனத்தி அதிகம் கேட்கமாட்டார்கள் என்று நானும் உன் அப்பாவும் உறுதியாக நம்பி னோம். அவர்களை அறிமுகப்படுத்திய நண்ப ரும் அப்படித் தான் கூறிக் கெண்டிருந்தார். உன் அப்பா மூன்று முறை நேரில் சென்று அவர்களைப் பார்த்துப் பேசி பார்த்துவிட்டார். உன் கால் ஊனத்தைச் சுட்டிக்காட்டி அவர்கள் மிகப்பெரிய அளவில் செய்முறை எதிர்பார்க்கி றார்கள் அம்மா.

அவர்களின் எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்வதென்றால் நாம் இப்போது குடியிருக்கும் இந்தச் சிறிய வீட்டை விற்றால்கூட முடியா தம்மா என்று கூறி விட்டு ''கிட்டத்தட்ட கல்யா ணமே நின்று போச்சும்மா'' என்று சொல்லி மீண்டும் ஆழ ஆரம்பித்தாள் மதலேன். ''இது என்னம்மா பைத்தியக்காரத்தனம், வீட்டை விற் பதாவது, சீர் செய்வதாவது. நீங்கள் பேசாமல் இருங்கள். எதைப் பற்றியும் கவலைப்பட வேண்டாம். நாம் ஆண்டவரை நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இதற்கெல்லாம் துயரப் பட்டால் என் இயேசுவை, இயேசுவின் பெரு மையை அவமதிப்பதாகும்'' என்று கூறிய லீனா அன்று இரவு ''முழு இரவு ஜெபத்தில் ஈடுபட்டு பிரச்சினை களுக்குத் தீர்வு தந்து தவுமாறு ''இயேசப்பாவிடம்'' மனம் உருகி வேண்டிக்கொண்டாள்.

லீனாவின் பிரார்த்தனை ஏசப்பாவால் முழுமையாகக் கேட்கப்பட்டு விட்டது. மறுநாள் மாலை அந்த அதிசயம் நிகழ்ந்தது. மாப் பிள்ளை பையன் கிறிஸ்டோபர் லீனாவின் வீட்டுக்கு மாலை சுமார் ஆறு மணிக்கு வந்து லீனாவின் தந்தையிடம்,

''கிறிஸ்துமஸ் தாத்தாவைப் போன்று தோற்றமளித்த ஒரு பெரியவர் நேற்றிரவு என் கனவில் வந்தார். 'பேராசைக்கு இடம் கொடாதே அது உன் நிம்மதியைக் கெடுத்து விடும், ஊனம் கொண்டவர்களிடத்தில் இரக் கம் கொள், அது உன்னை நன்றாக வாழ வைக் கும்'' என்று சொல்லி விட்டு உடனே மறைந்து விட்டார்''.

இந்த தெய்வீகமான அதிசயத்தை உங்களி டம் பகிர்ந்து கொள்ளவே நான் இங்கு வந் தேன். லீனாவை எந்தவித வரதட்சனையுமின்றி உடுத்திய உடுப்புடன் திருமணம் செய்து கொள்ள நான் முழுமனதாகச் சம்மதிக்கி றேன். இதில் எந்த வித மாற்றமும் இருக்காது'' என உறுதியாகச் சொல்லிவிட்டுக் கிளம்பிச் சென்றான். கிறிஸ்டோபர்.

இந்தச் செய்தி லீனாவின் வீட்டில் மூவரின் காதுகளிலும் தேனாய் விழுந் தது. மூவரும் மகிழ்ச்சிப் பெருமூச்சு விட்டார் கள். லீனா இ யேசப்பாவின் கருணையையும் அவர் விசுவாசி களின் மேல் கொண்டுள்ள அக்கறை யையும் நினைத்து ஆனந்தக் கண்ணீர் சொரிந் தாள். கஷ்டங்களை ஆசீர்வாதமாய் மாற்றுகின்ற வல் லமை ஆண்டவர் ஒருவருக்கே உண்டு என் பதை லீனா மீண்டும் ஒருமுறை அனுபவபூர்வ மாக உணர்ந்து கொண்டாள்.

★★★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைத்து ஜீவராசிகளையும் அன்புடன் நேசியுங்கள்!

**ஆலன் ஒரு நாய் வளர்த்தான்; அதன் பெயர் ரூஃபஸ். அது மிகவும் அன்பானது. நன்கு விளையாடும். எல்லோர்க்குமே அதனைப் பிடிக்கும்.**

அதற்குப் பல வித்தைகளை ஆலன் சொல்லிக் கொடுத்திருந்தான். அவன் பள்ளி சென்று திரும்பிவரும் வரை வீட்டு வாசலிலேயே அவனுக்காகக் காத்திருக்கும். வந்தவுடன் வாலை ஆட்டிக் கொண்டு அவன் மேல் தாவித்தாவி விளையாடும். ஆலன் வீட்டுப் பக்கத்திலிருந்த ஒரு பூங்காவில் அவன் விளையாடச் செல்வான். அப்போது ரூஃபசையும் கூட்டிச் சென்று அங்குள்ள ஒரு போஸ்ட்டில் கட்டி வைப்பான். பெரியவர்களும் அப்பூங்காவில் நடப்பார்கள். ஆரோன் என்னும் முதியவரும் ஒரு கைத்தடியோடு அப்பூங்காவில் நடப்பார். அவர் தனது தடியால் சிறுவர்களையும் விலங்குகளையும் விரட்டுவார், பயமுறுத்துவார். கட்டப்பட்டிருக்கும் ரூஃபசையும் அவரது தடியால் சீண்டுவார். அவரை யாருக்குமே பிடிக்காது. அவருக்கும் ரூஃபசைக் கண்டாலே எரிச்சல் வரும்.




ஒரு சனிக்கிழமை ஆலனும் அவனது நண்பர்களும் பூங்காவில் விளையாடிக் கொண்டிருந்தனர். ரூஃபஸ் போஸ்ட்டில் கட்டப்பட்டிருந்தது. ஆரோன் பூங்காவுக்குள் வந்தார். வழக்கம்போல தனது கைத்தடியால் ரூஃபசைச் சீண்டிப் பார்த்தார். ரூஃபஸ் எரிச்சலுற்றது. அவரைப் பார்த்து குரைத்தது. ஆனால், மீண்டும் ஆரோன் அதனைச் சீண்டினார். அவ்வளவுதான். ரூஃபஸ் தன் பலத்தையெல்லாம் கூட்டி, கட்டுக்களிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டது.

துரத்தியது, அவர் எடுத்தார் ஓட்டம். ஆலன் எவ்வளவோ முயன்றும் இயலவில்லை, பெரியவரின் பேண்ட்டைத் தன் கூர்மையான பற்களால் கௌவிக் கொண்டது. ஆரோன் கடினப்பட்டுத் தன்னை விடுவித்துக் கொண்டு, பூங்காவின் 'கேட்' வரையில் தலைதெறிக்க ஓடினார், இதைப் பார்த்த அனைத்துக் குழந்தைகளுக்கும் ஒரே குதூகலம்.

**பாடம்: விலங்குகளும் மனிதர்களின் நட்பையும் வெறுப்பையும் அடையாளம் காண்கின்றன, எனவே அவற்றின் மீது நாமும் கருணை காட்டுவோம்!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தன்னம்பிக்கையே மந்திரமானது

**இராஜா, அந்த வகுப்பிலேயே கடைசியாகக் கருதப்பட்டவன். ஆனால், காலாண்டுத் தேர்வில் அவன் தான் முதல் மதிப்பெண் பெற்றிருந்தான். அவனது வகுப்பு ஆசிரியர் அவனை வானளாவப் புகழ்ந்தார்.**

தேர்ச்சி அட்டையை எடுத்துக் கொண்டு, அன்று மாலை வீட்டுக்கு விரைந்தான். குதூகலமாக அவ னது தந்தையிடம் அதனை நீட்டினான். ஆனால், அவரோ, வழக்கம் போல், அலட்சியமாக அதனை வாங்கிப் பார்த்தார். அவரால் அந்த அதிசயத்தை நம்பவே முடியவில்லை. அவனது பெற்றோர் அவனைப் பெரிதும் பாராட்டினர்.

சிறிது நேரத்தில் அவனது அப்பாவை அழைத்துக் கொண்டு ஒரு முக்கியஸ்தரைக் காணச் சென்றான். அரை மணி நேரத்தில் அந்தப் பெரிய வீட்டின்முன் நின்று அழைப்பு மணியை அழுத்தினான். நீண்ட நெடிய தாடி மீசையுடன் கூடிய ஒரு சாமியார் கதவைத் திறந்தார். அவரைப் பார்த்தவுடன் இராஜா அவர் முன் சாஷ்டாங்கமாக விழுந்தான். அவரது பாதங்களைத் தொட்டு ஆசீர்வாதம் வாங்கினான். அவர் அவனை அப்படியே தூக்கிவிட்டார். ''ரொம்ப நன்றிங்க, சாமி, நானு ஏங்கிளாஸ்லேயே ஃபாஸ்ட் மார்க் வாங்கிட்டேன்'' என்று அவனது தேர்ச்சி அட்டையை அவரிடம் பவ்வியமாக நீட்டி னான். இராஜாவின் அப்பா அப்படியே உறைந்து போய் சுவாமி உள்ளே அழைத்துச் சென்றார். தேநீர் வழங்கினார். தனது அப்பாவை அவருக்கு இராஜா அறிமுகம் செய்தான்.



''அப்பா, சுவாமி சொல்லிக் கொடுத்த மந்திரத்தைச் சொன்னதுனால தான் நான் பாஸ் மார்க் வாங்க முடிந்தது'' என்றான். ''ரொம்ப நன்றிங்க, சுவாமி, நாங்க எவ்வளவோ முயற்சி செஞ்சோம். ஆனாலும் இவன் சரியா படிக்கல. ஆனால் ஒங்க மந்திரம் உண்மையிலேயே ஏம் பையன மாத்தியிருச்சு, அது சரி, அப்படி என்ன சக்திவாய்ந்த மந்திரம் அவனுக்குச் சொல்லிக்குடுத்தீங்க?'' இராஜாவின் தந்தை கேட்டார். அவன் பக்கம் திரும்பி, ''அவனையே கேளுங்க. ஐயா'' என்றார் சுவாமி.

''ஒவ்வொரு நாளும் காலைல எழுந்தவுடனும் ராத்திரி படுக்கப் போகும் போதும் 'நான் கெட்டிக்காரன், என்னால் நன்றாகப் படிக்க முடியும். நான் ஃபர்ஸ்ட் மார்க் வாங்குவேன்' அப்படின்னு சொல்லுவேன். தன்னம்பிக்கையோடு படிப்பேன்'' என்றான் இராஜா.

''ப்பூ... இதுவா மந்திரம்'' என்று இராஜாவின் அப்பா ஏமாற்றத்தோடு சொன்னார், ''உங்கள் மகன் திறமைசாலிதான், ஆனால், அவனிடம் தன்னம் பிக்கை தான் இல்லாதிருந்தது, அதைத் தான் நான் மந்திரமாக்கினேன்'' என்றார் சுவாமி.

''அது சரி, ஏம் மகனுக்குத் தன்னம்பிக்கை இல்லை என்று உங்களுக்கு எப்படித் தெரியும்'' என்று கேட்டார் இராஜாவின் அப்பா.

''ஒரு வகுப்பாசிரியருக்கு இதுகூடவா தெரியாது'' என்று தனது மேக்-அப் தாடி யையும் மீசையையும் அகற்றினார். ''சார், நீங்களா'' என்று இராஜா அதிர்ந்து போய் நின்றான்.

★★★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுளின் எல்லா குணங்களும் நமக்கும் வேண்டும்

- கொர்க்கோ மோசஸ்



### 14.1 இரண்டு உணர்வுகள்

**உடல் உணர்வு, ஆன்ம உணர்வு என்று இரண்டு உணர்வுகள் நம்மிடையே உள்ளன. ஐம்புலன்களாலும், மனத் தாலும் எழுவது உடல் உணர்வு.**

இந்த உணர்வில் நாம் நம்மை ஓர் உடலாகவும் அறிவாற்றல் கொண்ட மனதாகவும் கருதுகிறோம், உடல் உணர்வில் நாம் நம்மை ஆணாகவோ பெண்ணாகவோ நினைக்கிறோம்.

ஐம்புலன்கள் தரும் இன்பத்துக்காக அயராது உழைக்கிறோம். உடல் அழகு, வலிமை, திறமைகள், படிப்பு பதவி, சொத்து. சுகம், சொந்தம் முதலியவற்றில் நம்மை மற்றவரோடு ஒப்பிட்டுப் பார்த்து இவற்றில் நாம் மற்றவரைவிட உயர்ந்து இருப்பதாகத் தெரிந்தால் தற்பெருமை அல்லது கர்வம் கொள்கிறோம்.

குறைந்து இருப்பதாகத் தெரிந்தால் நம்மையே இழிவாக நினைத்துக் கொள்கிறோம் அல்லது மற்றவர்மீது பொறாமைப்படுகிறோம்.

உடல் உணர்வில், பயம், கோபம், ஏமாற்றம், வெறுப்பு, ஆசை, பொறாமை போன்ற வேறு பல உணர்ச்சிகளும் நம்மை ஆட்டிப் படைக்கின்றன.

நல்லவர் - கெட்டவர், நண்பன் - எதிரி, ஏழை - பணக்காரன், உயர்ந்த சாதி - தாழ்ந்த சாதி, வேண்டியவர் - வேண்டாதவர் என்றெல்லாம் தீர்ப்பிட்டு ஒருவர் ஒருவரோடு சண்டையிலும் போராட்டத்திலும் மன உளைச்சலில், நிம்மதியின்றி வாழ்ந்து கொண்டு வருகிறோம்.

தன்னையே மையமாகக் கொண்டு இந்த உலகம் இயங்குவதாகக் கருதி மக்களையும் படைப்புகள் அனைத்தையுமே தன் நலத்துக்காகப் பயன்படுத்திக் கொள்ள முயற்சி செய்கிறோம்.


இதற்கு நேர் மாறானது ஆன்ம உணர்வில் வாழ்வது. ஆன்ம உணர்வில் நாம் நம்மைக் கடவுளின் பிள்ளைகளாக, கடவுளைப் போலவே முடிவில்லா வாழ்வு கொண்டவர் என எண்ணுகிறோம்.

''தாயைப்போல் பிள்ளை'' என்ற சொற்படி நாம் கடவுளின் பிள்ளைகள் என்றால், கடவுளின் தன்மையே (சுபாவம்) நம் தன்மை, அன்பு, அறிவு, அழகு, ஆற்றல், ஆனந்தம், கருணை போன்ற கடவுளின் எல்லாக் குணங்களும் நமக்கும் உண்டு. நம் கவனம் எல்லாம் உடல் உணர்வில் வரும் சிற்றின்பத்தில் மூழ்கி இருப்பதால். இந்தக் குணங்களை நாம் அறிய முடிவதில்லை.

ஆன்ம உணர்வில் நாம் எல்லா மக்களையும், உயிரினங்களையும், படைப்புக்கள் அனைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தையுமே நமக்குச் சொந்தமானதாக நம்மோடு சேர்ந்த ஒரே பொருளெனக் கருதி அவைகளுக்கு அன்பு காட்டவும் அவர்கள் நலம் பேணவும் ஆர்வத்தோடு முன்வருகிறோம். உள்ளத்தில் உணரும் கடவுளின் ஆற்றலால் ஆக்க வேலையில் ஈடுபட்டு, ஒற்றுமை, அன்பு, சம உரிமைகள் கொண்டு விளங்கும் புதிய உலகைப் படைக்க முன்வருகின்றோம்.

ஆன்மா முடிவற்றது. உடலோ சிறிது காலத்துக்குப் பிறகு அழிந்துபோகக் கூடியது. அழிந்து போகும் உடல் உணர்வில் ஆழ்ந்திருப்பதால்தான் நமக்குத் துன்பங்கள் வருகின்றன.

உடலில் உறக்க நிலையில் இருக்கும் ஆன்ம உணர்வைத் தட்டி எழுப்பி என் உண்மை அடையாளம் உடலோ, மனதோ அல்ல, ஆன்மாதான். நான் கடவுளின் பிள்ளை, எனக்கு எந்தக் குறையும் இல்லை.

மாறாக, முழு நிறைவில் நான் இருக்கின்றேன். அனைத்து மக்களும் படைப்புக்கள் எல்லாமே எனக்குச் சொந்தம் என்ற உணர்வுக்கு நாம் வந்தால் நம் துன்பம் எல்லாம் நீங்கி இறைவனின் இன்ப நிலையை அடைவோம்.

★★★

# 'தலைமைக்குத் தயாராகு...!'

**இயேசு ஆண்டவர் உயிர்த்தெழுந்த பின் தமது அப்போஸ்தலர்களுக்கும் சீடர்களுக்கும் காட்சி கொடுத்தார்.**

ஏற்கனவே அவர் போதித்திருந்தவற்றில் அவர்களை இன்னும் உறுதிப்படுத்தினார்; அவர்களது அச்சத்தை அகற்றினார். பேதுரு இயேசுவின் முதன்மைச் சீடர். அவருக்கு உயிர்த்த இயேசு நேரில் தோன்றினார். அவரைத் தமது திருச்சபைக்குத் தலைவராக நியமித்தார்.

விண்ணிலும் மண்ணிலும் பாவங்களை மன்னிக்க அனைத்து அதிகாரங்களையும் அவருக்கு ஆண்டவர் இயேசு வழங்கினார். ஆனால் ஆண்டவர் பேதுருவின் தலைமைக்கு ஒரே ஒரு முக்கிய நிபந்தனை மட்டும் விதித்தார்;

"எனது ஆடுகளைக் கவனி, அவற்றுக்குச் சேவை செய்". ஆண்டவர் இயேசு முன்பே அதற்கு உதாரணமாகத் திகழ்ந்தார். பலருக்கும் பணிவிடை புரிந்தார்.

பாடம்:
தலைமை ஏற்பது பணிபுரியவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேராசிரியர்
எஸ்.ஜே.யோகராசா
உளநல ஆலோசகர்
(அன்பின் பரிணாமச் சங்கம்)

அங்கம் 02

மனம் மாறுங்கள்

# உங்கள் மகிழ்ச்சி நிறைவு பெறட்டும்

நாம் நுகர்வுக் கலாசாரத்தில் மத்தியிலேயே வாழ் கிறோம். பணம் இருந்தால் போதும், மதிப்பு இருந் தால் போதும்,

பேரும் புகழும் இருந்தால் போதும் என்று ஓடி ஓடி அலைகிறோம். ஏன்? மகிழ்ச்சி வந்து விடு மென்று நினைக்கிறோம். குறுக்கு வழிகளில் பணம் சம்பாதிக்க முயலுகிறோம். மிக விரைவாகப் பணக்காரர்களாக மாறவே ஆசைப்படுகின்றோம்.

எதிலும் போட்டி பிள்ளைகளது கல்வியிலிருந்து எல்லாமே போட்டிக்காக அடுத்தவரோடு ஒப்பிட்டு ஒப்பிட்டே எதையும் செய்ய முயல்கிறோம்.

கொடுப்பதில் இன்பம் காணாது எடுப்பதிலேயே இன்பம் காண்கிறோம். இப்படிப்பட்ட சூழலில் வாழும் பொழுது துன்பம், வேதனை, தோல்விகள் வரும் போது சவாலாக எடுக்காமல் பயந்து விடு கிறோம், சகுனம் பார்க்கிறோம். சாஸ்த்திரம் பார்க் கிறோம். செய்வினை சூனியங்களையும் சாத்தா னையும் நம்பி ஆயிரக்கணக்கில் பணம் செலவிடு கிறோம்.

''தன் புதல்வனை அல்லது புதல்வியைத் தீ மிதிக்கச் செய்கிறவனும் குறி சொல்கிறவனும் நாள் பார்க்கிறவனும் சகுனங்களை நம்புகிறவனும் சூனியக்காரனும் மந்திரவாதியும் ஏவி விடுகிற வனும் மாய வித்தைக் காரனும் இறந்தவர்களிடம் குறி கேட்கிறவனும் உங்களிடையே இருத்தலா காது. ஏனெனில் இவற்றையெல்லாம் செய்கிறவன் ஆண்டவருக்கு அருவருப்பானவன். இப்படிப் பட்ட அருவருப்பான செயல்களின் நிமித்தம் ''உன் கடவுளாகிய ஆண்டவர் உன் முன்னிலையினின்று அவனைத் துரத்தி விடுவார்'' (இணைச்சட்டம் 18:10 - 12)

நாம் ஏன் இவற்றைச் செய்கிறோம்? எதிர்காலத் தைப் பற்றி அறிய ஆசைப்படுவது ஏன்? நாள், நேரம் பார்ப்பது ஏன்? எதிர்காலத்தில் சந்தோஷ மாக வாழவே.

ஆனால் ''இறைவனின் அன் பின் நிலைத்திருங்கள்'' என்று கூறுகிறார். எனது வாழ்வில் பக்தி யுள்ள கிறிஸ்தவனாக வாழ்ந்தேன். வாழ்வின் நிம் மதியை சந்தோஷத்தை அனுபவிக்க ஓடி ஓடி அலைந்தேன். உண்மையான நிம்மதி சந்தோஷம் கிடைக்கவில்லை.

''பெரும் சுமை சுமந்து, சோர்ந்திருப்பவர்களே எல்லோரும் என்னிடம் வாருங்கள். நான் உங்க ளுக்கு இளைப்பாறுதல் தருவேன்'' (மத்தேயு 11:28)

மறைநூல் அறிஞரும் பரிசேயரும் பல்வேறு சமயக் கடமைகளைத் திணித்து மக்களுக்குப் பல சுமைகளைக் கொடுத்தனர். அன்பை மையமாகக் கொண்டு வாழ்ந்த இயேசுவின் அழைப்பு என் னைக் கவர்ந்தது. இயேசுவின் முதல் பிரசங்கத்தில் கூறிய வார்த்தைகள் என்னைச் சிந்திக்க வைத்தன.

''மனம் மாறுங்கள் ஏனெனில் விண்ணரசு நெருங்கி விட்டது'' (மத்தேயு 4: 17)

மக்கள் எதிர்ப்பார்த்துக் கொண்டிருந்த இறை யாட்சி அல்லது மகிழ்ச்சியான வாழ்வு வந்து விட்டது. அது எனது மனதில் நம்பிக்கையை ஊட் டியது. காரணம் எமது நாட்டில் அரசியல், பொரு ளாதாரம், சமூக, சமய அடிமைத்தனங்களால் எல் லோரும் வேதனையை அனுபவித்த காலம். 1980 ஆம் ஆண்டிலிருந்து சிந்திக்கத் தொடங்கினேன். சமுதாயத்தில் விடுதலையைப் பெற்றுத்தர இயக் கங்கள் பல இருந்தன. நான் அவற்றில் சேராது இயேசுவின் போதனைகளால் கவரப்பட்டேன். எனக்குள் மன நிலையில் வேரோட்ட மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதை உணர்ந்து கொண்டேன். நான் என்னைப்பற்றி இறைவனைப்பற்றி எனது குடும்பத்தில் மற்றவர் களைப் பற்றி ஏனைய இன, மத, குல, பிரதேச மக் களைப்பற்றி இருந்த அடிப்படையான மனப்பான் மையை மாற்ற வேண்டும் என்பதை உணர்ந்து கொண்டேன்.

அதற்கான உதவியை இயேசுவிடமே பெற வேண்டும் என்பதைத் தீர்மானித்தேன். அதற்காக உயிர்த்த இயேசுவைச் சந்திக்க முயற்சி எடுத்தேன்.


**தொடரும்....**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இந்த இதழ் எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் (சிலோன்) லிமிட்டெட்டாரால் கொழும்பு-14, கிராண்ட்பாஸ் வீதி, 185ஆம் இலக்கத்தில் 2012 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org